தொண்டை மூலம் தொத்து நோய் பரவாமல் பாதுகாருங்கள்

தொண்டையில் எரிச்சலோ அல்லது கரகரப்பு உணர்ச்சியோ ஏற்பட்டால் பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகளை உட்கொள்ளுங்கள். தொத்து நோய் பரவாமலிருக்க சிறந்த வழி.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி சுவாசத்துடன் கலந்து சுவாசப் பைக்குச் செல்கின்றது. தொண்டையிலுள்ள புண்பட்ட பாகங்களை பெப்ஸ் குணப்படுத்தி, மற்றும் கிருமிகள் மூலம் மார்பு சுவாச பைக்கு உபத்திரவம் நேராமல் பாதுகாக்கும்.

எல்லாமருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச் மாத்திரைகள்.

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்

பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன

"லண்டன் நியூ கோல்டால்" இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டவை. இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம். இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. பொதுமக்களும, பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிறார்கள். இந்த கெமிகல் தங்கத்தின் நிறம் மாறாமலிருப்பதால் இதிலிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோலா "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளையல்கள் 2ஜதை தோடுகள் 2மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும். இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத்தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக்இனும்

London Commercial Co.,

(EAB) Post Box 165 (S.M.M.) LAHORE (India)

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி. வைத்தியசாலை, பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ. 2. நேரில் ஒரு ஜாதகம பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

டாம்கோ சரக்குகள்

ஏராளமாக இருக்கின்றன

உண்மையில் குறைவொன்றுமில்லை.

யாவரும் விரும்பும் வாஷிங் ஸோப்புகள் ஹமாம், மற்று டாய்லெட் ஸோப்புகள் கிடைப்பது வெகு அரிதாய்விட்டதென் நேயர்களிடமிருந்து எங்களுக்கு புகார்கள் தினம் வந்து கொண்டிருக்கின்றன. ஆனல் இதற்கு காரணம் சில வியாபாரிகளும், வாடிக்கைக்காரர்களும் அவர்களுக்கு உண்மையில் தேவையான அளவுக்கு மிஞ்சி சரக்குகள் ஸ்டாக்கு செய்து வருவதால் மற்றவர்களுக்கு கிடைக்காமல் போய் விடுகிறது.

எங்கள் ஸோப்புகளுக்கிருக்கும் கிராக்கி இவ்வளவு அவ்வளவல்ல. வேண்டுமென்றால் தொழிற்சாலையிலிருந்தே சரக்குகளை எளிதில் விற்று, விற்பனையாட்கள் சம்பளம், ரயில் கூலி, மற்ற கூலிச் செலவுகள் யாவையும் மிச்சப்படுத்த முடியும். ஆனல் நாங்கள் அப்படிச்செய்ய முயற்சிக்காமல், ஏராளமான விற்பனையாட்களை நியமனம் செய்து, நம் தேசத்தில் எல்லா இடங்களிலும் ஒன்றுபோல நியாயமாகவும், ஒழுங்காகவும் எல்லோருக்கும் எங்கள் ஸோப்புகள் கிடைத்துவருமாறு செய்திருக்கிறோம். அவர்களும் இயன்ற மட்டும் அதை நிர்வகித்து வருகிறார்கள். தங்களுக்கு அவசியம் தேவையான அளவிற்குமேல் வாங்கி மற்றவர்களுக்கு கிடைக்காமல் செய்யாதிருக்க எங்களுடைய வாடிக்கைக்காரர்களிடம் ரொம்பவும் வேண்டிக் கொள்ளுகிறோம்.



தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்.

டாடாபுரம் & பம்பாய்.

F. S. 3162.

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு

விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம் முதல் பாகம் 2 0 0

இரண்டாம் பாகம் ரூ. 2. மூன்றும் பாகம் ரூ. 2.

(மூன்று பாகங்களும் ஒரே தடவையில் வாங்கும் சந்தாதாரருக்கு ரூ. 4.)

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 46 13-12-'42 Price 2 Annas.

சென்றவார நிகழ்ச்சிகள்

★

சிட்டகாங்கில் எதிரி குண்டு வீச்சு

சென்ற 5-ந்தேதி மாலை சில ஜப்பானிய வெடி குண்டெறியும் விமானங்களும், யுத்த விமானங்களும் சிட்டகாங் பிரதேசத்தைச் சிறிது நேரம் தாக்கின. பிரிட்டிஷ் விமானங்கள் எதிரி விமானங்களை வழிமறித்துத் தாக்கின. இதன் விளைவாக குண்டுகளில் பெரும்பாலும் ஜலத்தில் விழுந்தன. எதிரி விமானங்கள் துரத்தப்பட்டன. சுட்டு வீழ்த்தப்பட்ட எதிரி விமானம் ஒன்று தீப்பிடித்து எரிந்துகொண்டே கீழே விழுந்தது. மற்றவை அநேகமாக நாசமடைந்தன. சேதம் மிகக் குறைவு.

* * * *

சென்னையிலும் சில்லரைத் தட்டு

சென்னையிலும் காலணா சில்லரைத் தட்டு அதிகமாக இருந்து வருகிறது. மார்க்கட்டுகளிலும், டிராம், பஸ் முதலியவற்றிலும் இது கடுமையாகவிருக்கிறது. தென்னிந்திய ரயில்வே அதிகாரிகள் இதைச் சமாளிக்க டிக்கட்டுகளில் காலணா யூனிட்டை எடுத்துவிட்டனர். அதாவது காலணா அல்லது முக்காலணா சொச்சமாக முடியும் கட்டணங்களை அத்துடன் காலணாசேர்த்து அரையணா அல்லது ஒரு அணாவாக வசூலித்து வருகின்றனர்.

* * * *

சென்னை மாகாணத்துக்கு ரூ. 7 லக்ஷம் நிலவரி வஜா

சென்ற சில வருஷங்களைப் போலவே இந்த வருஷத்திற்கும் சென்னை மாகாணத்துக்கு ரூ. 75 லக்ஷம் வரையில் நிலவரியில் வஜாச் செய்வதென்று சர்க்கார் முடிவு செய்து உத்தரவிட்டிருக்கின்றனர். விலைவாசிகள் உயர்வு காரணமாக இவ்வித வஜா செய்வது அவசியமில்லையென்று சர்க்கார் கருதியபோதிலும், விவசாயிகளுக்கு உதவுவதற்காக இந்த வருஷமும் தொடர்ந்து வஜாச் செய்திருப்பதாக உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

* * * *

காகிதத்துக்குப் பதில் வாழையிலை

இக்காலத்தில் விலை அதிகரிக்காத சரக்கேயில்லை. என்ன விலை கொடுத்தாலும் தேவைக்குத் தக்கவாறு காகிதம் கிடைப்பது கடினம். காகிதப் பஞ்சம் அதிகமாகவிருக்கிறது. விலையும் அளவுக்கு அதிகமாக ஏறி விட்டது. அதனால் அஸ்ஸாமில் ஆரம்பப் பாடசாலைகளில் காகிதத்துக்குப் பதிலாக வாழையிலையும் நாணல் பேனாக்களும், உபயோகிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். அங்கு கல்வி மந்திரி இந்த ஏற்பாட்டை அங்கீகரித்திருக்கிறார்.

* * * *

மகாத்மாவின் அந்தரங்கக் காரியதரிசி கைதி

மகாத்மாஜியின் அந்தரங்கக் காரியதரிசியான மிஸ் சூர்ஷித் பென் சென்ற 4-ந்தேதி தானாபாத் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். மிஸ் பென் காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் பேத்தியாவார்.

* * * *

ஒட்டகங்கள் மீது ரயில் மோதியது

பின்னா-கோட்ரா ஸ்டேஷன்களுக்கிடையே ரயில்பாதைப் பக்கத்தில் ஒட்டகங்கள் மந்தையாக மேய்ந்துகொண்டிருந்தன. அச்சமயத்தில் அபாரவேகத்தில் அப்பிரிவில் சென்ற ரயில் வண்டியொன்று ஒட்டகங்களின் மீது மோதியது. 13 ஒட்டகங்கள் இறந்தன. 2 வண்டிகள் பாதையை விட்டிறங்கின.

* * * *

லின்லித்கோவுக்குப் பதவி நீடிப்பு

வைஸ்ராய் லின்லித்கோ பிரபு பிரிட்டிஷ் சர்க்கார் வேண்டுகோள்படி இன்னும் 6 மாதம் உத்தியோகத்திலிருக்க இணங்கியிருக்கிறார். அதாவது அவர் 1943 அக்டோபர் மாதம் வரை பதவியில் இருப்பார். பிரிட்டிஷ் சர்க்கார் அவரிடம் தங்களுக்குப் பெரிதும் நம்பிக்கையிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

புதிய பம்பாய் கவர்னர்

ஸர் ரோஜர் லம்லிக்குப் பதிலாக பம்பாயின் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள டி. ஜே. கால்வில்லி.

— என். பி

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

காமன்ஸ் சபை ரகசியக் கூட்டம்

வட ஆப்பிரிக்காவிலுள்ள அரசியல், யுத்த நிலைமை குறித்தும், அட்மிரல் டார்லான் சம்பந்தமாகவும் கூடிய சீக்கிரம் காமன்ஸ் சபையின் ரகசியக் கூட்டத்தில் ஓர் அறிக்கை விடப்படும் என்று அந்நியநாட்டு மந்திரி மிஸ்டர் ஈடன் காமன்ஸில் தெரிவித்தார். மேற்படி விஷயமாகக் காமன்ஸ் ரகசியக் கூட்டத்தில் வியாக்யானங்கள் செய்வதால் பொது ஜனங்களிடையே அமைதியின்மை ஏற்படக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டதை மிஸ்டர் ஈடன் மறுத்தார். தற்போது தாம் பஹிரங்கமாக எவ்வித அறிக்கையும் விடுப்பதற்கில்லையென்று அவர் தெரிவித்தார். காலதாமதமாகாமல் பார்த்துக்கொள்வதும் உயிர் தப்பிக்கச் செய்வதுமே சர்க்காரின் முக்கியமான கவலையென்று அவர் உரைத்தார்.

* * * *

ஸன் பிரான்ஸிஸ்கோவுக்கு அருகே ஜப்பானியக் கப்பல்படை

ஸன் பிரான்ஸிஸ்கோ பகுதியிலுள்ள கடற்படையினர் அனைவரும் உடனே தங்கள் கப்பல்களுக்குத் திரும்ப வேண்டுமென ஸன் பிராஸ்ஸிஸ்கோ ரேடியோ மூலம் ஒரு உத்தர்வு வெளியாயிற்று. கலிபோர்னியக் கரையிலிருந்து 450 மைல் தூரத்தில் அடையாளந் தெரியாதபடி ஏராளமான கப்பல்கள் திரண்டிருப்பதாகத் தகவல் கிடைத்ததென்றும் ஆனால், அந்த ஸ்தலத்தைத் தேடிப் பார்த்தபோது கப்பலெதுவும் காணப்படவில்லையென்றும் யு. எஸ். கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

* * * *

நாஸிகளை விட ஜப்பானியர் அதிக அபாயகரமானவர்கள்

நியூஸிலந்து பிரதம மந்திரியான மிஸ்டர் பீடர் பிரேஸர் "ஜப்பானியர் பல அம்சங்களில் ஜெர்மனியரைவிட இன்னும் அதிக அபாயகரமானவர்கள். ஜப்பானுடன் நாம் நடத்தும் யுத்தம் மிகக் கடினமான, தீவிரமான போராட்டமாயிருக்கும். இவ்வுண்மையை வட ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உள்ளவர்களை விட தென் பஸிபிக்கிலுள்ள நாம் இன்னும் தெளிவாக உணர்ந்திருக்கிறோம்" என்று கூறினார்.

* * * *

பிரான்ஸிலிருந்து இத்தாலிக்கு நாஸி யுத்த விமானங்கள்

வியாழனன்று இரவு ஸ்விட்ஸர்லந்திலுள்ள பெர்ன், நியுசேடல் முதலிய இடங்களில் விமானப் படையெடுப்பு எச்சரிக்கை ஒலித்தது.

பிரான்ஸிலுள்ள ஜெர்மன் யுத்த விமானங்கள் இத்தாலிக்கு கொண்டு போகப்படுவதே இதற்கு காரணமாயிருக்குமென லண்டனில் எண்ணப்படுகிறது.

* * * * *

'நெருக்கடியான கட்டம் நெருங்குகிறது'-சர்ச்சில்

மிஸ்டர் சர்ச்சில் சமீபத்தில் பிராட்போர்டில் பேசுகையில், போராட்டம் மிக நெருக்கடியான கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

வட ஆப்பிரிக்காபற்றி அவர் பேசுகையில், பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் இன்னும் 20 மைல் முன்னேறியாக வேண்டும். ஆனால், அந்த சொற்ப தூரத்தைக்கடந்து அச்சுப்படைகளை கடல் நோக்கி விரட்டுமுன் மிகத் திறமையான போராட்டம் நடக்கும். இறுதியான முடிவு பற்றி எனக்குச் சந்தேகமில்லை. ஆனால், வெற்றி நமக்கு எளிதாகக் கிடைத்துவிடுமென்று நீங்கள் எண்ணக்கூடாது? என்று தெரிவித்தார். மிஸ்டர் சர்ச்சில் பேசியதன் சாரமாவது:—நாஸி எதிர்ப்பை நாம் இன்னும் தகர்க்கவில்லை. நமது முழு சக்தியையும் நாம் திரட்டி போராட வேண்டும்.

வட ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள் அட்லாண்டிக் கரையிலிருந்து சுமார் 900 மைல் தூரம் (மத்திய தரைக் கடலில் மத்தியப் பகுதிவரை) முன்னேறியிருக்கின்றன. ஆனால் அப்படைகள் இன்னும் [illegible] மைல் தூரம் முன்னேறியாக வேண்டும். அதைக் கடக்குமுன் அங்கு கடும் போர் நடக்கும் முடிவைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லை. வட ஆப்பிரிக்காவில் மறுபுறத்திலும் (எல் ஆகியா பகுதியிலும்) தீவிர போர் நடக்கும்.

நமது எதிரிகள் மிகச் சக்தி வாய்ந்தவர்கள். அவர்களிடம் லக்ஷக்கணக்கான ஸோல்ஜர்களிருக்கின்றனர். மேலும் அவர்கள் ஏராளமான கைதிகளை அடிமைகளா உபயோகித்து வருகிறார்கள். அவர்கள் மிகச் செழிப்பான பூமிகளை வென்று தங்கள் வசம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். போராட்டத்தை நீடிக்கச் செய்து நமக்கும் நமது நண்பர்களுக்கும் பிளவேற்படுமாறு செய்யலாமென்றும் தாங்கள் பறிக்கும் ஜனநாயக நாடுகள் அலுத்துப் போய் போராட்டத்தைக் கைவிட்டுவிடுமென்றும் நாஸிகள் எதிர்பார்க்கின்றனர். அவ்வெண்ணம் பலிக்காதென நாம் நிரூபிப்போமாக".

* * * *

ஹிட்லர் பிரான்ஸைப் பழி வாங்குகிறார்

மார்ஷல் பிடெயினின் அதிகாரங்கள் அனைத்தும் பிடுங்கப்பட்டு விட்டதென்றும், விச்சியில் லவாலின் தலைமையில் ஜெர்மனியுடன் பூரணமாக ஒத்துழைக்கக்கூடிய ஒரு சர்க்கார் அமைக்கப்பட்டு வருவதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது.

ராய்ட்டரின் அரசியல் நிருபர் அறிவிப்பதாவது:—

ஸ்ரீமதி சாந்தாவின் பரத நாட்டியம்

இம்மாதம் 18-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 6-15 மணிக்கு மியூஸியம் தியேட்டரில் பரத நாட்டியமாடுவார். பந்தநல்லூர் வித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை நேரிடவிருந்து பக்க வாத்தியங்களைக் கவனித்து கச்சேரியை நடத்தி வைப்பார். பம்பாய் ஸ்ரீமதி லலிதா வெங்கட்ராமன் அவ்வமயம் பாடுவார். ஸ்ரீமதி சாந்தா, ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பரத நாட்டியப் பயிற்சி பெற்றவர்.

எதிர் பார்க்கப்பட்டதுபோல் ஹிட்லர் டூலான் நிகழ்ச்சியை முன்னிட்டுப் பழிவாங்கி வருகிறார். முதலில் பிரஞ்சுக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பிரபல ஸ்தா[illegible] மிஸ்டர். எடோர் [illegible] கைது செய்[illegible]ட்டிருக்கிறார்.

பிரஞ்சுத் தொழில[illegible]ளர் சபையின் மாஜி தலைவரான மிஸ்டர் ஜோஹாக்ஸும் சிறையிடப்பட்டு விட்டார்.

பொது உடமை[illegible]சவேலை முதலியவற்[illegible]டுபடுவோர் ராணுவக் கோர்ட்டுகளில் விசாரிக்கப்படுவரென்றும் துப்பாக்கிகள் வைத்துக்கொண்டிருப்போருக்கும் கைதிகள் தப்ப உதவி செய்வோருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுமென்றும் அறிக்கைகள் [illegible]பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மன் ரகசியப் போலீஸ் தலைவர் ஹிம்லரே இதற்குக் காரணபூதரெனச் சொல்லப்படுகிறது.

வியான்ஸிலும், டூலானிலும் டிகால் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏராளமாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

ஜெர்மன் ஆக்கிரமிப்பு துருப்புகளுக்கு சப்ளை செய்யும் பொருட்டு ஜனங்களுக்கு அனுமதிக்கப்படும் உணவில் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது.

ஜெர்மனிக்கு பிரஞ்சுத் தொழிலாளரை அனுப்புவது இன்னும் துரிதமாக நடந்து வருகிறது.

போர் நிறுத்த உடன்படிக்கையின்படி அனுமதிக்கப்பட்டிருந்த பிரஞ்சு ராணுவப்படை கலைக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக டோரியட், டீட் இவர்களது கோஷ்டிகளைக் கொண்டு ஒரு புதுப்படை அமைக்கப்பட்டு வருகிறது.

* * * * *

ஹிட்லருக்கு பிராங்கோ எச்சரிக்கை

மொராக்கோ ரேடியோ அறிக்கை:—ஆப்பிரிக்காவிலுள்ள அச்சுப்படைக்கு உதவுவதற்காக, ஜெர்மன் படை ஸ்பானிய எல்லையைக் கடக்க முயன்றால், அதை தாம் எதிர்க்கப் போவதாகப் பிராங்கோ ஹிட்லருக்கு எச்சரித்திருக்கிறார். அதிகாரிகள் வட்டாரத்தில் வெளிப்பட்ட ரகசியத்திலிருந்து, ஜெர்மன் ராணுவ அதிகாரிகளது உத்தேசம் பற்றிய விவரங்களை சமீபத்தில் ஜெர்மன் தூதர்கள பிராங்கோவுக்கு விளக்கியதாகத் தெரிகிறது.

* * * *

வட ஆப்பிரிக்க யுத்தம்

ஆப்பிரிக்காவில்; வட பாகத்திலும், மேற்குப் பகுதியிலும் இறங்கிய நேசப்படைகள் அதிவேகமாக முன்னேறின. ஆனால் டியுனிஸியாவை அடைந்த பின் அவற்றின் முன்னேற்றத்தின் வேகம் காணவில்லை. எதிரிகள் தீவிரமாகத் திருப்பித் தாக்குகிறார்கள்: ஜிடிடா போன்ற ஸ்தலங்களைத் திரும்பக் கைப்பற்றியுமிருக்கின்றனர். தற்போது அங்கு நேசக்கட்சியிடம் போதிய விமான பலமில்லை. முன்னேற முடியாததற்கும், எதிரிகளுக்குக் கிடைக்கும் சப்ளையை அடியோடு தடுக்க இயலாததற்கும் முக்கிய காரணம் அது தான் நேச விமானங்கள் பெருவாரியாக அம்முனைக்கு போய்ச் சேரும் வரை தற்போதைய சங்கட நிலைமை நீடிக்குமென்றே தே[illegible]றுகிறது, அதைப் ப[illegible] பயன்படுத்திக்கொள்ள நாஸிகள் உ[illegible]ண்டிருக்கின்றன என் போர்முனைச் செய்திகள் குறிக்கின்றன.

* * * *

ரஷ்யப் போர் நிலைமை

ரஷ்யாவில் போர்முனை நெடுக பனிக் காற்று 'விர் விர்' என்று வீசுகிறது. ஜெர்மனியர் ரஷேவில் பூமியின் கீழ் ஆழமாக வீடுகளைத் தங்களது துருப்புகளுக்காகக் கட்டியிருக்கின்றனர். இவற்றை வெடிகுண்டுகள் எதுவும் செய்யமுடியாதாம். எவ்வளவு கடும் குளிராக இருந்தாலும் இவை கண கணவென்றிருக்குமாம். குளிரை சகித்திருப்பதற்கு ஜெர்மனியருக்கு சகல சாதனங்களும் அளித்திருப்பதாக பர்லின் ரேடியோ தெரிவிக்கிறது. ஆனால் மாஸ்கோ ரேடியோ இவர்களுக்கு எவ்வித குளிர் கால சாதனமும் அளிக்கப்படவில்லை என்றும் ஜெர்மன் சிப்பாய்கள் குளிரில் இறக்க வேண்டி வருமென அஞ்சுவதாக நாஸி கைதிகள் கூறுவதாகவும் சொல்லுகிறது. இரு தரப்பினரும் தற்போது பனிச்சறுக்குப் படைகளை உபயோகித்துப் போராடுகின்றனராம். பனி வீச்சால் டான், வால்கா நதி தீரங்களில் போர் தடைப்பட்டிருப்பதாகவும், தரையில் பல அடி உயரத்திற்கு பனி இருப்பதாகவும் பனிக் கட்டியில் ரஸ்தாக்கள் மட்டுமின்றி சுரங்கவெடிப் பிரதேசங்களும் மூடிப்போயிருப்பதாகவும் ராய்ட்டர் நிருபர் கூறுகிறார். ஜெர்மனியரின் எதிர்ப்பு சக்தி குலைக்கப்பட்டு விட்டதாக நினைப்பது தவறு என்றும் காயம்பட்ட புலி அதிக அபாயகரமான தென்பதை மறக்கக்கூடாதென்றும் 'இஸ் வெஸ்டியா,' பத்திரிகை கூறுகிறது. ரஷ்யர் வால்கா நதியில் பனிக்குக் கீழ் நாஸிகள் கண்ணுக்குப் படாத பாலத்தை அமைத்தும் பனிக்கட்டிகளை உடைத்து படகுகளில் சப்ளைகளைக் கொண்டு வருகின்றனராம். 10,000 சதுர மைலில் உள்ள பிரதேசத்தில்தான் தற்போது மத்திய ரஷ்யாவில் போர் நடக்கிறது. எங்கும் ரஷ்யர் முன்னேறித் தாக்கி மெதுவாக முன்னேறி பல ஊர்களைப் பிடித்திருக்கின்றனராம். அகப்பட்டுக் கொண்ட நாஸிப்படைகளுக்கு விமான மூலம் சப்ளைகளை அனுப்ப ஜெர்மனியர் முயலுகின்றனர். இதில் அவர்கள் பல துருப்பு விமானங்களை இழந்தனர்.

* * * *

டாகார்-நேசதேசத்தினர் தளம்

நேசநாட்டினர் உபயோகித்துக்கொள்வதற்காக டாகார் தளம் கொடுக்கப்பட்டிருப்பதாக ஜெனரல் எஸ்ஸன்ஹவர் அறிவித்தார்.

* * * *

பிரஞ்சு கடற்படைக்கு நேர்ந்த கதி

டூலானில் இருந்த பிரஞ்சு கடற்படையில் கால் பாகம் பிடிபட்டுவிட்டதாக அமெரிக்க கடற்படை இலாகா மந்திரி கர்னல் நாக்ஸ் அறிவித்தார். பிரெஞ்சு கடற்படையிலிருந்த சுமார் 50 யுத்தக் கப்பல்கள் சேதமுற்றனவென்றும் அவர் தெரிவித்தார். 15 கப்பல்கள் அச்சுப்படைகள் கையில் சிக்கினவென்றும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டார்.

* * * *

ஹிட்லர் பற்றி பிராங்கோ

புதிய பிளாட்கிஸ்ட் தேசிய சபையில் ஜெனரல் பிராங்கோ பேசுகையில் அரசர் ஆட்சி முறையை ஏற்படுத்துவது பற்றிப் பிரஸ்தாபித்துக் கூறியதாவது:—ஸ்பெயினின் நலத்தை உத்தேசித்து சம்பிரதாயமான ஆட்சி முறையை என்றேனும் ஒரு நாள் ஏற்படுத்துவது தேவையாக இருந்தால் அவ்வாறு செய்வதைத் தற்கால ஆட்சி முறை தடுக்காது. இந்த சம்பிரதாயமான ஆட்சி முறை (அரசர் ஆட்சி முறை) ஸ்பெயினின் சரித்திரத்திலேயே கீர்த்தியைப் பெருகியிருந்த காலமாக இருந்தது

சென்ற மகா யுத்தத்தின் விளைவாக ரஷ்யாவில் காட்டுமிராண்டித் தன்மை வாய்ந்த பொதுவுடமைச் சர்வாதிகாரி ஆட்சிமுறை ஏற்பட்டது. முதலில் முஸோலினியும் பிறகு ஹிட்லரும் இதனை எதிர்த்துப் போராடி புதிய ஐரோப்பிய ஏற்பாட்டை ஏற்படுத்தினர். இந்தப் புதிய ஏற்பாடுகள் ஒரு தனிப்பட்ட ஜாதியாருக்கோ அன்றி தேசத்தாருக்கோ ஏற்பட்டவையல்ல. இவை புதிய நம்பிக்கையின் சின்னமாகும். நாம் உஷாராக இருக்க வேண்டும். நமது புதிய கைத்தொழிற்சாலைகளும் விவசாயமும் செழித்து வருகின்றன. இவற்றை விரோதிகள் அழித்துவிடக்கூடுமாதலால் நாம் மிக்க உஷாராக இருக்க வேண்டும்.

அண்ணாமலை சர்வ கலாசாலைக்கு ரூ. 1 லட்சம்

★

திருவாங்கூர் மகாராஜா, அண்ணாமலை சர்வகலாசாலைக்கு ரூ. 1 லட்சம் நன்கொடை அளித்திருக்கிறார். 9-ந் தேதி நடந்த அண்ணாமலை சர்வ கலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது திருவாங்கூர் மன்னர் அச் செய்தியை அறிவித்தார்.

'மித்திரன்' தொழிலாளர் சங்க ஆண்டு விழா



'மித்திரன்' தொழிலாளர் சங்கத்தின் 12-வது ஆண்டு விழா சென்றவாரம் ராஜாஜி தலைமையில் 'தேசபந்து' கட்டிடத்தில் நடந்தது.

சீவக சிந்தாமணி-25.

சீவகன் மகுடாபிஷேகம்

★

—வ. வேணுகோபாலன் எழுதியது—

பூவணையில் அமர்ந்த சிங்கம் போல் சீவகன் வீற்றிருந்தான். அவனைச் சுற்றிலும் அரசர்கள் அமர்ந்திருந்தனர். கோவிந்தனும், கந்துக்கடனும், சீவகன் அருகில் இருந்தனர். தோழரும் நந்தட்டன், நபுலன், விபுலன் என்பவரும் ஒரு புறம் அமர்[illegible]ருந்தனர். சுதஞ்சனன் தன் [illegible]வியருடன் சீவகனுக்கு முன்பு அமர்ந்திருந்தான். வேதண்ட மலையிலிருந்து வித்தியாதரர்கள் யாவரும் வந்து ஒரு புறம் இருந்தனர். மண்டபத்தின் வெளிப் புறத்தில் நகரமக்கள் கூடியிருந்தனர். எல்லோரும் ஒருங்கே எழுந்து, "சீவகசாமிக்கு முடி சூட்டுக" என்று கூறி ஆரவாரம் செய்தனர். உடனே மந்திரியர் புரோகிதரையும், மங்கலப் பாடகரையும் அழைத்து அதற்கு வேண்டியவற்றைச் செய்தனர்.

சுதஞ்சனன் தன் மனைவியருடன் எழுந்து புண்ணிய தீர்த்தங்கள் நிறைந்த நூற்றெட்டுக் குடங்களால் சீவகனை நீராட்டினான். பொன் மழையும் பூ மழையும் சொரிந்தான். நவமணிகள் பதித்த மகுடத்தைச் சீவகனுக்குச் சூட்டினான். மகளிரும் மன்னரும் வாழ்த்தி வணங்கினர். மங்கலப்பாடகர் மங்கலம் பாடி வாழ்த்தினர். ஏத்தாளிகள் புகழ்ந்து ஏ[illegible]தினர். அஷ்டவாத்தியங்களும் [illegible]ர்த்தன. சீவகன், வெண் கொற்றக் குடை நிழலில் நடந்து சென்று சித்திர மண்டபத்தில் புகுந்து சிங்காதனத்தில் வீற்றிருந்தான், தன் மகன் அரசிளங் குமரனாய் அரசு கட்டிலில் ஏறி அமர்ந்த காட்சியை கண்டுகளித்தாள் விசயை. சுநந்தையும் கந்துக்கடனும் உள்ளம் குளிர்ந்தனர். தோழர்கள் களிப்பால் உடல் பூரித்தனர். அப்போது சுதஞ்சனன், சீவகனிடம் விடைபெற்றுச் சென்றான்.

"நாம், பதினாறு வருஷங்கள், நாட்டைக் காக்காமல் இருந்தோம். அதனால், சிறைச்சாலைகளை இடிப்பித்து, சிறைப்பட்டவர்களை விடுதலை செய்க" என்று நந்தட்டனுக்குக் கட்டளையிட்டான். பின்னர், மந்திரியரை நோக்கி,

"தருமத்திற்காக விட்ட நிலங்களை, முன்பு போலவே தரும நிலங்களாக விடுங்கள் மற்ற தருமங்களையும் குறைவில்லாமல் நடத்தச் செய்யுங்கள்" என்று ஏவினான். அவர்கள், சென்று அவ[illegible]ற்றைச் செய்தனர்.

முரசறைபவன், யானை மீது முரசை வைத்து வீதி வழியே சென்று, "பசியும், நோயும் பகையும் நீங்குக. இன்றுள்ள நீங்கள் என்றும் இன்பமுடன் வாழ்வீராக. அரசன் இந் நாட்டில் பதினாறு வருஷங்களுக்குக் கடமை கொள்ளான். கண் கெட்டவர், பிணியுடையோர், அங்கம் குறைந்தவர் முதலியோருக்கு வீடு முதலியன கொடுப்பான். வருத்தமின்றி வாழ்க" என்று கூறி முரசு கொட்டிச் சென்றான்.

* * * *

தான் மணம் செய்த மனைவியரை அழைத்து வரும்படி சீவகன் சிலரை ஏவினான். அவர்கள் சென்று அம்மகளிரை அழைத்து வந்தனர். சிவிகையினின்றும் அம் மகளிர் இறங்கி, மாடத்தின் உள்ளே புகுந்து சீவகனை வணங்கினர். சீவகன் அவர்களைத் தழுவி அருகில் இருக்கச் செய்தான். கோவிந்தராசன், தன் மகள் இலக்கணையை சீவகனுக்கு விதிப்படி மணம் புரிவிக்க எண்ணி அச் செய்தியை நகர மக்களுக்கு அறிவிக்கச் செய்தான்.

முரசறைவார் சென்று, "நகர் வாழ்க: அரசன் கூறிய மொழியைக் கேட்பீராக. நம் மன்னன், சீவகசாமிக்கும் இலக்கணைக்கும் மணம் செய்யும் ஏழு நாட்களிலும் நகரமெங்கும் அலங்காரம் செய்க. பாலன்னம் உண்டு பட்டாடை அணிக. மாலைகளைத் தொங்க விடுக. அரங்கு தோறும் ஆடலையும் பாடலையும் செய்க" என்று கூறி, முரசறைவித்தான்.

இராசமாபுரம் முழுவதும் அலங்கரிக்கப்பெற்றது. யாழின் ஒலியும் குழலின் ஒலியும் எங்கும் நிறைந்தன. முரசமும் சங்கமும் முழங்கின, ஆடவரும் மகளிரும் பாலன்னம் உண்டு பட்டாடை அணிந்து மனம் மகிழ்ந்தனர். வீதிதோறும் விளக்குகள் விளங்கின. வாசனைப் புகைகள் கமழ்ந்தன.

சோதிடன் கூறிய நன்முகூர்த்தத்தில் சீவகனையும் இலக்கணையையும் மங்கலநீரால் மூழ்குவித்தனர். இருவரும் புதிய ஆடைகள் அணிந்து மணப்பந்தரில் அமர்ந்தனர். மங்கையர் கவரிவீசிப் பனிநீர் தெளித்தனர். அஷ்டமங்கலங்களையும் ஏந்தி நின்று வாழ்த்துக் கூறினர். சீவகனுக்கும் இலக்கணைக்கும் மணம் நிகழ்ந்தது. மணமக்கள் இருவரும் மனம் ஒத்து மகிழ்ந்திருந்தனர்.

* * * *

ஒரு நாள் சீவகனும் இலக்கணையும் அளவளாவியிருந்தபோது இலக்கணை சிறிது ஊடல் கொண்டாள். அங்கே உலவிய வண்டுகளைப் பார்த்து, "நங்கையின் [illegible] ஊடலை நீங்கள் நீக்குவீரா[illegible]ன்று கூறிச் சீவகன் நகை[illegible]டல் நீங்காமையைக[illegible]கன் இரந்து நின்றான்; அருகில் கூட்டில் அடைபட்டு இருந்த நாகணவாய்ப் பறவையும் [illegible]கிளியும் சீவகனுக்காக, மனம் வருந்தின. கூட்டின் வாயிலே முகத்தை வைத்துப் பார்த்து, "நம் சேவல். நம்மை ஊடல் தீர்த்தற்கு இவ்வாறு இரந்து கூறினால், இது தகாதென்று கூறி யாம் மனம் உருகி இறப்பேம்; இவ்வாறு சீவகன் வேண்டியும் ஊடல் தணியாத இலக்கணையின் மனம், கல்லோ, இரும்போ?" என்று கூறிக்கொண்டன. அப்போது, கிளி, இலக்கணையை நோக்கி, "நங்காய், சீவகன் சிறிதும் குற்றம் செய்திலன். நீ அவனுக்கு இன்பம் அளிப்பாயாக" என்றது. அதைக்கேட்ட நாகணவாய்ப் பறவை, கிளியை நோக்கி, "பேதாய், இலக்கணை கொடுக்கும் சோற்றை உண்டு நாம் கூட்டில் வருந்தியிருக்கிறோம். இத்தன்மையை உடைய நாம் புத்தி சொன்னால். இலக்கணை, மூன்று நாட்கள் நமக்கு சோறு காட்டாள்; ஆதலால், கிளியாரே, நும் வாயைப் பொத்திக் கொள்ளும்" என்று கூறியது. அதைக்கேட்டு, கிளி, கோபம் அடைந்தது.

"சீவகன் வருத்தத்தைக்கண்டு யான் உயிர் வாழேன்; நான்று கொண்டு சாவேன்" என்று கூறி நூலால் தன் கழுத்தைச் சுற்றிக்கொண்டது. கிளியின் கோபத்தைக்கண்டு இலக்கணை விடாமல் நகைத்தாள். இலக்கணைக்கு ஊடல் தணிந்ததைக் கண்டு அவளைத் தழுவி மகிழ்ந்தான் சீவகன். இலக்கணையோடு இன்பமுடன் பொழுதுபோக்கியிருந்தான். ஆறு நாட்கள் கழிந்தன.

ஏழாம் நாள் காலையில், சீவகன், நகர்வலம் செய்து அருகனை வணங்கிவருவதற்குப் புறப்பட்டா[illegible]ாமணி என்னும் தன் [illegible]யானையின் மேல் [illegible]நடால் வகைப்ப[illegible]யுடன் [illegible]ர்களும் அவன் பின் [illegible] முன்பு [illegible] மகன் [illegible]று



கூறப்பட்டவன் இப்போது அரசிளங்குமரனாய், கவரி வீச சங்கு முழங்க, முரசம் ஆர்ப்ப, படை வெள்ளத்துடன் ராஜ வீதியிலே ஊர்வலம் செய்தான். "சச்சந்தன் மகன் வாழ்க" என்று வாயார வாழ்த்தினர்; யாவரும். சீவகனைப் பார்த்தற்குக் கூட்டம் கூட்டமாய் மாந்தரும் மகளிரும் சூழ்ந்தனர், "உப்பும், உலகும் உள்ள அளவும் வாழ்க" என்றனர். மாடங்களிலிருந்து வாசனைப்பொடிகளைத் தூவினர். பூமாலைகளை வீசினர். சந்தனத்தையும் பனிநீரையும் தெளித்தனர். பூம்பந்துகளை எறிந்தனர். மெய்மறந்து யாவரும் ஆர்த்துச் சென்றனர். மக்களிடத்துள்ள அன்பு மிகுதியால் எல்லாவற்றையும் பொறுத்துப் புன்னகையுடன் சென்றான் சீவகன்.

"ஐயன் முருகனே" என்றனர். "காமனே மீண்டும் பிறந்தான்" என்றனர். "ஐயனைக் காணப் பாக்கியம் பெற்றோம்" என்றனர். "ஐயனுக்கு அமைந்த மனைவியர் பெரும் பாக்கியம் செய்தனர்" என்றனர். "விசயை, ஐயனைப் பெறுதற்கு எத்தவம் செய்தனளோ" என்றனர். "இல்லை, சுநந்தையே தவம் செய்தவள்" என்றனர். "சுடுகாட்டில் பிறந்து, வணிகன் வீட்டில் வளர்ந்த இவன், அரசர் வணங்கப் போகின்றமையைப் பார்த்தால், அறிவுடையோர் தவம் செய்யாதிருப்பது என்ன காரணம்?" என்றனர். "ஒருவனுக்கு நல்வினை யில்லையேல், அவன் கடலையும், மலைகளையும் கடந்து வருந்தினும் பொருள் சேராது" என்றனர். நல்வினை, உடையவர் ஒரு முழ தூரம் நடக்க வலி இல்லாதவராயி[illegible] தானே, [illegible] சேரு[illegible] தால் [illegible] குடி[illegible]தாலும் [illegible] இல்லையாயின் [illegible] ம[illegible]தாலும் காப்பு இல்லை[illegible]ன்றனர். "தவம் [illegible] உடையவ[illegible] கொடியில் அக[illegible]லும் பிழைப்பர்") என்றனர். "தவம் உடையா[illegible]க்குத் துன்ப[illegible] வந்தால், தருமம் அதை அ[illegible]ற்றும்; ஆதலால், துன்பத்திற்குத் தவமுடையார் அஞ்சார்" என்றனர். இவ்வாறு மகளிரும் மாந்தரும் கூறிச் சீவக[illegible] வாழ்த்தினர். பூக்களைத் தூவிப் புகழ்ந்தனர்.

சீவகன் புன்னகையுட[illegible] நகரை வலம் செய்து [illegible] சோலையில் போய்த் தங்கினான். படைகளையும் மற்ற பரிவாரங்களையும் சோலையில் நிறுத்திவிட்டு, அரசருடனும் தோழருடன் அருகன் கோயிலுக்குச் சென்றான். கோயில் கதவுகள் திறக்கப்பெற்றன. அகிற் புகையின் மணம் எங்கும் பரவியது. ரத்தின தீபங்கள் எங்கும் விளங்கின. சீவகன் கோயிலை வலம் வந்து உள்ளே சென்று அருகனை வணங்கித் துதித்தான். பின்னர் அருகனுக்கு விளக்குக்காக, நூறு ஊர்களையும், பூசனைக்காக நான்கு கோடி பொன்னையும், நூறு யானைகளையும், நூறு தேர்களையும் கொடுத்தான். அருகனுடைய அலங்காரத்திற்கு, வாடாத மாலை, மணிமாலை, பொன் மாலை, முத்து மாலை, சந்தன மாலை, பவள மாலை, என்னும் இவற்றையும் அளித்தான். பின்பு சோலை சென்று படையுடன் அரண்மனை புகுந்தான்.

* * * *

சித்திர மண்டபத்தில் சிங்காதனத்தில் சீவகன் வீற்றிருந்தான். வீரமகளையும் திருமகளையும் பெற்று, நாமகள் புகழ் கூறப் பூமகளுக்குக் காவலனாய் விளங்கினான். சபை நிரம்பியிருந்தது. பொன்னுலகத்து இந்திர சபைபோல் தோன்றியது சித்திரமண்டபம்.

தனக்கு உதவி செய்த எல்லாருக்கும் சீவகன் சிறப்புச் செய்ய நினைத்தான். கந்துக்கடனுக்கு, அரசுரிமையையும் ஒரு நாட்டையும் அளித்தான். தன்னை வருந்தி வளர்த்த சுநந்தைக்குத் தேவி என்னும் பட்டத்தைத் தந்தான். மன்னவர் யாவரும் இளவுடையான் என்று கூறும்படி நந்தட்டனை இளவரசாக்கினான். நபுலனுக்கும் விபுலனுக்கும், குறுநில மன்னரது மகளிரையும் சில ஊர்களையும் அளித்தான். பதுமுகன் முதலிய தோழர்க்குப் பழைய அரசையும், ஸேனாபதிப் பட்டத்தையும் அதற்குரிய ஏனாதி மோதிரத்தையும் தந்தான். பொற்பட்டம், மாலை, நிதி முதலியவற்றையும் அளித்து மகிழ்வித்தான். தனக்காக உழைத்த வீரர்களுக்கு அமைச்சரைக்கொண்டு நிதிகளை வழங்கினான். தன்னுடைய செவிலித்தாயாருக்கு ஐந்து ஊர்களைக் கொடுத்தான். மைத்துன மன்னர்களாகிய விசயன் முதலியவர்க்கு நிதிகளை அளித்தான். தன் மாமனாகிய கோவிந்தராசனுக்குக் கட்டிய[illegible]ாரனுடைய பொருள்களை [illegible]ாம் தந்தான். [illegible]த் தக்கவாறு [illegible]ளித்தான். தன [illegible] களை நீக்கிக் காந்த சுதஞ்சணன் வடிவைப் பொன்னா[illegible], புதியதாக இயற்றிய கோயிலில் அவன் [illegible]வைப் பிரதிஷ்டை செய்தான். சுதஞ்சணன் பிரதிமைக்குப் பூசனைக்காக ஓர் ஊரையும் இறையிலியாக (வரியில்லாத இடம்)க் கொடுத்தான். சுதஞ்சணன் சரிதத்தை ஒரு நாடகமாகச் செய்து திருவிழாக் காலங்களில் நடத்தும்படிச் செய்தான். தான் சிறு வயதில் விளையாடியிருந்த ஓர் ஆல்மரத்திற்குப் பீடம் செய்வித்து மாலை[illegible] அணிவித்தான். அம்மரத்தின் நிழலில் பசுக்கள் மேய்ந்தபின் தங்கும்படி ஐந்து ஊர்களை இறையிலியாக விட்டான். காந்தருவதத்தை முதலிய மனைவியர் எண்மருக்கும் தேவிபட்டம் தந்தான்.

சீவகன் அரசாட்சியில் நாடு செழிப்புற்றது. தருமம் தழைத்து ஓங்கியது. மாந்தரும் மகளிரும் மனக்குறைவின்றி மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

* * * *

தன்னைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் சிறப்புச் செய்தோம் என்று எண்ணியிருந்த சீவகன், பல்லவ தேசத்தில் சந்திராப நகரில் சண்பகச் சோலையில் நடனம் செய்த தேசிகப்பாவையை 'மறந்தோமே' என்று எண்ணியிருந்தான்.

தன்னைச் சீவகன் மறந்துவிட்டான், என்று எண்ணிய தேசிகப்பாவை, அநங்கமாலையின் தோழியாகத் தன்னைக் கூறிக் கொண்டு போர்வையால் மறைத்துக் கொண்டு அரண்மனை வாசலை அப்போது அடைந்தாள். வாயில் காவலனை நோக்கி. "அனங்க மாலையின் தோழி, ஓலை கொண்டு வந்திருக்கிறாள் என்று அரசனிடம் சொல்" என்றாள் அவள். அரசனிடம் சென்று அவன் தெரிவித்தான். வந்தவள் தேசிகப்பாவையே என்று எண்ணிய சீவகன் அவளை அழைத்து வரச் செய்தான்.

போர்வையால் மறைத்த வடிவத்துடன் தேசிகப்பாவை சென்று, சீவகனை வணங்கி ஓர் ஓலையை நீட்டினாள். சீவகன் அதை வாங்கிப் படிக்கலானான். "அனங்கமாலை வணக்கத்தை அரசன் ஏற்றுக்கொள்க. கட்டியங்காரன் என்னைச் சிறை வைத்த பின் யான் தம்மையே கூறி அரற்றினேன். அவன் என்னைப் போக விட்டான். யான் சேரியில் சென்று தம்மையே நினைந்திருந்தேன். எம் கண்கள் உறங்காவாய் நீரைப் பெருக்குகின்றன கைவளைகள் கழன்றன: இவ்வாறு யான் வருந்துவதற்கு, நும்குடை நிழலில் இல்லாத அயலிடத்தேன் அல்லேன். ஆதலால். அரசனே இவ்வோலை கொண்டுவரும் என் தோழி வாமலேகை வருந்தாமல் மறுமொழி கூறி விடுத்தருள்க".

அனங்கமாலையிடத்துக் காதல் கொண்டிருப்பானென்று கருதித் தேசிகப்பாவையே இவ்வாறு வருந்தி எழுதித் தோழியாக நடிக்கின்றாள் என்று அறிந்தான் சீவகன். உடனே அவள் திறமையைப் பாராட்டிக்கூறிப் பாடச்செய்து கேட்டு மகிழ்ந்து தழுவினான். அப்போது அவள், "அநங்கமாலையின் தோழியாகிய என்னை இவ்வாறு செய்வது என்ன காரணம்?" என்று கூறி நகைத்தாள். "தேசிகப் பாவை, யான், செல்வத்தால் மயங்கி, உன்னை மறந்தேன் என்று இவ்வாறு கூறுகிறாய். அவ்வாறு யான் மறப்பேனா? சொன்ன சொல் தவறுவேனா? இப்போதும் உன் நடனத் திறமையை யான் காண வேண்டும்" என்றான் சீவகன்; தேசிகப் பாவை அவனை வணங்கி, சிறிது நடனம் ஆடி அவனை மகிழ்வித்தாள். சீவகன் அவளுக்குச் சிறப்புச் செய்து தன்னோடு இருக்கச் செய்தான்.

அடுத்தவாரம்:—

விசயமா தேவியார்.

துறவு

இஹம்

"அமெரிக்கன் நியூ கோல்ட்" அற்புத தயாரிப்பு. [illegible]ண்மையில் உலகில் 8-வது அதிசயம். இனி பிரபலப்படுத்த வேண்டிய அவசியமில்லை. எற்கனவேயே இந்தியா பூராவும் பிரபலமாய்விட்டது. நிறம் மாறாமலிருப்பதற்கு பத்திரிகைகளாலும் பொதுமக்களாலும் புகழப்பட்டது. நாகரீகமான நகைகளும் செய்[illegible]லாம்.

எமது "அமெரிக்கன் நியூ கோல்டை" மேலும் பிரபலப்படுத்த தாற்காலீகமாக 6 தோலா அமெரிக்கன் நியூ கோல்ட், 2 ஜதை வசீகரமான கை வளையல்கள், 2 மோதிரம் சாம்பிள் செட்டாக கொடுக்க உத்தேசித்துள்ளோம். இந்த அனுகூலத்தை நிறுத்துவதற்கு முன் முந்துங்கள்.

இலவசம்: பூரா விவரங்களுடன் கூடிய படங்களுள்ள காட்லாக் இலவசம்.

American New Gold Company,
Post Box 61, (S. M. M.) LAHORE.
(E A B)

டோங்ரே
பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

பாலாபிஷேகம்

சிறு கதை
★
ரா. ஆறுமுகம்
எழுதியது

"ஒன் சமாச்சாரந்தான் தெரியுமே எனக்கு. இந்தாப் பெறப்புட்டேன்னு சொன்னா, மத்தியானம் பண்ணிடுவியே."

"இல்லே; இல்லே. கோவிச்சுக்காதே மச்சான். ஏதாவது மறந்து கிறந்து விட்டுட்டுப் போயிட்டா, அப்புறம்......"

"சரி, சரி. வெயிலுக்கு முன்னே வீட்டை விட்டுக் கெளம்பரதுக்குப் பாரு." என சற்றுக் கோபமாய்ச் சொல்லி விட்டுக் காத்தான் வெளித் திண்ணையில் வந்து உட்கார்ந்து, வெற்றிலை மடித்துப் போட்டுக்கொண்டிருந்தான்.

அன்றைக்கு திருப்பரங்குன்றத்தில் பாலாபிஷேகம். மதுரையைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்து ஆயிரக் கணக்கில் ஜனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து சிறுவர்களும் சிறுமிகளும் புது வஸ்திரங்கள் தரித்துச் சந்தோஷமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். உடம்பில் சட்டையே போட்டறியாத அவர்களுக்கு சட்டை யணிந்ததும் ஏற்பட்ட உத்சாகம் அவர்கள் நடையிலிருந்தே தெரிந்தது. திண்ணையில் உட்கார்ந்திருந்த காத்தான் தன் முன்போகிறவர்களை யெல்லாம் கண்டு மறுபடியும் ஆத்திரமாய் வீட்டிற்குள் விரைந்து "வேலா! வேலா!!" என்று சத்தமிட்டான். வேலாயியிடமிருந்து பதில் இல்லை. புழக்கடைப் பக்கம் போய்ப் பார்த்தான். அங்கே அவளைக் கண்டு பிரமித்து நின்றுவிட்டான்.

"என்ன மச்சான், மயங்கிப் போயிட்டியா?" எனச் சிரித்துக் கொண்டே கேட்டாள் ரவிக்கையை முடிபோட்டபடியே!

அவன் பெருமூச்சு விட்டு, "இத்தினி நாளா இந்த ரவிக்கையை எங்கே ஒளிச்சுவைச்சிருந்தே?" என்றான்.

"ஏன், நீ மறந்திட்டியோ? போன வருஷம் பொங்கலுக்கு நீ தானே கெசம் ஒன்னே கால் ரூபான்னு எடுத்திட்டு வந்தே. அதே துணிதான், ஒரு விசை போட்டுட்டு அப்படியே அலுங்காமெ மடிச்சுப் பெட்டிக்குள்ளே வச்சிருந்தேன்" என்று சொல்லிக்கொண்டே முந்தானையை விசிறி மேலே போட்டுச் சரிப்படுத்திக்கொண்டு அவன் பக்கம் வந்தாள்.

"சரி, ஏன் மரமாட்டமா நிக்கிறே. பெறப்பிடு போக" என்று அவள் அவன் கையைப் பிடிக்கவும் தான், அவனுக்குத் தன் நினைவு வந்தது. அவள் பின்னாலேயே வீட்டிற்குள் நுழைந்தான்.

"இன்னும் அலங்காரம் முடியலியா" என்று அதட்டினான்.

"நெத்திக்கு ஒரு பொட்டு வேண்டாமா" என்று புன்னகை புரிந்துகொண்டே குங்குமத்தை எடுத்து இட்டுக்கொண்டாள்,

மத்தியானச் சாப்பாட்டிற்குத் தயாராய் செய்து வைத்திருந்த கட்டமுதுப் பொட்டணத்தை ஒரு கையிலும், மறு கையில் சிறு செம்பையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

"வெத்திலை பாக்கு நிரெய எடுத்துக்கிட்டியா?" என்று ஞாபக மூட்டினான் காத்தான்.

"இல்லியே! இந்தா, இதைப் புடி, ஒரு நிமிசத்திலே..."

"எனக்குத்தான் தெரியுமெ!" என்று ஒரு பார்வை பார்த்தான். அவள் அதைக் கவனிக்காமல் உள்ளே ஓடிப் போய் மடியில் எடுத்துக் கட்டிக்கொண்டு திரும்பினாள்.

"துட்டு எதுனாச்சும் வைச்சிருக்கியா?" என்றான்.

"துட்டு எதுக்கு?"

"எதுக்கா? பின்னே எப்படிப் போறது? ரயில்காரன் ஒங்க தாத்தாவா?"

"ரயில்லேயா போகப்போறே? இன்னிக்கி ரயில்லே எடந்தான் கெடைக்குமா? பேசாமே நடையிலே விடாமே, நல்லாச் சொன்னே? அவனுக்கு வேறே கால் ரூபாயா அழணும்?"

"எனக்கென்ன. நாலு மைல் நடக்கணும், அப்புறம் கால் கீல் வலிக்குதுன்னு சொல்லப் படாது. இப்பவே சொல்லிட்டேன்"

"எனக்குக் கால் வலிச்சா நீ தூக்கி இடுப்பிலே வச்சுக்க வேண்டாம், போ"

இரண்டு பேரும் வெளியே வந்தார்கள்.

"வீட்டை பூட்டவேணுமா? பூட்டுஞ்சாவியும் எடுத்திட்டு வந்தியா?"

"ஐயையோ!" என்று வாயில் கையை வைத்துக்கொண்டே உள்ளே ஓடினாள். அவன் கோபமாய் பார்த்துக்கொண்டே நின்றான் வாசற்படியில். பூட்டும் சாவியும் எடுத்துக் கொண்டு வந்த அவள், "என்னை ஏனிப்படி வெரெக்கப் பாக்கிறே. இவ்வளவு நேரம் திண்ணையிலே உக்காந்திருந்தியே, நீதான் இதெல்லாம் எடுத்து வச்சிருக்கக் கூடாதா? நான் ஒருத்தி எதை எதைத் தான் மறக்காமே எடுக்க முடியும்?" என்று அவனையே கண்டித்தாள். அவன் ஒன்றும் சொல்லவில்லை. கதவைப் படீரென்று இழுத்து மூடிப் பூட்டிவிட்டு இருவரும் தெருவில் இறங்கினார்கள். அப்போது தான் சூரியனும் லேசாக மேலே வந்துக்கொண்டிருந்தான்.

"காலங்காத்தாலே, வெய்யிலுக்கு முன்னே. பெறப்பிடனும்னு ராத்திரியெல்லாம் பாடம் படிச்சேன். இப்ப எவ்வளவு நேரமாச்சு பாத்தியா?" என்றான் காத்தான். அவன் தொனியில் இன்னும் கோபம் கலந்திருந்தது,

"யார் மேலே தப்பு? ராத்திரி தான் நொச்சு நொச்சுன்னு தூங்கவிடாமே, சாமம் வரையிலும் பேசிக்கிட்டிருந்தியே. கோழி கூப்பிட்றப்போ தானே கண்ணெ மூட முடிஞ்சது!"

அவனுக்குச் சுருக்கெனத் தைத்தது.

"சரி. அது கெடக்கட்டும், காலை எட்டிப் போடு. நாலு மைல் தானே, எளம் வெய்யிலு ஒன்னும் செய்யாது"

இப்படியாக அவர்களுடைய தர்க்கம் ஒருவாறு முடிவதற்கும் அவர்கள் கிராமத்தை விட்டு, வயல் வரப்புகளைத் தாண்டி பெரிய சாலைக்கு வருவதற்கும் சரியாக இருந்தது. சாலையில் எறும்புச் சாரை போல் இடைவிடாது கூட்டங் கூட்டமாய் ஜனங்கள் தலகலத்த பேச்சுடன் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். ஜட்கா வண்டிக்காரர்களின் 'ஏ, ஏ, ஓரம், ஓரம்" என்ற சப்தமும், மோட்டார்களின், 'பூம், பூம்' என்ற ஓசையும் எங்கும் நிறைந்திருந்தன. அன்றைக்கு எல்லோருமே கவலைகளை மறந்து களிப்போடு சென்ற வண்ணமிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் தான் எத்தனை விதவிதமான மனிதர்கள், புதிதாய்க் கல்யாணம் செய்து கொண்ட தம்பதிகள் முதன் முதலாகப் பாலாபிஷேகத்தைப் பார்த்து ஆனந்திக்க ஆவலுடனும், பழய தம்பதிகள் அவர்களைக் கண்டு தங்களின் முந்திய அனுபவங்களைச் சிந்தித்த வண்ணமும், கல்யாணமாகாதவர்கள் தாங்களும் என்றைக்கு அவ்விதம் குதூகலமாகப் போகப் போகிறோம் என்ற கவலையுடனும் போய்க்கொண்டிருந்தார்கள். கால் துவண்டு போன சிறுவர் சிறுமிகள் "அம்மா, கால் வலிக்குதே. கொஞ்ச தூரம் தூக்கிக்கோ" என்று கெஞ்சிக்கொண்டே பின்னால் ஓடி வருவதைக் கண்ட குழந்தையில்லாத மற்றவர்கள் தாங்கள் அந்தத் தொல்லையிலிருந்து விடுபட்டிருப்பதற்காக உள்ளூற சந்தோஷப்பட்டுக் கொண்டனர்.

வேலாயியும் அப்படித்தான் நினைத்தாள். ஆனால் காத்தானுக்கு அது ஒரு குறையாகவே இருந்தது. தனக்கும் ஒரு குழந்தை இருந்தால் அதை மற்றவர்கள் போல் ஒய்யாரமாகத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு போகலாமே என்று நினைத்தான்,

"மச்சான், அங்கே பாரு, அந்தப் புள்ளைகளை. எவ்வளவு தொந்தரவு கொடுக்கிறதுகள். நம்மளைப் போல அந்தப் புருஷன் பெண்டாட்டிகள் சந்தோஷமாய்ப் பேசிக் கிட்டு வர விடுதுகளா?" என்றாள்.

"என்ன தொந்தரவா அது. அவுங்களுக்கு அந்த இமுசையிலும் ஆனந்தம் தான் இருக்குது. எனக்கு அப்படி ஒருகொழந்தை இல்லியேன்னு தான் இப்ப நெனைவு வருது!!

"ஆமா! இந்தக் கொழந்தைகளுக்கு நேரங் கண்டு வெளையாடத் தெரியாதே, சண்டித்தனத்துக்கு ஆரம்பிச்சிட்டா, அப்பறம் அடக்குறத்துக்குள்ளே, அப்பா, பெரிய பாடாப் போயிடும்!!

"அப்படி எத்தினி கொழந்தையைப் பெத்து நீ சலிச்சுப் போயிட்டே?"

பெத்தாத்தானா தெரியனும்? மத்த வங்க படுரதைப் பாக்காமலா இருக்கோம்?"

"அதெல்லாம் நம்ம செயல்வியா இருக்கு? அந்த முருகன் பாத்துக் கிருபை செஞ்சா, நீ வேண்டாம்னுலும் நடக்காது."

திடீரென்று, பின்னால் வந்து கொண்டிருந்த கூட்டத்திலிருந்து "அடேடேடே! கொழந்தை, கொழந்தை!" என்று பெரிய சப்தம் கேட்டது. எல்லோரும் நின்று திரும்பிப் பார்த்தார்கள். 'டர்' ரென்று சத்த மிட்டுக் கொண்டு வேகமாய் வந்த பஸ் ஒன்று பிரேக் போட்டு நின்றது. சாலையிலிருந்து ஒருவன காருக்கு முன் பறந்தோடி கழுகைப் போல ஒரு சிறுவனைத் தூக்கி விட்டான். நல்ல வேளை! ஒரு நிமிஷத்தில் அந்தப் பையன் காருக்கு இரையாக இருந்தான். எல்லோர் மனதும் 'திக்திக்' என அடித்துக்கொண்டிருக்கும் போதே 'பட், பட், என ஓசையைக் கிளப்பிக்கொண்டு கார் புறப்பட்டு விட்டது. எமன் வாயிலிருந்து அந்தப் பையன் தப்பிவிட்டாலும் பெற்றோர்களின் அடியிலிருந்து தப்பமுடியவில்லை. பொத்துப் பொத்தென்று அவன் முதுகில் நாலு விழுந்தது.

"பாத்தியா மச்சான். கொழந்தே கிடச்சு [illegible] நம் கண் முன்னாலே ஒன்னு ஆச்சுன்னா நம்ம மனம் என்ன பாடு படும்? அதுக்கு ஒன்னுமில்லாமே இருந்துட்டா எவ்வளவு மேல்" என்று வேதாந்தம் பேசினாள் வேலாயி.

"பெத்த கழுதைக் கவனமில்லாமே இருந்தா, அதுக்குப் பிள்ளைகள் என்ன செய்யும்?" என்றான் அவன்.

அவர்கள் பேச்சுவாக்கிலேயே வழிநடை தெரியாமல் திருப்பரங்குன்றம் எல்லையை மிதித்து விட்டார்கள் கோவிலுக்கு. எதிரிலிருந்து வரும் சாலையை அடைந்ததும் ஜனநெருக்கம் சகிக்க முடியாததாயிருந்தது. பாடுகிறவர்கள் பாட, மற்றவர்கள் 'அரோஹரா! அரோஹரா!' என்று உரத்த குரலில் சத்தமிட, அதனால் ஆவேசம் மூட்டப்பெற்று பாற்குடத்தைத் தலையில் தாங்கியவர்கள் மேளத்தின் தாளத்திற்கேற்ப அழகாய் ஆடி வந்தார்கள். குடம் விழுந்து விடாதபடிகெட்டியாக இரு கையாலும் பிடித்துக்கொண்டு தான் குதித்தார்கள்! கடவுளின் சக்தி அவர்கள் மேல் வந்திறங்கி அவர்கள் போடும் ஆட்டத்தைப் பார்க்க ஆங்காங்கே மரத்தின் மீதும் வீட்டு மாடி மீதும் ஏராளமான பேர்கள் வீற்றிருந்தார்கள்.

தெருவின் இரு பக்கங்களிலும் மேடை மீது பற்பல விதமான வியாபாரிகள் குழந்தைகளின் நாக்கில் ஜலம் ஊறும் வண்ணம் பல வர்ணங்களில் செய்த கிளி, தேள், பாம்பு மிட்டாய்களைத் தட்டு நிறைய அடுக்கி வைத்து கையிலிருந்த மணியைக் 'கண கண'வென

ரஸிகரான பத்திரிகாசிரியர்

★

“ப்ரேம் சந்த்” எழுதியது

★

‘நவ ரஸம்’ என்ற பத்திரிகையின் ஆசிரியரான சோகேலால் சர்மாவுக்கு மனைவி இறந்து போனது முதல், ஸ்திரீகளிடம் தனிப் பற்று உண்டாகிவிட்டது. அவருடைய ரஸிகத் தன்மையின் அளவும் வளர்ந்துகொண்டே வந்தது. ஆண்களின் கதைகள் எவ்வளவு அழகாக இருந்தாலும் அவைகளை அவர் குப்பைக் கூடையில் போட்டு விடுவார். ஸ்திரீகளின் கட்டுரைகள்—அவை எப்படி இருந்தாலும் சரி—உடனே இடம்பெறும். அநேகமாகக் கட்டுரைகள் கிடைத்தவுடனே அவைகளைப் போற்றிக் கடிதங்களும் எழுதுவார். “தங்கள் கட்டுரையைப் படித்து மகிழ்வுற்றேன். அதைப் படித்தவுடனே பழைய வாழ்க்கை என் கண்களின் முன் உருவெடுத்து நின்றது. தங்களுடைய கருத்துக்கள் இலக்கியக் கடலில் ஒளி வீசும் மாணிக்கங்களாகும்; அவற்றின் ஒளி என்றும் மங்காது. தங்கள் கவிதைகளோ உள்ளத்தில் எழும் அலைகள்; வீணையின் அழிவிலா நாதஸ்வரங்கள்; முடிவிலா உலகின் இனிய துயரங்கள்; இரவின் நிசப்தமான பாடல்கள். தாங்கள் எப்போதாவது இவ்வழியாக வந்தால், என்னை மறக்கக் கூடாது, இப்படிப்பட்ட கவிதைகளை ஸ்ருஷ்டித்த தெய்வ மங்கையின் தரிசனம் எனக்குக் கிடைக்குமாயின், நான் பாக்கியசாலியே” என்று இவ்வாறு ஸ்தோத்திரங்கள் எழுதுவார்.

இவ்விதமான தூண்டுதல்களினால் ஸ்திரீகள் பரமானந்தம் எய்தினர். பிச்சைக்காரர்களைப் போல் பல இடங்களுக்குப் போய் அலைந்து நிராசையோடு திரும்பிய கட்டுரைகளுக்கு இங்கே கிடைக்கும் மரியாதைதான் என்ன!

‘நவரஸ’த்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கை மிகவும் வேகமாகப் பெருகியது. ஒவ்வொரு தபாலிலும் வந்தனங்களின் வெள்ளமொன்று வரும். பெண்மணிகள் தம் சொந்த விஷயங்களைப்பற்றி அவரையே ஆலோசனை கேட்கலாயினர். மாதந்தோறும் ஏழெட்டுப் பேர் வந்து அவருக்குத் தரிசனமும் அளித்துச் செல்வார்கள். அவர்கள்வரும் செய்தி தந்தி மூலமோ கடிதத்தின் மூலமோ கிடைத்ததும், சர்மாவே ஸ்டேஷனுக்குச் சென்று அவர்களை வரவேற்பார்; மிகவும் வற்புறுத்தி இரண்டு மூன்று நாட்கள் தம்மிடமே தங்கச் செய்வார். விருந்தோம்பலில் அவருக்கு இணை யாருமே இல்லை என்பது பிரசித்தி. தமக்குக் கிடைக்கும் இலவசச் சினிமாப் பாஸ்களைக் கொண்டு, அவர்களைச் சினிமாவுக்கும் அழைத்துப் போவார். பெண்ணரசிகள் அவருடைய பெருந்தன்மையைக் கண்டு வியப்படைந்து அவரிடம் விடை பெற்றுச் செல்வார்கள்.

ஒரு நாள் ஆசிரியருக்கு ஒரு கவிதை கிடைத்தது. அதை எழுதியவள் தன் தீவிரமான காதலை அதில் வெளிப்படுத்தி இருந்தாள். மற்ற ஆசிரியர்களாயிருந்தால் அதை ‘ஆபாசமானது’ என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், சர்மா தாராள மனப்பான்மை உள்ளவரல்லவா. மணிமணியான எழுத்துக்களில் எழுதிய கவிதை; எழுதியவளின் பெயரோ நெஞ்சத்தைக் கவர்கிறது. ஒரு கற்பனைச் சித்திரம் அவர் கண்களின் முன்பு நின்றது: நெஞ்சக் கனிவுள்ள வடிவம்; கோமள காத்திரம்; கோரிக்கை நிரம்பிய கண்கள்; கோவை போல் சிவந்த இதழ்கள்; சண்பக மலர் போன்ற மேனி நிறம்; சஞ்சலமான அவயவங்கள்; முதலில் கோந்து போல் உலர்ந்தும் கடுமையாகவும் இருந்தாலும், ஈரம் பட்டவுடனே ஒட்டிக் கொள்ளும் குணமுடையவள். அவர் அந்தக் கவிதையை இரண்டு மூன்று தடவைகள் படித்தார். ஒவ்வொரு தடவையும் அவர் மனத்தில் குறுகுறுப்பு உண்டாயிற்று. மறுபடியும் படித்தார்:

“என்னை விட்டு ஓடிவிடலாமென்று நீ நினைக்கிறாயா?
உன்னால் ஓட முடியுமா?
நான் உன் கழுத்தில் கை போட்டு விடுவேன்;
உன் இடுப்பைக் கைகளின் பாசத்தால் பிணைத்து விடுவேன்;
உன் கால்களைப் பிடித்து உன்னைத் தடுத்து விடுவேன்;
பிறகு அவைகளில் தலை கவிழ்ப்பேன்.
என்னை விட்டு ஓடிவிடலாமென்று நீ நினைக்கிறாயா?
உன்னால் என்னை விட முடியுமா?
நான் உன் இதழ்களில் என் கன்னத்தை ஒட்ட வைப்பேன்;
அந்தக் கிண்ணத்திலுள்ள இன்னமுதத்தை அருந்தி, நீ பித்தனாகி விடுவாய்;
என் கால்களில் தலையை வைப்பாய். என்னை விட்டு ஓடிவிடலாமென்று நீ நினைக்கிறாயா?

—காமாக்ஷி”

சர்மா இந்தக் கவிதையைப் படித்த ஒவ்வொரு தடவையும் புதுப் புதுச் சுவையை அநுபவித்தார். அந்தக் கணமே அவர் காமாக்ஷிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்:—

“தங்கள் கவிதையைப்படித்து என் மனம் படும்பாட்டை விரித்துச் சொல்ல முடியாது. இதயத்தில் எழுந்த தாகமொன்று என்னைச் சாம்பராக்கிக்கொண்டிருக்கிறது. அதை எப்படித் தணிப்பதோ, தெரியவில்லை. எந்த இடத்திலிருந்து இந்தத் தாகக்கனல் எழுந்ததோ அந்த இடத்திலிருந்தே இதைத் தணிக்கும் அமுதமும் கிடைக்குமென்று நம்புகிறேன். மனம் காற்றாடியைப்போல் தளைகளை அறுத்துக்கொண்டு பறக்கப் பார்க்கிறது. எந்த உள்ளத்திலிருந்து இந்த அருமையான கருத்துக்கள் உதித்தனவோ அந்த உள்ளம் குன்றாக் காதலின் நிதியாக இருக்கவேண்டும் என்பதில் சந்தேகமே இல்லை. தன்னைஸமர்ப்பணம் செய்வதிலேயே ஆனந்தமடையும் உயர்ந்த காதல் அது. நான் சத்தியமாகச் சொல்லுகிறேன்: இன்றுவரையில் நான் இப்படிப்பட்ட கவிதை படித்ததில்லை. இது என் மனத்தில் புயலை உண்டாக்கிவிட்டது. விதுரனாகிய என் மன அமைதியை இது குலைத்துவிட்டது. தாங்கள் ஓர் ஏழையின் கூரைக் குடிசையில் நெருப்பை வைத்து விட்டீர்கள். ஆனால் இது வெறும் வேடிக்கை விளையாட்டாக இருக்குமென்பதை என் மனம் ஒப்பவில்லை. இந்தச் சொற்களிலே, காதலின் துன்பங்களைச் சகித்துக்கொண்ட வேட்டையாகிய நெருப்பில் தவித்த ஓர் உள்ளம் மறைந்திருப்பதை நான் காண்கிறேன். தங்களைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்குமாயின், அது நான் செய்த பெரும் புண்ணியமாகும். இந்தக் குடிசை, தங்களை ஆவலோடு வரவேற்கத் தவித்துக்கொண்டிருக்கிறது

அன்புடன்.”

கடிதம் போட்ட மூன்றும் நாளே [illegible] வந்தது. காமாக்ஷி மிகவு[illegible] தன் நன்[illegible]யைத் [illegible]றாடு, தா[illegible] வரப்போ[illegible] திருந்தாள்.

2

இன்று காமாக்ஷி வரும் நன்னாள்.

சர்மா காலையிலேயே எழுந்து மழ மழ வென்று க்ஷவரம் செய்து கொண்டு. நேர்த்தியான கதர் வேஷ்டியும், வெண்மையான கதர் ஜிப்பாவும், மஞ்சள் நிற[illegible]டு அங்க வஸ்திரமும் அணிந்து கொண்டு கம கம வென்று பரிமளம் வீசி, [illegible]லத்திலே வந்து உட்கார்ந்தா[illegible]. காரியாலயம் முழுவதையும் சுத்தம் செய்து அலங்கரிக்கச் சொன்னார். தாழ்வாரத்தில் பூஞ்செடிகளும், மேஜையின் மேல் பூங்கொத்துகளும் வைக்கப்பட்டன.

வண்டி ஒன்பது மணிக்கு வருகிறது. இப்போது மணி எட்டரை. ஒன்பதரை மணிக்கு அவள் இங்கே வந்து விடுவாள். இந்த மனக்கலக்கத்தில் சர்மாவுக்கு வேலையே ஓடவில்லை. அடிக்கடி கடிகாரத்தைப் பார்க்கிறார். பிறகு கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்து விட்டு, அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவுகிறார். மீசையில் நாலைந்து நரை மயிர்கள் இருப்பது இப்போதுதான் தென்படுகிறது. ஆனால் அவற்றை அகற்ற இப்போது எவ்விதச் சாதனமும் இல்லை. ‘பரவா இல்லை. இதனால் ஒன்றும் முழுகிப் போய் விடாது. சிரத்தையோடு கூடிய காதல் தான் நிலையாக நிற்கும். இளைஞர்களின் காதல் அதிக விலை கொடுத்து வாங்கும் பொருள். ஆனால் மகாத்மாக்களிடமோ அல்லது அதற்கு அண்மையிலுள்ளவர்களிடமோ வருபவர்களின் காதல் அதற்கு நேர் மாறானது; அது சில பொருள்களை அவர்களிடமிருந்தே வாங்கிக் கொள்ளும். இளைஞர்கள் விலையுயர்ந்த பரிசுகள் கொடுத்துச் சாதிக்கும் காரியத்தை இந்த மகாத்மாக்கள் ‘வெறும் ஆசீர்வாதத்தைக் கொண்டே சாதித்து விடுவார்கள்’ என்று சர்மா நினைத்தார்.

சரியாக ஒன்பதரை மணிக்கு வேலைக்காரன் ஒரு விஸிடிங் கார்டைக் கொண்டு வந்தான். அதில், “காமாக்ஷி” என்று பொறித்திருந்தது.

சர்மா அவளை அழைத்து வருமாறு உத்தரவு போட்டு விட்டு, மறுபடியும் ஒரு தடவை கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டார். பிறகு ஒரு பெரிய புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு அதிலேயே [illegible]பாய்ப் படிப்பவர் [illegible]கார். ஒரு [illegible] அறைக் [illegible] சர்மா [illegible]கரிய [illegible] பயந்து கொண்டே [illegible]கில் சென்றாள். அப்போ[illegible] சமாதி நிலையிலிருந்[illegible] விழித்துக் கொண்டவர் போல அவ[illegible] தடுக்கிட்டு எழுந்து நின்று அவளை வரவேற்றார். ஆனால் அவர் கற்பனை செய்திருந்த அந்த வடிவமல்ல இது!

கன்னங்கரிய, [illegible] வயது [illegible], [illegible] பெண் ஒருத்தி சர்மாவின் எதிரே நின்றாள். அவரை விழுங்கி விடுபவள் போல, அவள் அவரை [illegible] பார்த்தாள்.

சர்மாவின் உற்சாகம் முழுதும் ஆசை முழுதும்—தணிந்து போயிற்று. மாதக் கணக்காக அவர் குடித்துக் கொண்டிருந்த மனப்பால் இன்று அவர் வயிற்றில் அஜீர்ணத்தை உண்டாக்கி விட்டது. அவரால் ஒன்றும்பேச முடியவில்லை. ஆசிரியர்களின் வாழ்க்கை எருதுமாடுகளின் வாழ்க்கை போன்றது, தலை தூக்க ஓய்வில்லை. போதாக் குறைக்கு வேலை மிகுதியால் என் ஆரோக்கியமே கெட்டுப் போயிருக்கிறது. நேற்றிரவு முதல் தலைவலி சகிக்க முடியவில்லை. தங்களுக்கு நான் என்ன வரவேற்பு அளிக்க முடியும்?” என்று மட்டும் சொன்னார்.

காமாக்ஷியின் கையில் ஒரு பெரிய காகிதக் கட்டு இருந்தது.

கா. ஸ்ரீ. ஸ்ரீ.
மொழிபெயர்த்தது

அதை அவள் மேஜைமேல் எறிந்து, கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, மிருதுவான குரலில், “ஐயோ! இது என்ன பெரிய சங்கடமாகப் போய்விட்டதே! நான் என் தோழி ஒருத்தியைப் பார்க்க வந்தேன். அப்படியே வழியில் தங்களையும் தரிசித்துச் செல்லலாமென்று எண்ணினேன். ஆனால் தங்களுக்கு உடம்பு சரியில்லையே. சில நாட்கள் இங்கே தங்கியிருந்து, தங்கள் தேகம் ஆரோக்கியமடைந்த பின்புதான் நான் போக வேண்டும். ஆசிரியத் தொழிலில் நான் தங்களுக்கு உதவி செய்வேன். தங்கள் ஆரோக்கியம் பெண்ணினத்துக்கு மிகவும் மகத்துவம் வாய்ந்த பொருளாகும். தங்களை இந்த நிலையிலே விட்டு விட்டு நான் இப்போது போகவே முடியாது” என்றாள்.

இதைக்கேட்டதும்சர்மாவுக்கு ரத்த ஓட்டமே நின்று விட்டது போலவும் நாடி விழுந்து விட்டது போலவும் தோற்றியது. இந்த ஸ்திரீயோடு வாசம் செய்தால் வாழ்க்கையே நரகமாகி விடும். கவிதை எழுதப் புறப்பட்டு விட்டாள் இவள்! எப்படிப்பட்ட கவிதை? ஆபாசம் நிறைந்தது; அதோடு இல்லை; அடியோடு அழுகிப் போனது; துர் நாற்றம் வீசுவது. ஓர் அழகியின் பேனாவிலிருந்து உதித்திருந்தால் அதே கவிதை காமபாணமாக இருக்கும். இந்தப் பிசாசின் பேனாவிலிருந்து பெருகி அது சாக்கடைச் சேறாகி விட்டது. நான் கேட்கிறேன்: இவளுக்குத் கவிதை எழுத என்ன உரிமை இருக்கிறது? இவள் ஏன் இப்படிப்பட்ட கவிதை எ[illegible]ள்? இவள் [illegible] மூலை[illegible] [illegible] என்[illegible] கேட்கிறு[illegible] நான் கேட்கிறேன் [illegible] எவன் [illegible] வருவான்? இவளைத் [illegible]திலிருந்தே பார்த்[illegible]டு ஓ[illegible]மாட்டானா? என்ன [illegible]ப்பாது! தலையா, காலா—ஒன்றுமில்லை: சந்தமா, சீரா, தளையா—ஓர் இழவும் இவளுக்குத் தெரியாது. [illegible] கவிதை எழுத ஆரம்பித்து விட்டாள்; இவளுடைய உடம்பில் கவிதை வாசம் செய்தால் கழுதைகூடப் பாடத் தொடங்கிவிடுமே; ஒட்டகம் கூட நாட்டியமாடுமே. [illegible] பாடுவதற்கு அழகும் யௌவனமும் வேண்டும்; இனிமை வேண்டும்; நாசூக்கு வேண்டும் என்பதுகூட இந்த அறுதலிக்குத் தெரியவில்லையே. உடலோ பூதம் போல் இருக்கிறது: இரவில் எவனாவது பார்த்தால் பயந்து நடுங்கிப் போவான். இந்த அழகுக்கு வெறியூட்டும் பாட்டுகள் எழுதுகிறாள். ஒருவனுக்கு என்னதான் பசியாக இருக்கட்டும்; சாணத்தைத் தின்பானா?—போதாக் குறைக்கு இந்தத் தடிச்சி இத்தனை பெரிய புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வந்து விட்டாள். இதிலும் அதே சாக்கடைச் சேறுதான் இருக்கும்!’ என்று சர்மா எண்ணமிட்டார்.

அவர் அந்தப் பெரிய கிரந்தத்தைப் பார்த்துக்கொண்டே. “நான் தங்களைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. இது ஒன்றும் பிரமாதம் இல்லை. இரண்டொரு நாட்கள் இளைப்பாறினால் உடம்பு சரியாகி விடும். தங்கள் தோழி தங்கள் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருப்பாள்” என்றார்.

“தாங்கள் ஏன் இவ்வளவு சங்கோஜப்படுகிறீர்கள்? நான் நாலைந்து நாட்கள் கழித்துப் போனாலும் ஒன்றும் முழுகிப் போய்விடாது.”

“தாங்கள் இருக்கவேண்டிய அவசியமே இல்லையே!”

“தங்கள் எதிரிலேயே தங்களை ஸ்தோத்திரம் செய்வது சரியல்ல. ஆனால் தங்களிடம் நான் கண்ட குணங்களை எங்குமே பார்த்ததில்லை, என் கட்டுரைகளுக்கு ஆதரவு அளித்த முதல் கனவான் தாங்களே. இல்லாவிட்டால் நான் அடியோடு நிராசையடைந்திருப்பேன். தங்களுடைய தூண்டுதலின் பயனாகத்தான் நான் இத்தனை கவிதைகள் இயற்றினேன், தங்களுக்கு இவைகளில் எது வேண்டுமோ வைத்துக் கொள்ளலாம். நான் ஒரு நாடகம் கூட எழுத ஆரம்பித்திருக்கிறேன். அதையும் சீக்கிரமே தங்கள் பார்வைக்கு அனுப்பி வைப்பேன். இதில் நாலைந்து கவிதைகள் படிக்கிறேன், கேட்கிறீர்களா? மறுபடியும் இப்படிப்பட்ட தருணம் எப்போது கிடைக்குமோ? கவிதைகள் எப்படி இருக்கின்றனவோ தெரியாது. ஆனால் தாங்கள் கேட்டு ஆனந்தமடைவீர்கள். முன்பு எழுதிய அதே வகையைச் சேர்ந்தவை.”

அவள் அவருடைய உத்தரவை எதிர்பாராம[illegible], உடனே புத்தகத்தைத் தி[illegible] கவிதைகளைப் ப[illegible]த்தாள். சர்மாவுக்[illegible] தம்மைச் [illegible]டிப்பதுபோல [illegible]ரம் கழுதைகள் [illegible]ருதே நின்று [illegible] பாடுவதுபோல அவருக்குத் தோன்றிற்று. பல தடவைகள் அவருக்கு மயக்கம் வந்தது. காமாக்ஷியின் குரலில் குயிலின் இனிமை இருந்துங்கூட அது அவருக்குக் கொடுமையாகத் தோற்றியது. உண்மையாகவே அவருக்குத் தலை வலித்தது.

கடைசியில் அவரால் பொறுக்க முடியாமற் போகவே, “தங்கள் கவிதைகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இந்[illegible] கவிதைத் தொகுதியை இங்கேயே வைத்துவிட்டுப் போங்கள். நான் ஸாவகாசமாக அவைகளைப் படிப்பேன். இப்போது வேலை நிரம்ப இருக்கிறது” என்றார்.

காமாக்ஷியும் இரக்கத்தோடு, “தங்கள் ஆரோக்கியம் இவ்வளவு சீர்கெட்டிருந்தும் தாங்கள் இப்படி வேலைகளில் முனைந்திருக்கிறீர்களே. தங்களைக் கண்டால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது” என்றாள்.

“இது தங்கள் கிருபை.”

“நாளைக்குத் தங்களுக்கு ஒழிவு இருக்குமா? சற்று என் நாடகத்தைப் படித்துக் காட்ட எண்ணுகிறேன்.”

“ஐயோ, நான் நாளைக்குப் பிரயாகைக்குப் போக வேண்டுமே!”

“அப்படியானால் நானும் தங்களோடு வரட்டுமா? வண்டியில் படித்துக் கொண்டே வருவேன்.”

“எந்த வண்டியில் போவேனோ, நிச்சயமில்லை.”

“தாங்கள் எப்போது திரும்புவீர்கள்?”

“அதுவும் நிச்சயமில்லை”

பிறகு அவர் டெலிபோனில் சென்று, “ஹலோ, நம்பர் 77!” என்று பேச ஆரம்பித்தார்.

காமாக்ஷி அரை மணி நேரம் காத்திருந்தாள். ஆனால் சர்மா ஒரு கனவானோடு முக்கியமான விஷயங்கள் பேசிக்கொண்டிருந்தார்; அவர் பேச்சு முடிவதாகவே தோற்றவில்லை.

நிராசையோடு காமாக்ஷி விடை பெற்றுக்கொண்டாள். சீக்கிரமே மீண்டும் வருவதாகச் சொல்லிப் போனாள்.

அவள் போனதும் சர்மா தாராளமாக மூச்சு விட்டார். அந்தப் புஸ்தகத்தை எடுத்துக் குப்பைக் கூடையில் எறிந்து விட்டு, “ஈசுவரா, மறுபடியும் இவள் தரிசனம் கிடைக்காமலிருக்க வேண்டுமே! வெட்கமற்றவள்; கெட்டுப் போனவள்; இன்று இவள் என் ஆனந்தத்தையெல்லாம் கெடுத்துவிட்டாளே!” என்றார்.

பிறகு மானேஜரைக் கூப்பிட்டு, “காமாக்ஷியின் கவிதையை இந்த இதழில் போட வேண்டாம்” என்றார்.

மானேஜர் ஸ்தம்பித்துப் போய், “பாரம் மெஷினில் இருக்கிறதே!” என்றார்.

“பரவாயில்லை, பாரத்தை இறக்கிப் போடுங்கள்”

“மிகவும் தாமதமாகுமே”

“ஆகட்டும். அந்தக் கவிதை நமக்கு வேண்டாம்”

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி. குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தைத அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

ஜாம்-பெக் உபயோகித்து கால் உபத்திரவங்களை போக்குங்கள்

பிரதி இரவும் தவறாமல் தேயுங்கள்.

கால் வலி, கணுக்கால் வீக்கம், முதலியவற்றிற்கு ஜாம்-பெக் மெழுகிற்கு இணையொன்றுமில்லை. கணுக்கால், பாதத்தில் பிரதி தினம் தவறாமல் தடவி வாருங்கள். ஜாம்-பெக்கின் அற்புத மூலிகை எண்ணெய் சருமத்திற்குள் சென்று, வலி, புண்ணை சீக்கிரம்குணப்படுத்தும். காலில் ஆணி விழுதலைப்போக்கி, சௌகர்யமளிக்கின்றது. ஜாம்-பெக் ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

நாடகம்

ஞாயிற்றுக்கிழமை

ஜே. பார்த்தஸாரதி
எழுதியது

முதல் காட்சி

சனிக்கிழமை மாலை: சதாசிவம் அப்பொழுது தான் ஆபீஸிலிருந்து வந்த களைப்புடன் கோட்டைக் கழற்றிக் கொண்டிருக்கிறார். அறையில் மேஜையின் மேல் புத்தகங்களும், குழந்தைகளுக்குக் கரைத்துக் கொடுக்கும் மருந்து சீசாக்களும் அலங்கோலமாகக் கிடைக்கின்றன.

சதாசிவம்:— (தனக்குள்ளே) இன்னிக்கி அந்த மானேஜரை பல ஜோராகக் கைக்குள்ளே போட்டுண்டாச்சு. (தலையைச் சொரிந்துகொண்டு) அடேடே, நாளை அவன் பொண்ணுக்குக் கலியாணம் என்று முகூர்த்தப் பத்திரிகைகூட வந்திருக்கிறதே. ஞாயிற்றுக்கிழமை யோல்லியோ மணி கூட வீட்டுக்கு வரேன்னுன்: எப்படியும் டயரியைப் பார்க்கலாம். (அலமாரியிலிருந்த டயரியைப் புரட்டி) பகல் மூன்று மணிக்கு வேறே நம்மாபீஸ் குமாஸ்தாக்கள், மானேஜர் 'ராவ் பகதூர்' டைடில் பெற்றதற்குத் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவிக்கக் கூடப்போகிருர்கள். அங்கிருந்தே ஐந்து மணிக்கு, அவன் பொண் கலியாணத்துக்கும், ஏதோ ஒரு 'பிரஸண்டு' கொண்டு போகப் போகிருர்கள். சரி, தடபுடல் தான். (கைப்பிடியில்லாத ஓட்டை நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு) ஏய் சீதா! உள்ளே என்னமோ ஆடிப்பாடிண்டு அட்டகாசம் பண்றயே, ஆள் வந்தது தெரியல்லியோ?

சீதா:—இதோ வந்துட்டேன். மன்னிச்சுகுங்கோ. (காபியை ஆற்றிக்கொடுத்துக்கொண்டே) மளிகை சுப்புச் செட்டியும், ஜவுளி அருணுசலம் பிள்ளையும் பிராணனை வாங்கி மானக் கேடாப் போச்சு இன்னிக்கி, 'எல்லாம் தெரியும் ஓங்க லச்சணம்' எங்கிருன் ஒத்தன். இந்த வீட்டிலெ எப்பவும் இப்படித் தான்.. சொன்ன பேச்சுக்கு மதிப்புக் கிடையாது, எங்கிருன் இன்னொத்தன். நாளை ஞாயிற்றுக்கிழமையாச்சே, நீங்க போயி அந்த ஜோஸ்யர் தர வேண்டிய பணத்தை அடிச்சு பிடிச்சு எப்படியாவது வாங்கிக்குண்டு வந்தாத்தான்! வைத்தியும் ராதாவும் சட்டை கிட்டை ஒண்ணுமில்லாதெ நிக்கிறதுகள், பிச்சைக்காரன்கூடத் தேவலை நம்ம நிலைமைக்கு. நாளைக்கு அதுகளுக்குச் சட்டையாவது அந்தப் பணத்திலெ வாங்கித் தரணும்.

(குழந்தைகள் வைத்தியநாதனும் ராதாவும் 'அப்பா வந்துட்டாளே' என்று கத்திக்கொண்டு ஓடி வருகின்றன.)

வைத்தி:—(அப்பா சதாசிவத்தின் மடிமேல் ஏறி, மோவாக்கட்டையைப் பிடித்து) வாத்தியார் 'காபி நோட்' இல்லேன்னு என்னைக் கிளாஸை விட்டு வெளிலே துரத்திவிட்டாரப்பா. (விம்மிக்கொண்டே) நாளைக்கு 'பாலன்' கடைக்குப் போய் ஒரு 'காபி நோட்' வாங்கித் தரணுமப்பா.

ராதா:—(முழங்காலைப் பிடித்து ஆட்டி) அப்பா, இங்கே பார்க்கமாட்டேங்கறேளே, நாளைக்கு எங்க ஸ்கூல்லே தையல் சொல்லித் தரப்போருளாம், எனக்கு ஊசி, நூல், கத்திரிக்கோல், எல்லாம் வாங்கித்தா. இல்லாட்டா, வைத்திக்கி மேலே அழுவேன்.

சதாசிவம்:—(வைத்தியைப் பார்த்து) கீழே இறங்குடா, படவா, (ராதாவிடம்) எல்லாம் ஆகட்டுண்டீம்மா, தள்ளிக்கோ.

(யோசனையிலாழ்கிருர்)

சீதா:—என்ன, உங்களைத் தான். தபஸ் பண்றேளா, என்ன? தங்க விக்ரகம் மாதிரி இரண்டு குழந்தைகளைப் பெற்று விட்டு, தபஸ் கூடவா செய்யறேள்? நாளைக்கு லீவு நாளாச்சே, எங்கே போகலாம்னு பிளான் போட்றேளா?

சதாசிவம்:—ஆரம்பிச்சுட்டியா நீ. உள்ளே போ.

சீதா:—என்னைக் கண்டாத் தான் உங்களுக்குப் பிடிக்கல்லியே. தொலைஞ்சு போரேன் வைத்தி, ராதா வாம்மா.

(உள்ளே போகிருள். சதாசிவம் மௌனமாக விருக்கிருர்.)

இரண்டாம் காட்சி

ஞாயிற்றுக்கிழமை. பகல் 11-மணி. சதாசிவம் உண்ட களைப்பில் ஈசிசேரில் சற்று கண்ணயருகிருர். அவர் மனைவி சீதா முன் நிற்கிருள்.

சீதா:—சரிதான், ஞாயிற்றுக்கிழமை யோல்லியோ, தூக்கம்பலம் தான். எப்பத்தான் இந்தநித்ராதேவி உங்களை விடப் போருளோ? நீங்க என்னைக் கலியாணம் பண்ணிண்டேளா, இல்லை, [illegible]த்தையா?

([illegible] ராதாவும் ஒருவ[illegible] மயி[illegible]ரைப் பிடுங்குக் கொண்டு ஓடி வருகிருர்கள்.)

ராதா:—பாரு, அம்மா, நான வச்சிண்டிருந்த பொம்மையெல்லாம் தூக்கிக் காலெட்டு உதையருன் வைத்தி. அம்மாட்டே சொல்றேன்னு சொன்னுக்கெ, அடிக்க வரான். நான் பேசாமெ எம்பாட்டுக்கு விளையாடினுக்கே இவனுக்கென்ன? இவன் தாம் [illegible] முதல்லே அடிச்சான்.

வைத்தி:—அம்மா, அம்மா, நான் சொல்றத்தைக் கேக்கிறயா, அவ சொல்றத்தைக் கேக்கறயா? பொம்மை வச்சு விளையாட்றேன்னுட்டு நேத்தி நீ அல்வாக்கிளறி உறியிலே வச்சிருந்தியே, அதைத் தட்டிலே எடுத்துண்டு வந்துட்டா, பொம்மை சாப்பிடணுமாம்.

சீதா:-(பெண்ணுக்கு இரண்டடி கொடுத்துக் கொண்டு) ஏண்டீ, திருடீ, உண்மையைச் சொல். அல்வா வேணும்னு, கேட்டா எடுத்துத் தரேன். ஆத்திலே ஒண்ணும் பக்ஷணங் கிக்ஷணம் பண்ணிப் போடறதில்லையா உங்களுக்கு? அதென்னடீ, பொம்மனுட்டிக்கு இவ்வளவு திருட்டுத்தனமும் வாய் நீளமும்! (வைத்தியை காதைப் பிடித்துத் திருகி) துஷ்டப் பயலே, உன் சேஷ்டைக்கு எங்கடா முட்டிக்கிறது! அவளை என்னத்துக் குடா அடிக்கிறே?

சதாசிவம்:—(நாற்காலியில் புரண்டு கொண்டு) இதென்னடா, ஞாயிற்றுக்கிழமையாருக்கு, செத்தெ படுத்துப்போம்னு, இந்தப் பசங்களும் இவளுமா சேர்ந்துண்டு கண்ணயர விடமாட்டேங்கரு. ராதா, வைத்தி, போ வெளிலே...ச் ச் ச்...(பெருமூச்சு விடுகிருர். குழந்தைகள் வாயிற் கதவண்டை போகின்றன.)

சீதா:—இதென்ன தூக்கம், ராத்திரி யெல்லாம் தூங்குகிறது, பகலெல்லாம் தூங்கறது, வேலையா இல்லை பண்றதுக்கு? ஆத்திலே பணம்கிணம் இருக்கா ஒரு யோசனை கிடையாது. குடும்பம் நடக்கணுங்கிற கவலை இருந்தான்னு? முத்து மாதிரி இரண்டு குழந்தைகளிருக்கே, படிப்பு செ[illegible]டுத்தா என்ன? ஞாயிற்[illegible] அதுகளும் [illegible]க்கும்.

[illegible] வ[illegible]ளிக்கி [illegible]ருக்குப் படிப்புச் [illegible]தரணும். அப்புறம் உன்[illegible]ருக்கு ஜலம் கொ[illegible]டணும் [illegible] கூட சொல்லு[illegible]வ. ஞாயிற்றுக்கிழமைக்குள்ளே வீட்டையே புதிசாக் கட்டணும் போலிருக்கே. ஒரெழவும் முடியாது. நான் வெளி

(அ[illegible] பக்கம் பார்க்க)

தொழிலாளர் பிரச்னை பரிசீலனைக் கமிட்டிக் கூட்டம் இம் மாதம் முதல் தேதியன்று டில்லியில் நடந்தது. டாக்டர் அம்பேத்கார் தலைமை வகித்தார். இதற்கு மாகாணங்களிலிருந்தும் சமஸ்தானங்களிலிருந்தும் பிரதிநிதிகள் சென்றிருந்தனர்.

நீதிக் கதைகள்

நீதிஸ்தலம்

ஸ்ரீ எ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ்.
எழுதியது

துஷ்யந்தனுடைய மகனுகிய பரதன் என்பவனே முதன் முதல் இந்தியா முழுவதையும் ஆண்ட சக்கரவர்த்தி. அதனுல் தான் இந்தியாவை பாரத வர்ஷம் என்று அழைக்கின்றனர். பரத சக்கரவர்த்தி ஒருநாள் சபாமண்டபத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். நீதிபதிகளினுல் தீர்ப்பளிக்க முடியாத, சட்டத்தின் எல்லைக்குள் வராத, சிக்கலுடன் கூடிய பல வழக்குகளை ஆராய்ந்து பரத சக்கரவர்த்தி தீர்ப்பளித்துக் கொண்டிருந்தார். கௌசாம்பி என்னும் பெயருடைய வயதான பிராமணனும், அவனுடைய மகனும் முதல் வழக்கில் சம்பந்தபபட்டிருந்தனர். அவர்களிருவருக்கும் ஆஸ்திபாகமாகாமலிருந்தது. தன் மனைவியினுலும், மகனுலும் சரியாக நடத்தப்படாத காரணத்தினுல், கௌசாம்பி என்னும் பிராமணன், தன் வீட்டையும், ஆஸ்தியையும் விட்டு விட்டு வெளியே போய் விட்டான். மனச்சமாதானத்தையும் புதிய வாழ்க்கையையும் ஜீவனோபாயத்தையும், அடைய வேண்டி அவன் அந்த நகரத்தில் தெருத் தெருவாய் அலைந்து கொண்டிருந்தான். சில ஸ்லோகங்களையும், முகஸ்துதிப் பாடல்களையும் நன்ருக எடுத்துச் சொல்லி அவன் ஒரு தனவந்தரான வியாபாரியின் மனதிற்கு சந்தோஷத்தை உண்டுபண்ணினுன். அந்த வியாபாரி, பிராமணனுக்கு ஒரு நல்ல பசுமாட்டையும் கன்றுக்குட்டியையும் கொடுத்தான். கௌசாம்பியின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்த அவனுடைய மனைவிக்கும் மைந்தனுக்கும், மேற்கூறிய சமாச்சாரம் எட்டிற்று. உடனே மகன் தந்தையிடம் சென்று அந்த பசுவின் பாலில் பாதியையும், பசுவில் பாதியையும், கன்றில் பாதியையும், தனக்குக் கொடுக்கும்படிக கேட்டான். தந்தை அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர்கள் நீதிபதிகளிடம் சென்று முறையிட்டுக்கொண்டனர். பிறகு அவர்கள் சக்கரவர்த்தியிடம் சென்று தங்கள் வழக்கைச் சொல்லிக் கொண்டனர். 'முன்னேர்களாகிய முனிவர்களின் வாக்கியப்படி எனக்குச் சேர வேண்டிய பாதியை நான் எனக்குக் கொடுத்துவிடும்படி கேட்கிறேன்' என்று மகன் சொன்னுன். 'பசுவைக் கொடுத்தவன், அதில் பாதி உனக்குச் சேர வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தானு?' என்று பரத சக்கரவர்த்தி கேட்டார். 'இல்லை' என்ருன் மகன். 'உங்களிருவருக்கும் பொதுவாக இருக்கும்படியாவது சொல்லி அந்தப் பசு கொடுக்கப்பட்டதா?' என்று சக்கரவர்த்தி கேட்டார். 'இல்லை சட்டப்படி அந்தப் பசுவில் பாதி என்னைச் சேர்ந்ததென்று நான் கேட்கிறேன்' என்ருன் கௌசாம்பியின் மகன். 'அந்தப் பசுவை உன் தகப்பனுர் பெற்றுக் கொள்ளும் போதாவது நீ அருகில் இருந்தாயா?' என்று சக்கரவர்த்தி கேட்டார். 'இல்லை' என்றுமகன் பதில் சொன்னுன். 'அந்தப் பசுவை மேய்ப்பதிலும், அதன் பாலைக் கறப்பதிலும் நீ உன் தகப்பனுருக்குச் சகாயம் செய்ததுண்டா?' என்று சக்கரவர்த்தி கேட்ட கேள்விக்கும் மகன் 'இல்லை' என்று பதிலளித்தான். அதைக் கேட்டு சக்கரவர்த்தி பின் வருமாறு தீர்ப்பளித்தார்: 'அப்படியானுல் பசுவும் கன்றும் உன் தகப்பனுர் சுயார்ஜ்ஜிதமாகச் சம்பாதித்த பொருள்களாகக் கருதப்படும். அவர் உயிருள்ளளவும் அவர் இஷ்டம் போல் அவைகளை அனுபவிக்க அவருக்கு அதிகாரமுண்டு. உனக்கு சாப்பாட்டிற்கே வழியில்லாமல் போகும் நிலைமை வரும் வரையில் அவர் தான் சம்பாதித்த சொத்துக்களை அனுபவிக்கலாம். நிலம், பசு முதலிய மிருகங்கள், ஒருவனுடைய சுயார்ஜ்ஜித ஆஸ்தியாக இருந்த போதிலும், அவனுக்கு பிறந்திருக்கும் குழந்தைகளுக்கும் பிறக்கப் போகும் குழந்தைகளுக்கும், அந்த ஆஸ்தியில் பங்கு உண்டு. அவர் இறந்து போன பிறகு, பசுவும் கன்றும் உயிருடனிருந்தால், உன்னையே சேரும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. சட்டப் பிரகாரம் உன்னுடைய உரிமையைக் கூறிவிட்டேன், உன்னுடைய கடமையைக் குறித்து சிறிது சொல்கிறேன் கேள். அவர் உன்னுடைய தகப்பனுர்; வயதான கிழவர்; பாடுபட்டு உழைத்து சம்பாதிக்கக்கூடிய சக்தியில்லாதவர்: நம்முடைய சட்டப்பிரகாரம், அவருக்கு நல்ல உணவளித்துக் காப்பாற்ற வேண்டிய கடமை உன்னுடையது. ஆஸ்தி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவருக்கு அன்னவஸ்திரமளித்து

(18-ம் பக்கம் பார்க்க)

ஞாயிற்றுக்கிழமை
([illegible])

[illegible]யிலே [illegible]கணும். [illegible] எவ்வளவோ இருக்கு[illegible].

சீதா:—எப்பவும் [illegible]ளியிலே போறது தான் [illegible]ன் ஒத்தி வெ[illegible] பெண்டாட்டி இருக்கேனே? என்னெ[illegible]ன் னிக்கானும் ஒரு பிரியமான வார்த்தை உண்டா? ஞாயிற்றுக்கிழமைன்னு ஒவ்வொத்தர் எவ்வளவோ [illegible]ருப்பா. எப்[illegible]ப்பா ஞாயிற்றுக்கிழமை வரப்போரதுன்னு ஒவ்வொத்தன் காத்துக்கொண்டிருப்பான். (கண்களில் [illegible]படும் நீர்த்துளிகளை துடைத்துக்கொண்டு)—அதெல்லாம் உங்களைச் சொல்லி என்ன பண்றது என் பூஜாபலன்.

சதாசிவம்:—என்ன ஆகாத்தியம் பண்ண ஆரம்பிச்சுட்டே?

சீதா:—ஆகாத்தியமா பண்றேன். உங்களுக்கே வெட்கமாயில்லியா? நான் 'முழுமூடங்கிறதுனுலே தான் கவனிக்காமே இருக்கேள்? ஒவ்வொத்தன் ஞாயிற்றுக்கிழமைன்னு பெண்டாட்டியை சினிமாவுக்கு அழைச்சிண்டு போருன். அது தான் போறது, நம்ம தரித்திரத்துக்கும் அதுக்கும் ரொம்ப தூரம்னு, தன் வீடுங்கிற நினைப்புக் கூடவா கிடையாது? நானும் எவ்வளவோ நாள் பார்த்தாச்சு. லீவு நாளுன்னு குறட்டை வி[illegible] ஆபீஸ் நாள்னு ச[illegible]த்துக்கு பத்து[illegible]ன் அவசரம் அவசரமா சோற்றை வெந்ததும் வேகாததுமா கொறிச்சுட்டு ஓடறது. [illegible]மசுந்தரமுண்டா, பாலசுப்பிரமணியனுண்டானு அலையுறது, அவர்களோடே என்னமானும் ஊர் கலாட்டாவைப்பற்றி காட்டுக்கும் மோட்டுக்கும் பேசறது. எங்கிட்ட வந்தா மாத்திரம் வாயடைச்சுப் போறது.

சதாசிவம்:—சரியான நாள் பார்த்து உன் புராணத்தை அவுக்கறே. ஞாயிற்றுக்கிழமைன்[illegible] வீட்டிலே நிம்மதி கிடையாதா? குழந்தைகளுக்கு வேறே இன்னிக்கிதான் குஷி.

சீதா:—நன்னு இன்னும் இரண்டு குழந்தைகள் பிறந்து குடும்பத்திலே ஆப்பிட்டுக்கிண்டா, இந்தத் தூக்கமும் அலக்ஷயமும் எங்கிருந்து வரும்? நீங்க இன்னிக்கி எங்களை கவனிச்சுத்தான் ஆகனும். ஓரிடத்துக்கும் போகமுடியாது.

சதாசிவம்:— ஞாயிற்றுக்கிழமைன்னு அம்பாள் முகவிலாசம் எப்போன்னு காத்துண்டு இருக்கனும் போலிருக்கு. நீ என்ன விளையாட்டுக்கு வீம்பு பண்றயா, இல்லே நிஜமா ஏதானும் பைத்தியம் 'பிடிச்சுடுத்தா?.... நான் ஆபீஸ் மானேஜர் வீட்டுக்கலியாணத்துக்குப் போகணும். மணிகூட வர்ர டயம்.

(கதவு தட்டும் சப்தம் கேட்கிறது. சீதா உள்ளே போகிருள்.)

யாரப்பா, மணியா, உள்ளே வந்து உட்காரேன். ஆபீஸ் சங்கம் எப்படி?

மணி:—சங்கம், கிங்கம் எல்லாம் பறந்து போச்சு. நான் இன்னிக்கி ஒரெடத்துக்கும் வர முடியாதுன்னு சொல்லத்தான் வந்தேன். என ஆம்பிடையாளை இப்பதான் கலியாணமான மாதிரி நினைச்சுண்டு, ஸினிமாக்குப் போகணும்னு பிராணனை வாங்கரு.

சதாசிவம்:—அதென்ன நீ கூட ஆரம்பிச்சுட்டே இந்த மாதிரி. பெண்டாட்டியை அடக்கி ஒடுக்கி வச்சிருக்கணும்னு சொல்வையே.

மணி:—பழங்கதையை இப்பென்னத்துக்கு கிளர்ரே? கலியாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னிருந்த விரைப்பெல்லாம் பெண்தெய்வத்துக்கு முன் நிற்குமா என்ன? நான் போறேன்.

(அவசரமாகப் போகிருன்.)

சீதா:—(உள்ளிருந்து வந்து) பார்த்தேளா, உங்களைத் தவிர லோகம் முழுக்க சுகமாகத்தானிருக்கு.

சதாசிவம்:—ஏச வந்துட்டியா? என்னிஷ்டப்படி இந்த வீட்டிலெ என்ன நடக்கிறது? போய், முதல்லே சூடான காப்பியைக் கொண்டு வந்து தொலை.

(சீதா உள்ளே சென்று சூடான காப்பியைக் கொண்டு வருகிருள். குழந்தைகள் வைத்தியும் ராதாவும் அப்பா, இன்னிக்கு எங்கே கூட்டிண்டு போறே? என்று கூச்சலிட்டுக் கொண்டு ஓடி வருகின்றன.)

சதாசிவம்:—ஏண்டாப்பா இந்த ஞாயிற்றுக்கிழமை வந்து சேர்ரது? சீதா, உன்னிஷ்டப்படி வெளிலே போறதுக்கு டிரஸ் பண்ணிக்கோ. மானேஜர் வீட்டுக் கலியாணத்துக்கு குழந்தையும் குட்டியுமாப் போய் காட்சி கொடுக்கலாம்.

பக்தியா-பாசமா?

★ ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி எழுதியது

சேர நாட்டில் செங்கன்றாரில், வார வேளாளர் தம் மரபில் வந்துதித்த விரமாண்டார் திரு ஆரூரில் வசித்து வந்தார். அங்கு வசித்த சிவபெருமானிடம் அளவில்லாத அன்பு கொண்டு வாழ்ந்திருந்தார்.

ஆரூரில் ஒரு தாஸி வீடு; சுந்தரமூர்த்தி நாயனர் பரவையென்னும் தாஸியிடம் மிகுந்த அன்போடு, "அடீ! என் கண்ணுட்டி, ஒரு பாட்டுப் பாடு" என்கிறார்.

பரவை:—காந்தா! என்ன பாடுவது?

என் சுவாமி நடராஜர் மேல் பாடு.

"என்ன மோகமடி உனக்கு
என் நடராஜ ஸ்வாமி
மீதில்—(என்ன)

சின்ன வயதடி சிவகாமி, சேரப் பருவமில்லையே என்ன யோசனையடிமாதே—இது ஸரியல்லவடி மானே—அன்னை ஸகிப்பாளோடி? அருந்தவம் செய்வதற்கு சொன்னேனடி யுனக்குப் பொன்னம்பலத்திலாடின—கண்ணப்பனுக்குக் காக்ஷி கொடுத்த வரடியவர்—கண்ணனைப் பெண்ணுக்கிப் புணர்ந்தவரடி யவர். கண்ணென்று நெற்றியில் தரித்தவரடி யவர். பண்ணுத காரியம் பண்ணுவர் அவர் மீதில் (என்ன மோசமடி")

சுந்தரர்:—ஆனந்தம்! பிரமானந்தம்! எனது பேரை என்ன சொல்வேன். அடி எனது உயிர்த் தோழி! இன்று எனக்கு உன் கையினல் அலங்காரம் செய்யடி கண்ணே! நாளைக் காலையில் எனது நண்பனுக்கு அதைக் காண்பிப்பதாகச் சொல்லியிருக்கிறேன்.

பரவை:—அலங்காரப் பஞ்சணையிலுட்காரும் ஆசையுடன் தாம்பூலம் தாரேன், சிவனுக்குகந்த உத்தமரே. என் சித்தத்துக்கிசைந்த சுந்தரரே! வாசம் மிகுந்த சந்தனமும் வாடாத மலர் மாலையும் சூட்டி மகிழ்ந்தேனே-இதை சொக்கர் கண்டால் மகிழ்வாரே.

சுந்தரர்:—"என்ன அலங்காரமடி-கண்ணே
என்ன அலங்காரமடி.
ஈசனும் கண்டு மகிழ்
வானே—யிதை
ஈசனும் கண்டு மகிழ்வானே"

திருவாரூரில் காலை மணி ஆறு. கோவில் மணி கண கணவென்றடிக்கிறது. செங்கம் பாண்டி சங்கை பம்பம் என்று முழங்குகிறார்கள். விப்பிரர் வேதமோதுகிறார்கள். நாரீமணிகள் கடவுளை வணங்கி பதிபூஜை செய்து வீட்டு வேலைகளில் ஈடுபடுகிறார்கள்.

விரமிண்டர் வருகிறார் ஆற்றங் கரைக்கு; பாடுகிறார். "சந்திரசேகர! சந்திரசேகர, சந்திரசேகர பாஹிமாம்—சந்திரசேகர, சந்திரசேகர, சந்திரசேகர ரக்ஷமாம்" (ஸ்நானம் முடித்து பரிதியை வணங்குகிறார்) "ஸூர்யம்—சுந்தரம் லோகநாத மமிர்தம் வேதாந்த சாரம்—சிவம்—ஞானம் பிர்ம்மயம் லோகைக சித்த ஸ்வயம் இந்திராதித்ய நராதிபம்—சுரகுரும் வந்தே ஸதா பாஸ்கரம். வீர்யம்மே தேஹி! பலம் தேஹி!" வீபூதி ருத்ராக்ஷமணிந்து பட்டுடுத்தி கோவிலுக்கு வருகிறார். பக்திபரவசத்தினல் பகவானைத் துதிக்கிறார்.

"மாதர் பிறைக் கண்ணி யானை
மலையன் மகளொடும் பாடி
போதொடு நீர் சுமந்தேத்தி
புகுவரவர் பின் புகுவே.

என்னப்பனே நீல கண்டா—மார்க்கண்டனுக்காக மறலியை யுதைத்தாய்—தேவருக்காக ஆலால முண்டாய்—கண்ணப்பனுக்கு முக்தி யளித்தாய்—பெரிய ரதத்தைக் காலாலுதைத்தாய்—திருபுரத்தைச் சிரித்தெரித்தாய், தாருகாவனந்தனில் தவம் செய்த ரிஷிகளை கர்வபங்கம் செய்தாய், மகா காளியை யடக்கி வெற்றி கொண்டாய்—உனது பெருமை அளவிடற்கரியது—உவமையிலாதது - ஒப்பிட முடியாதது—ஈசுவரா உன்னை நம்பினேன், ஆண்டருள வேண்டும்...சிவ, சிவ, சிவா,.....ஜபம் செய்கிறார்—(உள்ளே ஸ்வாமியின் கர்ப்ப கிரஹத்திலிருந்து பின் வரும் சப்பாஷணை விரமிண்டர் காதில் படுகிறது.)

சொக்கர்:—சுந்தரம். வா, என்ன அழகு-எவ்வளவு ஜோர்—ஓய்யாரம், உனது பக்தி மெய்யானது—விடிந்ததும், ஸ்நானபானமும் செய்யாமல் ஓடி வந்தாயே—உன்னைப்போல் எனக்கு உகந்தவர் ஒருவருமில்லை.

சுந்தரர்:—உயிர்த்தோழா! பரவை வீட்டில் நேற்று களியும் கூத்தும் நடைபெற்றன. இரவு வெகு நேரம் கண் விழித்துத் தூக்கமே கிடையாது. நான் இன்னும் பல்கூட துலக்கவில்லை நான் வரவில்லையென்று நீ கோபித்துக் கொள்வாயென்றே ஓடி வந்தேன்.

சொக்கர்:—அன்பா! என் பக்தனுக்கு காவித் துணி வேண்டாம், கற்றைச் சடை வேண்டாம் வெளிவேஷத்தில்—எனக்குப் பிரியமுண்டாகாது. ஹிருதயத்தின் ஆழத்திலுள்ள அன்பே எனக்குத் தேவை, உன் தேகம் எத்துணை அசுத்தமாயிருந்தாலும் உள் அகம் மாசின்றி தெளிந்திருக்கிறது. நீ எனக்கினியவன். (ஆலிங்கனம் செய்துகொள்ளுகிறார்.)

விரமிண்டர் திடீரென்று கண்விழித்து, சுந்தரரும் சொக்கரும் ஆலிங்கனத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். வெகுண்டார். நெஞ்சில் அனல் கொண்டார். குமைந்தார்; மெய் வியர்த்தார்; கொன்று விடலாமென்று துணிந்தார். 'அடே துஷ்டா, என்ன காரியம் செய்தனை? இத்தனை பக்தரும் பிரார்த்தனை செய்து கொண்டு நிற்கும் போது அந்தப் பதிதன் பல் துலக்காமலும், ஸ்நானம் செய்யாமலும் வந்தான். என்ன துணிவு! இந்த தியாகேசன் அவனேடு உறவாடுகிறார். குலாவுகிறார். நன்று, பக்தர்களே! பிடியுங்கள் அந்தப் பயலை நன்ருகப் புத்தி வருத்துவோம்." திடீரென்று மூலஸ்தானத்து, கர்ப்பக் கிரஹத்திலிருந்து பின்னல் ஒரு வாசல் திறக்கிறது. அதன் வழியாக சுந்தரமூர்த்தி ஓடி வருகிறார். அடிப்பதற்கென்று முன்புறக் கதவை உடைத்துக் கொண்டு வந்த வேதியர்கள் யாவரும் சுந்தரரைக் காணுமல் ஏமாற்ற மடைந்து வெட்கி நிற்கிறார்கள். விரமிண்டர், ஏற்பட்ட அவமானத்தினல், கோப மூட்டப் பெற்ற புலியைப் போல் சீறி சுந்தரமூர்த்தியைத் துரத்தப் புறப்பட்டார். சுந்தரம் இதற்குள்ளாக வெகு தூரம் சென்றுவிட்டபடியால் கோபத்தை தியாகேசன் மீதில் திருப்பி வெகு வைராக்யத்தோடு, சபதம் செய்கிறார்.

" திருவாரூரினையும்
மிதியேன்
தியாகேசன் தன்னையும்
துதியேன்
பரவை நாதனையும்
மதி[illegible]
பக்த[illegible]ம்
ஸம்[illegible]
இன்[illegible] அய்னா
செல்வேன்" என்று

செல்கிறார்:—

விரமிண்டர் வீடு. நடுப்பகல். அவர் மனைவி அறுசுவையுண்டி தயாரித்து, ஆண்டவனைத் தியானித்துக் கொண்டிருக்கிறாள். "ஹே கருணநிதே! என் கணவர் பிடிவாதமான முரட்டுக் குணத்தினல் உனது தரிசனத்தை இழந்தார். அவர் மனது அரைக்கணமும் நிம்மதியாய் இல்லை. என் மனமும் ஒவ்வொரு கணமும் துடிக்கிறது. செய்யும் வகையுமறியேன். உன்னைப் பிரிந்து உயிர்வாழ்தல் சாத்யமா? உயிரற்ற உடம்பைப் போல் யந்திரம் தன் தொழிலைச் செய்வதுபோல் நாளைக்கழித்து வருகிறோம். என் செய்வேன். இதற்கெல்லாம் காரணம் கேவலம் ஜாதியபிமானமும், தன் மதிப்புமல்லவா? கணவரோ எவ்வளவு கூறினலும் தான் பிடித்த பிடியை விடார். என் செய்வேன். பரமசிவனே! ஏழைக்கிரங்கமாட்டாயா? அதுவும் என் போன்ற பேதைக்கிரங்காயோ பெண்ணென்ருல் பேயுமிரங்காதோ? இன்று என்ன காரணம் வெளியே சென்ற கணவரும் வரவில்லை. அதிதிகள் ஒருவரும் வரக் காணேம். இன்று என்ன சோதனையோ?"

தியாகேசன்:—அம்மா பசிக்கிறது, அன்னமிடு.

மாது:—சிவனடியாரே! வாரும். கணவர் வரும் நேரமாயிற்று. ஸ்வாமி தங்களுக்கு எந்த ஊர்? எங்கு வசிப்பது? தயவு செய்து கூறுங்கள்.

சிவனடியார்:—'மாதரசி!
அழகிய
செல்வ[illegible] திருவாரூர்
அன்புடன் நான்
இருந்திடும்[illegible]

(அடுத்த பக்கம் பார்க்க)

பரத நாட்டியம்
ஸ்ரீமதி சாந்தா
(வித்வான் ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை சிஷ்யை)
மியூஸியம் தியேட்டரில்
சங்கீதம்: லலிதா வெங்கடராம்
டிஸ. 18உ வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு
கட்டணம்: ரூ. 10. ரூ. 5. ரூ. 3. ரூ. 2.

கே. சுவாமிநாதன் & கோ
24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
ரைஸ் மில், மாவு மில, சீககாய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.
சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T. மதராஸ்.
பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

குட்டிக் கதை

சமாதானம்!

★ ★ "ரேவதி" எழுதியது

ஜெயலக்ஷிமி புறண்டு படுத்தாள். பிறகு எழுந்து உட்கார்ந்தாள். ஒரு நிமிஷத்திற்கு நாம் எங்கே இருக்கிறோம் என்பதே அவளுக்குப் புரியவில்லை. பிறகு, இரவு நடந்த சம்பவங்கள் நினைவு வர, மனம் கசந்தாள்.

"பொழுது வெடியப் போரது! இனிமே இங்கே இருக்கக் கூடாது!" என்று தீர்மானித்தாள். அவள் அத்தை நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தாள். ஜெயலக்ஷிமி ஓசைப்படாமல் கதவைத்திறந்து வெளியே வந்தாள். நதியை நோக்கி விரைந்து நடந்தாள். நதிக்கரையில் இருந்த ஒரு மண்டபத்தில் உட்கார்ந்து, யோசனையில் ஆழ்ந்தாள்.

"பாவம்! முரளி என்ன பண்ணரதோ? கமலி என்ன செய்யராளோ? அவர் ராத்திரி சாப்பிட்டாரோ, இல்லையோ? சீ, இவர்களைப்பற்றி நினைப்பதில்லை!" என்று எண்ணினுள்.

ஜெயலக்ஷிமிக்கு வயது இன்னும் இருபதாகவில்லை. அவள் கணவன் கோபாலனுக்கு ஒரு கம்[illegible]யில் ஐம்பது ரூபா சம்[illegible] இவர்களுக்கு நான்கு [illegible] கமலி, இரண்டு வயது [illegible] இரண்டு குழந்தைகள். சமீபகால[illegible] வரையில் இவர்கள் வாழ்க்[illegible] போக்கியமாக[illegible]ந்தது. செட்டாகக் குடித்தனம் செய்து கூடிய [illegible] ஒரு சிறிய தொகையை மீத்து, தம்பதிகள் மனமொத்து வாழ்ந்தார்கள்.

கோபாலன் ஒரு நாள் நேரங்கழித்து வீடு திரும்பினன். வேலை அதிகம் என்றே முதலில் ஜெயலக்ஷிமி எண்ணினுள். பிறகு, தான் ஒரு சிநேகிதனுடன் குதிரைப் பந்தயம் சென்றிருந்த[illegible]வும், அன்று இரண்டு ரூபா[illegible] நஷ்டம் என்றும் கோபாலன் சொன்னன்,

ஜெயலக்ஷிமிக்குத் தலை சுழன்றது. குதிரைப் பந்தயப் பேய் தன் கணவனைப் பிடித்துவிட்டதாகவே எண்ணினுள். அவன் எல்லாவற்றையும் பந்தயத்தில் இழக்க, தானும், குழந்தைகளும் தெருவில் அநாதையாகத் தவிப்பதாக மனதில் சித்தரித்துக் கொண்டாள். கோபாலனைப் பல வாறு நொந்து கொண்டாள். அவனுக்கு முதலில் சிரிப்புத்தான் வந்தது. பிறகு கோபித்தான். இதுவே அவன் பந்தய வேட்கைக்கு மனதைப் பறிகொடுத்துவிட்டதன் அடையாளம் என்று அவள் எண்ணினுள். தினம் அவன் நடவடிக்கைகளை சம்சயத்துடன் கவனித்தாள். தம்பதிகளுக்குள் ஒரு மனஸ்தாபம் நிலைத்து நின்றது.

குழந்தை முரளிக்குக் கட்டி விழுந்திருப்பதாக வைத்தியன் சொன்னன். பாங்கியில் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்திருக்கும் பணத்தில் மருந்து வாங்கப் பத்து ரூபாய்கள் எடுத்து வரும்படி கோபாலனுடன் சொன்னுள். மாலை வேலையில் இருந்து வரும்பொழுதுகொண்டு வருவதாகச் சொல்லிச் சென்ருன்.

கோபாலனுக்கு அன்று வேலை அதிகம் இருந்தது, போதாக்குறைக்கு முதலாளியும் சுமுகமாக இல்லை. இந்தத் தொல்லையில், ஜெயலக்ஷ்மி சொன்னதையே மறந்து விட்டான். நேரங்கழித்து, வெறுங்கையுடன் வீடு திரும்பினன்.

ஜெயலக்ஷ்மி, பணம் முழுவதையும் அவன் பந்தயத்தில் தோற்றுவிட்டான் என்று கூச்சல் போட்டாள். வார்த்தை பலத்தது. அவன் கோபத்தில் எதுவோ சொ[illegible]விட்டான். "இனி [illegible]ம் உன்னிடம் [illegible]ட்டேன்!" என்று தன் அத்தை வீட்டிற்கு சென்ருள். அத்தை வீட்டார், "தம்பதிகள் சண்டை காணே சரியாகிவிடும்!" என்று அசிரத்தையாக இருந்தது, ஜெயலக்ஷ்மியின் எரிச்சலை அதிகரிக்கச் செய்தது.

மண்டபத்தை விட்டு எழுந்து நதிக்கரைக்கு வந்தாள். வெள்ளம் புறண்டு ஓடிற்று. "வா, அம்மா! நான் உன்னை அங்கிகரித்துக்கொள்ளுகிறேன்! தன் குளிர்ந்த மடியில் உன் தாபத்தைத் தணித்துக்கொள்! என்னிடம் சரண் புகுந்தவர்கள் நிரந்தர சாந்தி அடைவார்கள்!" என்று கூறி தன் கருங் கரங்களை நீட்டி அழைப்பதுபோல் நதி சலசலத்தது.

இது ஜெயலக்ஷ்மி காதில் புகுந்தால்தானே? முரளி, கமலி குரலா என்று உற்றுக் கேட்டாள். ஆமாம், அதோ கோபாலன்! குழந்தைகள்!!

"ஜெயா, இப்படியும் என்னைச் சோதிக்கலாமா?" என்று தழு தழுத்த குரலில் கேட்டான். இரவில் ஏற்பட்ட ஆயாசத்தையும் பொருட் படுத்தாமல் தன் கணவன், குழந்தைகளுடன் ஜெயலக்ஷ்மி வீடு நோக்கி உல்லாஸமாக நடந்தாள்.

பக்தியா-பாசமா?

(முன் பக்கத்தொடர்ச்சி)

மாது:—

"கணவர் செயலைக்
கேளும் ஸ்வாமி
கணவர் செயலைக் கேளும்
உணவு வேண்டு வந்த
குணமுடையோரே (கண)

ஆரூர் என்றுரைப் பாரங்கை
மழுவினல்
சேர் மழுவெடுத்தவர்
சீரடியைத் துணிப்பர் (க)

அந்த ஊரென
மொழிந்திடாமல்
எந்த ஊரெனினும்
சிந்தை மகிழ்வர் (க)

ஸ்வாமி திருவாரூரென்று உரைக்காதீர். பேராபத்து விளைந்து விடும். வேறு எந்த ஊரென்று உரைத்தாலும் உபசரித்து அன்னமிடுவர்"

(விரமிண்டர் வருகிறார்)

விரமிண்டர்:-பெண்ணே! அதிதிகள் யாராகிலும் வந்தார்களா? மணி ஒன்ருகி விட்டதே!

மனைவி:—(நடுங்கும் குரலுடன்) ஸ்வாமி! ஒரு பெரியவர் வந்திருக்கிறார்.

விரமிண்டர்:—சரி பூஜைக்கு ஏற்பாடு செய்தாயிற்ரு?

மனைவி:—(மனதுக்குள்) என்ன செய்வது அநியாயமாய் பெரியவர் கால் துண்டிக்கப் பட்டு விடுவாரே! என்ன கொலை பாதகச் செயல்! அபிமானம், ஜாதியபிமானம் என்ன கொடிய செயலுக்கும் காரணமாயிருக்கிறதே! (திடமடைந்து) நல்லது இன்று இடப்புறம் வைக்கும் மழுவை வலது பக்கமாய் வைத்து விடுகிறேன். கிழவர் தப்பித்துக் கொள்ளட்டும். ஐயோ கணவர் உத்திரவின் படி நடக்க முடியாமல் இருக்கிறதே"

அதிதிக்குப் பாத பூஜை செய்வதற்கு கால்களில் தீர்த்தம் விடு முன்பு இடது காலை கையினல் பற்றிக் கொண்டு விரமிண்டர்:—"ஸ்வாமி எந்த ஊர் உமக்கு? உமது திருநாமமென்ன?"

தியாகேசர்:—காமி ருப்பது திருவாரூர்,பெயர் தியாகேசர்.

விரமிண்டர்:—(கோபத்தோடு) ஹா என்ன சொன்னுய்! திரும்பி, அடீ பெண்ணே, மழுவெங்கே! என்ன இடதுபுறமிருக்கும் மழு வலப்புறம் போவானேன்.

தியாகேசர்:—ஓடுகிறார்:

விரமிண்டர்:— ஓடுகிருயா-வந்தேன் உன் காலைத் துணிக்கிறேன். ஹா! திருவாரூர் எல்லையை மிதித்தாயா? என்ன மதியீனம். இப்படி என்னை ஏன் கொணர்ந்தாய்—தியாகேசா நல்லது, என் காலை வெட்டி விடுகிறேன்,

தியாகராஜர் விருக்ஷபாரூடராய் "நண்பா! உத்தம நண்பா! உன்னைப் பிரிந்து நான் உயிர் வாழ விரும்பேன், உனது பக்தியை மெச்சினேன்" உனது தீர வைராக்யத்துக்கு ஒன்றும் நிகராகாது. ஆனுலும் நண்பா—சாதாரண விஷயங்களில் இத்தனை கட்டுப்பாடு வைத்துக்கொள்ளாதே! எனக்கு உன்னைப்போல் எல்லாரும் இனியவர். சற்று ஸம திருஷ்டியோடு உலகைப்பார்! பெருமைப் பேயைக்கொன்று விடு, அகங்காரத்தை அடக்கு. அப்போது தானே இன்பந் ததும்பி நிற்கும் வாழ்க்கை. உனது மனைவி அன்பின் அவதாரம் போன்றவள்.

விரமிண்டர்:—"அப்பனே! அறிந்தேன். எனது அக்ஞானத்தால் சுந்தரனை அநாசாரமென்று அவமதித்து என்னையும் துன்புறுத்திக் கொண்டேன். நான் தான் பக்தன் என்று இறுமாப்புக்கொண்டிருந்தது இன்று உனதருளால் சிதறுண்டது.

எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்நாட்டு மக்கள் எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை. எல்லோரும் இந்நாட்டு மன்னர். ஆம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்."

தியாகேசர்:—"ஆம், ஆம். எல்லோரும் இந்நாட்டு மன்னர்."

அழகுத் தெய்வமான
மன்மதன் இளவேனில் ஒய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் மஹாகவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக்கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.
இளமையும், அழகும் கூந்தலுக்குத்தந்து கூந்தலை மனேஹர்மாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.
முக அழகைக் கூந்தலினல் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டு அழகு படுத்திக்கொள்ளுங்கள்.
கேசவர்த்தினி
கூந்தலைப்பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணு 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.
தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

"என்ன மனுஷ்யன்?"

சிறு கதை

★

"கிச்சு" எழுதியது

சாரதாவுக்குத்தான் எவ்வளவு பரோபகார சிந்தனை? அவளைச் சொல்லி மற்ற பெண்மணிகளையும் சொல்லக் கூடாது. காலையில் டேபிளில் காப்பியைக் கொண்டு வந்து வைத்து 'விட்டு விர்என்று' உள்ளே சென்று அடுப்புக்காரியத்தைப் 'பார்க்கிறுளா என்று எவ்வளவோ தடவை பார்த்திருக்கிறேன். ஆனல் ஒருநாளும் இல்லை. காப்பியை வைத்துவிட்டு பேச்சுக்கொடுக்க ஆரம்பித்து விடுவாள்.

"உங்களுக்கு ராஜத்தை தெரியுமோல்லியோ?" என்பாள்.

"தெரியாமலென்ன! உன் மாமா பிள்ளை ராஜம்தானே" என்பேன்.

"சேச்சே! என் சிநேகிதி ராஜத்தைச் சொன்னேன்."

"உனக்கோ நூற்றெட்டு சிநேகிதிகள் உண்டு. யாராயிருந்தாலென்ன! விஷயத்தைச் சொல்லேன்!"

"ஒன்றுமில்லை. அவளுக்கு மார்கோஸா ஸோப் ஒன்று வேண்டுமாம். அவள் ஆம்படையானுக்குத் தெரியக்கூடாதாம். நீங்கள் ஆபீஸிலிருந்து வரும்பொழுது வாங்கிக்கொண்டு வருகிறீர்களா?" என்பாள்.

"இதென்ன பிரமாதம்! ஆம்படையானை வைத்துக்கொள்ள தெரியாதவனெல்லாரும் ஏன் கல்யாணம் பண்ணிக்கொள்ளுகிருர்களோ தெரியவில்லை. அவன் ஆம்படையாளுக்கு இன்னெருத்தன் ஸோப் வாங்கிக் கொண்டு வரவேண்டும்! என்ன மனுஷன்!" என்பேன். அதுடன் நான் நிற்கமாட்டேன். "பார்த்தாயா சாரதா! உங்கப்பா என்னமோ அப்ப இன்னும் ஆயிரம் ரூபாய் கொடுக்கப் பிசுகிருரே. இப்ப நமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் தெரிகிறதா?" என்பேன். அவள் சிரித்துக்கொண்டு உள்ளே போய் விடுவாள். ராஜம் ஓரணு, இரண்டணு குறைத்துக்கொடுத்திருப்பாள். லக்ஷியமில்லை என்று கையிலிருந்து ஓரணு, இரண்டணு போட்டு ஸோப் வாங்கிக்கொண்டு வருவேன்.

கமலத்திற்கு ஹேர் ஆயில் வேண்டுமா? என்ன ஹேர் ஆயில்? கரடி மார்க்கா? பெயரைக் கேள்விப்பட்டதில்லையே, லக்ஷியமில்லை. பட்டணத்தில் ஒரு கடைகூட பாக்கியில்லாமல் விசாரித்து இருந்தால் வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறேன். சரோஜாவுக்கு ஸெண்டு வேண்டுமா? என்ன ஸெண்டு! பாரிஸ் ஸெண்டா? சரி, கோமளத்திற்கு ரிப்பன் வேண்டுமா? என்ன ரிப்பன்? பச்சையா? சரி! அப்படியே மறந்து போகாமல் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்பேன்.

அதில் எனக்குத் தனி பெருமை! ஸ்திரீ சமூகத்திற்கு நான் பாடுபடுகிறவனல்லவா? ஆனல் ஒரு விஷயத்தில் மட்டும் எனக்கு அலாதி பெருமை, சாரதாவுக்கு நான் மற்ற புருஷர்களைப்போலில்லாமல் அவள் கேட்பதையெல்லாம் உடனுக்குடனே வாங்கிக் கொடுத்துவிடுகிறேன் அல்லவா?

ஒரு நாள் மத்தியானம் நான் கேசரி விலாஸுக்குப் போயிருந்தேன். அங்கு எனக்கடுத்தாற் போலுள்ள டேபிளில் எனக்கு அறிமுகமில்லாத இரண்டு பேர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிருர்கள் என்று கவனித்தேன்.

"ஆம்படையாளை வைத்துக் கொள்ளத் தெரியாதவளெல்லாம் ஏன் கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிருளோ தெரியவில்லை ஸார்" என்றுர் ஒருவர். அவர் ஒன்றும் புதிதாகச் சொல்லிவிடவில்லை. நான் சாரதாவிடம் தினம் சொன்னதையேதான் அவரும் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"என்ன விசேஷம்?" என்று கேட்டார் மற்றவ,

"ருத்ராக்ஷமையர் என்று ஒருவர் இருக்கிருரே, அவரை உங்களுக்குத் தெரியுமோல்லியோ?" என்று கேட்டார். என் பெயரைச் சொன்னவுடன் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என்னைப் போல் மனைவியை வைத்துக் கொள்ளுகிறவர்கள் யார் இருக்கிறர்கள்? அவளுக்கு என்ன குறைவு? என் பெயருள்ளவர்கள் யாராவது இருக்கலாமல்லவா? மேலே என்ன சொல்லுகிருர் என்று கவனித்தேன்.

"ஆம்படையாளை வெளியே ஓரிடத்திற்கும் அழைத்துக் கொண்டு போகிறதில்லையாதாம். காராக்ருஹம் மாதிரி அடைத்து வைத்திருக்கிருராம்." என்றுர் முதல் ஆஸாமி.

அவர் குறிப்பிட்ட ஆஸாமி நான் இல்லை என்று எனக்கு வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்து விட்டது. ஏன் போன வாரம் அவளை பார்த்தசாரதி கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போகவில்லையா நான்? மூன்ருவது வாரம் திருவொற்றியூருக்கு என் சிநேகிதர் காரில் அழைத்துக்கொண்டு போகவில்லையா? "சினிமா கினிமா ஒன்றுக்கும் அழைத்துக் கொண்டு போகிறதில்லையாம். சின்ன பெண்ணேன்னே! ஸினிமா பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருக்காதா?" என்றுர் முதல் ஆசாமி. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஸினிமாவிற்குப் போக வேண்டுமென்று சாரதாவிற்கு ஆசையா? அப்படி யென்றுல் ஏன் என்னிடம் சொல்லவில்லை. அழைத்துக்கொண்டு போக மாட்டேனே என்று சந்தேகமா? சேச்சே என்குணம் தான் அவளுக்குத் தெரியுமே. இது வேறு ஆசாமி, நான் 'இல்லை என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

"அவர் ஆம்படையாளும் என் மனைவியும் ரொம்ப நெருங்கிய சிநேகிதர்கள். எனக்கு ஸினிமா தியேட்டர்காரர்களைத் தெரியுமோல்லியோ, நான் இரண்டு இலவச டிக்கெட்டுகள் வாங்கிக் கொண்டு வர வேண்டும் என்று என் மனைவி இரண்டு நாளாக ஹிம்சை படுத்துகிருள். இலவச டிக்கெட்டுகள் கிடைத்தால் ஒரு வேளை ஆம்படையாளை அவர் அழைத்துக் கொண்டு போனுலும் போவாராம்." என்றுர் முதல் பேர் வழி. என் மனதில் இன்னும் சந்தேகம் தீரவில்லை.

"ஒரு வேளை சம்பளம் குறைச்சலாயிருக்கலாம். ஸினிமாவுக்கு என்று வேறு தண்டமாய் காசைச் செலவழிப்பானேன்! ஏதாவது கறிகாய் வாங்கினுலும் உதவுமே என்று நினைத்திருக்கலாம்" என்றுர் இரண்டாவது பேர்வழி.

"நன்ருய்ச் சொன்னீர்கள்! மாதம் இருநூறு ரூபாய் அகௌண்டெட் ஜெனரல் ஆபீஸில் சம்பாதிக்கிருர். ஒரு தம்பிடி என்றுல் உயிரை விட்டுவிடுவாராம். அப்படியேசம்பளத்தை வாங்கி வட்டிக்குப் போட்டு விட்டுப் பார்க்கிருர். நான் அலைந்தது தான் மிச்சம். இன்னும் ஒரு வாரம் கழித்து பாஸ் தருகிறேன் என்கிருர்கள்" என்றுர் முதல் ஆசாமி.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என் தலை சுழன்றது. இத்தனை நாழிகை அவர்கள் பேசிக்கொண்டிருந்த ஆசாமி நான் தான்! ஆம்படையாளை வைத்துக் கொள்ளத் தெரியாதவன் நான்தான்! மனைவியை காராக்ருஹம் மாதிரி அடைத்து வைப்பது நான்தான். நான் என்னைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்த ஆகாச கோட்டைகளெல்லாம் அப்படியே இடிந்து விழுந்தன. மற்ற புருஷர்களைவிட நான் 'ஒரு விதத்திலும் ஒசத்தியுள்ளவனில்லை!

எனக்கு சாரதாவின் பேரில் கோபம் வந்து விட்டது. ஏன் ஸினிமாவுக்குப் போக வேண்டுமென்று சொன்னல் நான் அழைத்துக் கொண்டு போக மாட்டேனு! அவள் இது மாதிரி ஸினிமாவுக்கு பாஸ் கேட்ட விஷயத்தை நான் தெரிந்து கொண்டதாக காட்டிக் கொள்ள எனக்கு இஷ்டமில்லை. சாரதாவை தினம் ஒரு ஸினிமாவிற்கு அழைத்துக் கொண்டு போய் 'ஸினிமாவா, வேண்டவே வேண்டாம்' என்று அவள் சொல்லும்படிக்கு செய்துவிட வேண்டியது என்று சங்கல்பம் செய்து கொண்டேன். அன்றைய சாயங்காலம் "சாரதா! டிரஸ் பண்ணிக்கோ" என்றேன்.

"ஏன்?" என்று கேட்டாள் சாரதா புன்னகையுடன்.

"இன்றைக்கு ஸினிமாவிற்குப் போய் விட்டு வரலாம், வா" என்றேன்.

"நீங்கள் வேண்டுமானுல் போய் விட்டு வாருங்களேன்" என்றுள். எனக்கு கோபம் வந்து விட்டது. ஆனல் கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டேன். "பலே சாகசக்காரி! கேட்டால் பரவாவில்லை என்கிறது! ஆனல் ஊரெல்லாம் உன்னை காராக்ருஹத்தில் அடைத்திருக்கிற மாதிரி அடைத்திருக்கிறேன் என்று. புகார் செய்கிருயா?"

"அதெல்லாம் முடியாது. நீயும் வந்து தாகை வேண்டும். ஸினிமாவிற்குப் போனல் உங்கள் ஆம்படையாளை அழைத்து வரவில்லையா என்று தெரிந்தவர்கள் கேட்க மாட்டார்களா?" என்றேன்.

"சரி, அப்படியானுல் அடுத்த வாரம் போகலாமே" என்றுள்.

"அதெல்லாம் முடியாது. இன்றைக்குத் தான் போக வேண்டும்" என்றேன். சரியென்று டிரஸ் பண்ணிக் கொண்டு கிளம்பினுள். அன்றைய இரவு ஸினிமாவிற்குப் போய் விட்டு வந்தோம்.

அடுத்த நாள் சாயங்காலம் ஆபீஸ் விட்டவுடன் நேரே வீட்டிற்கு வந்தேன்.

"ஏது இன்றைக்கு சீருக்க வந்து விட்டாப் போலிருக்கே" என்றுள்.

"ஆமாம்! ஸினிமாவிற்கு கிளம்பு" என்றேன்.

"ஸினிமாவிற்கா! நேற்றைக்குத் தானே போய்விட்டு வந்தோம்" என்றுள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. கிளம்பு என்றுல் கிளம்ப வேண்டியதுதானே உன் வேலை, இனிமேல் தினம் உன்னை ஸினிமாவிற்கு அழைத்துக் கொண்டு போகப்போகிறேன்" என்றேன்.

"உங்களுக்கு ஏதாவது பைத்தியம் கைத்தியம் பிடித்திருக்கிறதா?" என்றுள்.

"ஏன்?" என்று கேட்டேன்.

"நீங்கள் வேண்டுமானுல் தினம் ஸினிமாவிற்குப் போய் விட்டு வாருங்கள். நான் வேண்டாமென்கவில்லை. ஆனல் தினம் ஸினிமாவில் பணத்தைச் செலவழிப்பதில் யாருக்கு என்ன பிரயோஜனம்? நான் தினம் சினிமாவிற்கு வருகிறதாயிருந்தால் எனக்காக ஒரு ரூபாய் இரண்டணு கொடுத்து டிக்கெட் வாங்குவீர்களோ இல்லையோ அந்த பணத்தை என்னிடம் கொடுங்கள். நான் ஏதாவது நகை பண்ணிப் போட்டுக் கொள்ளுகிறேன்" என்றுள் சாரதா.

சாரதாவின் விஷயம் எனக்கு புரிந்து விட்டது. ஸினிமா பார்க்க ஆசை தான். ஆனல் காசு கொடுத்தால் வேண்டவே வேண்டாம். இலவசமாக ஸினிமா பார்க்க வேண்டும். அதற்கென்ன வழி! என் பெயரை அம்பலத்தில் இழுத்தால் நான் சிநேகிதி மூலமாக இலவசமாக பாஸ் கிடைக்கும்! இதிலிருந்து சாரதாவின் சிநேகிதிகளின் விஷயத்தையும் அறிந்து கொண்டு விட்டேன். அவர்கள் கணவர்கள் அவர்களுக்கு ஏதாவது ஸெண்டு; ஸோப் வாங்கி வர வேண்டுமானுல் முழு விலையையும் கொடுத்து தானே வாங்கி வரவேண்டும். ஆனல் நான் வாங்கி வருகிறதாயிருந்தால் ஓரணு இரண்டணு குறைத்துக் கொடுத்தாலும் லக்ஷியம் பண்ணுமல் கையிலேயிருந்து போட்டு வாங்கிக்கொண்டு வருவேன். அப்பப்பா! ஸ்திரீகளின் சாகசங்கள் தான் என்ன! தங்கள் புருஷர்கள் பெயரை அம்பலத்தில் இழுத்து தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்ளுவதில் பலே ஸமர்த்தர்கள்.

பிரிட்டிஷ் ராஜகுமாரிகள்

ராஜகுமாரிகள் எலிஸபெத்தும், மார்க்ரெட் ரோஸும்.

பதினேரு மணிக்கு

இப்பொழுது மணி பதினென்று. காலை வேளைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. "இனிது இனிது ஏகாந்த மினிது" என்றுர் ஒரு கவி, ஆனல் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. IK 157

வாசனை கூந்தல் தைலம், சுண்ணும்பு வாசனை, தாம்பூல மாத்திரை, இவை 3 புட்டியும் தபால் செலவுடன் ரூ. 1-2-0.

'சிசு ரக்ஷணி' இசிவு, இளம்பிள்ளை வாதம், வயிற்றுக் கட்டி இவற்றின் பாதுகாப்பும், பரிகாரமும் கைகண்ட ஸித்தௌஷதம். தபால் செலவுடன் புட்டி ரூ. 2—14—0.

(முன் பணம் மணியார்டர் செய்யவும்)

எனது 3-வயது குழந்தையின் வயிற்றுக்கட்டி ஒரே புட்டி 'சிசு ரக்ஷணி'யால் பூராவும் குணமாயிற்று.

வி. ராமசந்திரன், பல்லாரி.

ஏ. எஸ். டெபோ,
76, கொன்னூர் ஹைரோட்,
பெரம்பூர், மதராஸ்.

நரையை ஒழியுங்கள்.

தலைமயிர் நரைத்திருக்கும்பொழுது டாக்டர் அம்ருடைய கரை பிடிக்காததும் இயற்கையானதுமான தந்தக் கறுப்பு சிறந்தது. ரிஜிஸ்டர் நெ. 1998. எங்கும் விற்பனை செய்யப்படுகிறது.

APPAH & CO., Madras.
N. DASAI GOUNDER,
Coimbatore.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

தயவு செய்து கவனியுங்கள்

உங்களுக்கு சப்ளை செய்யும் டாம்கோ பரிமள கூந்தல் தைலம்; டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூ, இவைகள் உண்மையான சரக்குகள்தான் என்பதை உறுதிப்படுத்த எல்லா புட்டி வாய்களின் மேலும் மூடிகளுக்குக் கீழாக முத்திரையொன்று அச்சிட்டிருக்கிறேம். வாங்கும்போது இந்த முத்திரை உடைக்கப்படாமலிருக்கின்றதாவென்று கவனித்து வாங்கவும்.

பிரசித்தி வாய்ந்த டயமண்ட் மார்க்கும், ஆரஞ்சு — பொன்னிற முத்திரையும் "A Tata Product" எனும் வார்த்தைகளும் இருக்கின்றனவாவென்று கவனியுங்கள்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்., டாடாபுரம் & பம்பாய்.

(T H. 3167.)

வேவும் வஞ்சமும்

★

“நியாயவாதி” எழுதியது

★

சென்ற மகா யுத்தத்தில் பிரான்ஸில் ஜெர்மனிக்காக கணக்கற்ற ஒற்றர்கள் வேவு புரிந்து வந்தனர். அவர்களது நடவடிக்கைகளைக் கவனித்து மேற் பார்வை உத்தியோகம் வகித்தவள் ஸ்ரீமதி டாக்டியர் என்ற ஸ்திரீ. அவளது திறமையையும் கொடிய சக்தியையும் பற்றி நாம் முன்னொரு தடவை விவரமாய் எழுதியுள்ளோம்.

அந்தக்காலத்தில் பிரான்ஸில் ஜெர்மனிக்காக வேவு புரிந்தவர்களில் கான்ஸ்டான் டைன் கான் கன்டேமிஸ் என்பவன் அவன் கிரேக்க ஜாதியான். பல பாஷைகளில் பரிச்சயமுள்ளவன். பிரெஞ்சு பாஷையை அவன் பிரெஞ்சுகாரனைப் போல் உச்சரிப்புப் பிழையின்றி பேசுவான். இதை யுணர்ந்த ஜெர்மன் வேவு அதிகாரிகள் அவனை பிரான்ஸுக்கு அனுப்பித் தங்கள் நாட்டுக்கு வேவை புரியும்படி செய்தனர்.

முதலில் அவன் அபினி முதலிய லாகிரி வஸ்துக்களை கள்ளத்தனமாய் வியாபாரம் செய்யும் வியாபாரியைப் போல் நடித்தான். அப்படிச் செய்வது பிரெஞ்சு சட்டத்தின் கீழ் குற்றம் எனினும் அது வேவு புரிவதைப் போல் மிகக் கடுமையான தண்டனைக்கு இலக்கான் குற்றம் அன்று. வேவுகாரனாய் அகப்பட்டுக் கொண்டால் அவன் தன்னுயிரை இழக்கும்படி நேரிடும். அபினி விற்கும் வியாபாரத்துக்காக அவன் சிறிது காலம் சிறை வாஸம் செய்ய வேண்டியதாகும். இதை நன்குணர்ந்து கொண்டே அவன் அப்படி நடித்தான்.

ஒரு கெட்ட குணம்

சில காலத்துக்குப் பின் அவன் பழ வியாபாரியாக மாறினான். அதன் பின் மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. பழ வியாபாரத்தை நடத்துவது சிரமமாயிற்று. ஆதலால் அவன் ஒரு பத்திரிகை நிருபனாக வேஷம் போடத் தலைப்பட்டான். பிரெஞ்சு ஸர்க்காரின் யுத்த முயற்சிகளுக்கு பூரண ஆதரவையும் உதவியையும் கொடுக்கும் பத்திரிகைக்கு ஸேவை புரிவதாக போக்குக் காட்டிய அவன் உண்மையில் ஒரு ஜெர்மன் ஒற்றன் என்பதை யாரால் தெரிந்து கொள்ள முடியும்?

எனினும் அவனுக்கு இயற்கையாயுள்ள ஒரு கெட்ட குணமே அவனுக்கு முடிவில் கேட்டை விளைவிக்கும் காரணமாயிருந்தது. அவன் ஸ்திரீ விஷயத்தில் சபல சித்தத்தைக் கொண்டவன். அழகிய பெண் எவளேனும் அவனது திருஷ்டியில் விழுந்து விட்டால், அவன் விடமாட்டான். எப்படியாவது அவளது சிநேகத்தையும் சல்லாபத்தையும் பெற்று விடுவான். அவளை தனது ஆசை நாயகியாக ஆக்குவதற்காக அவன் எவ்விதமான சிரமத்தையும் சரி, எவ்வளவு செலவையும் சரி பொருட்படுத்தமாட்டான்.

“அவன் அறியான்”

இப்படி மங்கையர்பால் தன்னுள்ளத்தை பறிகொடுக்கும் தன்மையனான அவன் ரெஜினா என்ற அழகிய யுவதியிடம் தன் உடல், பொருள், ஆவி, எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்தது ஒரு விந்தையன்று. வெகுசீக்கிரத்தில் அவன் அவளை தன்வசப்படுத்தி விட்டான். அவளது இனிமையான பேச்சும், மதுரமான பார்வையும் அவனது அறிவை மயக்கின. அவளிடம் அவன் கூறாத விஷயம் ஒன்றுமில்லை. அவளிடம் ஒளிக்காத இரகசியமும் இல்லை.

இப்படி அவனை வசப்படுத்திக் கொண்ட ரெஜினா உண்மையில் ஒரு பிரெஞ்சு வேவுகாரி என்பதை அவன் கனவிலும் அறியான். அறிந்திருந்தால் அவன் அவளிடம் அணுகிருப்பானா? அவள் அவனிடமிருந்து கிரகித்த விஷயங்களையெல்லாம் அப்போதைக்கப்பொழுது பிரெஞ்சு அதிகாரிகளுக்குத் தெரிவித்து வந்தாள். பாவம்! இது அவனுக்குப் புலப்படக்கூடும்?

எனினும் விஷயம் எப்படியோ ஜெர்மன் வேவு இலாகாவுக்கு எட்டியது? தங்களது ரகசியங்கள் எப்படியோ, யார் மூலமாயோ பிரெஞ்சு வேவு இலாகாவுக்குத் தெரிய வந்தன என்பதையுணர்ந்தும் ஜெர்மன் வேவு இலாகா தலைவர்கள் சும்மா இருப்பார்களா? இந்த விஷயத்தை ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடித்து, குற்றவாளியைத் தண்டிக்க அவர்கள் சித்தமாயினர்.

பெல்ஜியத்திலிருந்து பிரான்ஸிலுள்ள ஜெர்மானிய வேவுகாரர்கள் மீது அதிகாரம் செலுத்திய ஸ்ரீமதி டாக்டியர் இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்வதற்காக பிரான்ஸுக்கு வந்தாள். ஆரம்பத்திலிருந்தே அவளுக்கு கிரேக்கனான கான்ஸ்டான்டைன் மீது சந்தேகம். அவனது வாசஸ்தலத்தை அவள் கவனித்தபொழுது அவளது சந்தேகம் உறுதிப்பட்டது. ஏனெனில் அவன் விவாகமாகாதவனெனினும், அவன் பிரம்மசரிய வாழ்க்கையை நடத்தவில்லையென்பது அவனது வீட்டிலுள்ள பொருள்களைக் கவனிக்கும்பொழுது நன்கு புலனாயிற்று.

டாக்டியர் சந்தேகம்

அதன் பிறகு டாக்டியர் சும்மா இருப்பாரா? கிரேக்க ஒற்றனின் மீது அவள் மோகூல் செய்யலானாள். ரெஜினா என்ற பெண்ணுடன் அவன் கூடிக் குலாவுவது அவளுக்குத் தெரிய வந்தது. ரெஜினாவின் நடவடிக்கையையும் அவள் கவனிக்கலானாள்.

இந்த ஸமயத்தில் பிரெஞ்சு அதிகாரிகளுக்கு ஸ்ரீமதி டாக்டியர் பிரான்ஸுக்கு வந்திருக்கும் செய்தி எப்படியோ எட்டியது. அவளைக் கண்டுபிடித்து சிறையில் அடைக்க அவர்கள் முஸ்தீப்புகள் எடுத்துக் கொள்ள ஆரம்பித்தனர்.

தான் பிரான்ஸில் வந்திருப்பது பிரஞ்சு வேவு இலாகாவுக்கு தெரிந்து விட்டது என்பதை ஸ்ரீமதி டாக்டியர் உணர்ந்து கொண்டாள். தான் வந்திருப்பதை அறிந்தவன் தனது கிரேக்க உளவாளியான கான்ஸ்டான்டைன் ஒருவனே யாதலால் தனது ரகசியத்தை அந்நாட்டில் கொடுக்கக்கூடியவன் அவனே என்று அவள் முடிவுக்கு வந்ததில் யாதொரு அதிசயமும் இல்லை.

தனது மேல் அதிகாரியான ஸ்ரீமதி டாக்டியர் பிரான்ஸில் இருந்த ரகசியத்தை அவன் தனது ஆசை நாயகியான ரெஜினாவிடம் தெரிவித்திருந்தான். அவள் மறுகணமே அந்தச் செய்தியை பிரெஞ்சு வேவு இலாகா அதிகாரியிடம் தெரிவித்துவிட்டாள். இந்த விஷயத்தை ஸ்ரீமதி டாக்டியர் எப்படியோ அறிந்துகொண்டாள்.

ரெஜினா மீது அளவு கடந்து மோகங்கொண்ட கான்ஸ்டான்டைன் எப்படியும் தன்னை காட்டிக் கொடுத்துவிடுவான் என்று ஸ்ரீமதி டாக்டியர் அஞ்சினாள். மாறு வேஷமணிந்து அவள் அவனது ஆசை நாயகியைத் தந்திரமாய் விசாரித்தாள். அவளது சம்சயம் உறுதிபெற்றது.

துரோகிக்குத் தண்டனை

இனியும் சும்மா விருப்பது ஆபத்தில்முடியும் என்பதை நன்குணர்ந்த ஸ்ரீமதி டாக்டியர் தன்னைக் காட்டிக் கொடுக்கத் தயாராயிருந்த துரோகியை படுகுழியில் தள்ள ஏற்பாடு செய்யலானாள்.

அவளிடமிருந்து அவனுக்கு ஒரு உத்தரவு வந்தது. அது என்னவெனில் மறுநாள் நடைபெறப் போகும் ஒரு பிரெஞ்சு பிரமுகனது சவ அடக்க விழாவுக்குச் சென்று அங்கே (குறிப்பிட்ட உடைகளுடன்) பிரஸன்னமாயிருந்த ஒருவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுக்க வேண்டும் என்பதே.

தனக்கு சித்திக்கப் போகும் தண்டனையை சிறிதும் எதிர்பாராத அவன் அந்த சவச் சடங்கு நடைபெற்ற விடத்துக்குச் சென்றான். எதிர்பார்த்த மனிதனைத் தேடினான்.

என்ன விபரீதம்! அவன் எதிர்பார்த்தவன் ஒருவனல்ல! மூவர்; அம்மூவரும் அவனைக் கண்டதும் அவனைக் கைது செய்து விலங்குகள் பூட்டினர். அவர்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்கள். அவனைச் சிறைக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்தனர். அவன் கூறியதை அவர்கள் நம்பவில்லை: தந்திரமாய் அவர்களுக்கு ஸ்ரீமதி டாக்டியர் அனுப்பிய கடிதத்தில் காணப்பட்ட விஷயங்கள் அவனது குற்றத்தை நெடுநாட்களாய் பிரான்ஸுக்கு அவனால் இழைக்கப்பட்ட குற்றத்தை நன்கு காட்டியது. அவனுக்கு தப்பித்துக் கொள்ள யாதொரு மார்க்கமுமில்லை அவனது மீட்சிக்கு யாதொரு உபாயமும் இல்லை.

ஸ்ரீமதி டாக்டியர் பிரெஞ்சு வேவுகாரர்களிடம் அகப்படும் அறிவிலியன்று. அவள் விரைவில் பெல்ஜியத்துக்குத் திரும்பி விட்டாள்.

எல்லாவித சிகிச்சையாலும் கைவிடப்பட்ட முற்றிப் போன ஈரல் குலை பெருக்கத்தி னின்றும் என் உயிரை காப்பாற்றியது.

எல்லா மருந்துஷாப்பிலும் கிடைக்கும்.

ஜம்மி வேங்கடரமணய்யா அண்டு சன்ஸ், மைலாபூர் — மதராஸ்.
சப் ஆபீஸ்: கும்பகோணம்.
பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னோ, பம்பாய், பெங்களூர், திருச்சினப்பள்ளி, விஜயநகரம்.

மதனமஞ்சரி
மாத்திரைகள்
மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாதுகேடுகள் முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/.
மதன மஞ்சரி பார்மஸி, 184, சைனபஜார் ரோடு, மதராஸ்.
புரசவாக்கம் : எஸ். டி. பல்டாரே.
ஊரிகம் : டி. ஜான்ஸன் & பிரதர்

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

நௌகா சரித்திரம் — 20-வது கீர்த்தனம்

பல்லவி

கும கும கும யனி வாஸனதோ முத்து
கும்மலு வெடலிரி சூடரே

அனுபல்லவி

மமத தோனு ஸுர வருலெல்ல ஸுரதரு
ஸும வானலு குரியிம்ப வேட் கக

சரணம்

1. நலு வங்க பகலு வத்துலு தேஜரில்லக
செலக ஸாம்ப் ராணி பொகலு க்ரம்ம கந்தபொ-
டுலு சல்லுசு பய்யெதல தீயுசு பன்னீ
ருலு சிலு குசு யதுகுல வீ ருனிதோ

2. பங்காரு சீரெலு ரங்கைன ரவிகெலு
னுங்கரமுலு வெலயங்க ஸொக ஸுக பு
ஜங்க ஸயனுடகு ரங்க பதினி ஜூசி
பொங்குசு தனிவார கௌகளிஞ்சு சுனு

3. வரமைன கனக நூபுர முலு கல்லன
யுரமுன முத்யால ஸருலெல்ல கதலக
கரமுன ஸொக ஸைன விரி ஸுரடு லச வி-
ஸருசு த்யாகராஜ வரதுனி பொகடுசு.

II

மமத தோனு—மிகுந்த களிப்புடன்
ஸுரவருலு எல்ல—தேவகன்னியர்களெல்லோரும்
ஸுரதரு ஸுமவானலு—கல்பகம், மந்தாரம் முதலான புஷ்பங்களை ஆகாயத்தினின்றும் புஷ்ப மழைபோன்று
குரியிம்ப—கண்ணன் மீது வர்ஷிக்க
வேட்கக—வேடிக்கையாக
குமகுமகுமயனி வாஸனதோ—கும்குமென்று புஷ்ப வாசனையோடு கண்ணன் விளங்க
முத்து கும்மலு—அழகான ஸ்திரீகள்
வெடலிரி—கண்ணனுடன் கோகுலத்திற்கு புறப்பட்டார்கள்
சூடரே—அதனை நாமும் கண்டு களிப்போம் வாருங்கள்
நலுவங்க—நன்றாக
பகலு வத்துலு—மெழுகு வத்திகள் (ஊதுவத்திகள்)
தேஜரில்லக—பிரகாசிக்க (மணக்க)
செலகஸாம்ப்ராணி பொகலு—விளங்கும் சாம்பிராணி தூமப் [புகை
க்ரம்ம—எங்கும் சூழ்ந்து பரிமளம் வீச
கந்த பொடுலு சல்லுசு—பலவிதமான வாசனைப் பொடிகளை எங்கும் தூவிக்கொண்டும்
பய்யெதல தியுசு—தங்கள் மேலாடைகளைப் பிடித்துக் கொண்டும்
பன்னீரு சிலுகுசு—வாசனைமிகுந்த பன்னீரை கண்ணன் மீது தெளித்துக் கொண்டும்
யதுகுல வீருனிதோ—யதுகுல வீரனை கண்ணனுடன்
வெடலிரி—கோபியர்கள் கோகுலத்திற்கு புறப்பட்டார்கள்,
பங்காரு சீரெலு—தங்க ஜரிகைகள் இழைத்த புடவைகள்
ரங்கைன ரவிகெலு—அழகான ரவிக்கைகள்
உங்கரமுலு வெலயங்க—கைகளில் அணிந்திருந்த மோதிரங்கள் முதலானவைகள் பிரகாசிக்கவும்
ஸொகஸுக—அழகாக
புஜங்கசயனுடு அகு—ஆதிசேஷன்மேல் பள்ளிகொள்பவனை
ரங்கபதினி ஜூசி—ஸ்ரீரங்கநாதனை கண்ணனைப் பார்த்து
பொங்குசு—சந்தோஷத்துடன்
தனிவார—ஆசை தீர
கௌகலிஞ்சுசுனு—அந்தக் கண்ணனை ஆலிங்கனம் செய்து விளையாடிக்கொண்டு கோபியர்கள்
வெடலிரி—அவனுடன் புறப்பட்டார்கள்
வரமைன—சிரேஷ்டமான
கனக நூபுர முலு—தங்கத்தினாலான கால் சிலம்புகள்
கல்லன—கல் என்று சப்திக்கவும்
யுரமுன முத்யால ஸருலெல்லகதலக—கழுத்திலணிந்த முத்து மாலைகள் அசைந்தாடவும்
கரமுன—கைகளால்
ஸொகஸைன விரிஸுரடுலசே—அழகான புஷ்ப விசிறிகளால்
விஸருசு—கண்ணனுக்கு விசிறிக்கொண்டும்
த்யாகராஜ வரதுனி பொகடுசு—த்யாகராஜ வரதனான கண்ணனைத் துதித்துக் கொண்டும்
வெடலிரி—கோபியர்கள் புறப்பட்டாரகள்

III

ஒரு சமயம் கோபிகைகள் கண்ணனுடன் யமுனையில் ஓடத்திலேறி மிகுந்த குதூகலத்துடன் பொழுதுபோக்க, அதன் விளைவால் கோபியர்களுக்கு ஏற்பட்ட கர்வத்தை அடக்கி. தன்னிடம் உண்மையான பக்தி உண்டாகுமாறு செய்ய, கண்ணன் ஓர் திருவிளையாடல் புரிந்தார்.

அவருடைய ப்ரேரணையால் கடுமையான புயல் காற்று மழையும் உண்டாகி, ஓடமும் யமுனையில் மூழ்க ஆரம்பிக்கவே, கோபியர்கள் மதிமயங்கி கண்ணன் கூறிய வண்ணம் தங்கள் ஆடைகளை ஓடத்தின் துவாரத்தில் அடைத்தும் யாதொரு பயனும் ஏற்படாது போனதால் மிகுந்த கலவரமடைந்து தங்கள் கர்வத்தை விட்டொழித்தவர்களாய் பரமாத்மாவான கண்ணனை சரணடைந்து தங்களை ரக்ஷித்தருளுமாறு வேண்டிக் கொண்டனர்.

அதற்கு பகவான் அவர்களிடம் கருணை கொண்டு தன்னுடைய சக்தி விசேஷத்தால் அவர்களை ஆடையாபரணங்களுடன் கரை சேர்த்தருளினார். அப்போது கோபியர்கள் மிகுந்த களிப்புடன் பகவானுக்கு அலங்காரங்களைச் செய்து கண்டு மகிழ்வெய்தினர்.

குமகும:—இது நௌகா சரித்திரத்தில் 20-வது கீர்த்தனம். கண்ணனுக்கு அலங்காரம் செய்து, கோபியர்கள் அவனுடன் கோகுலத்திற்கு சென்ற காட்சி இக்கீர்த்தனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

IV

ராகம் ஸௌராஷ்டிரம் — மிச்ர சாபு

(17-வது மேள ஜன்யம். ஆ. ஸம்பூர்ணம். அவ. ஸநிதநிதபமகமாகரிஸா.)

பல்லவி

ஸ தா	பா மா	க மா	க ரி ரீ	ஸ தா	ஸா ரீ	க ரீ	ஸா ஸா
கு ம	கு ம	கு ம	ய . னி	வா .	ஸ ன	தோ .	மு த் து
; த	ஸா ஸா	ஸா ரீ	ஸா ரீ	க மா	பா மா	பா ,	; ;
கு ம்	ம லு	வெ ட	வி ரி	ஜு .	. ட	. ரே	

அனுபல்லவி

நி தா	நீ ஸா	ஸ் ஸா	ரி ஸ் ரீ	ஸ் நீ	ஸ்ா ஸ் நி	த த நி	த ப பா
ம ம	த தோ	. னு	ஸு . ர	வ ரு	லெ ல் ல .	ஸு ர .	த . ரு
ப தா	ஸ்ா ஸ் நி	த த நி	த ப பா	ப பா	த ப ப ம	க மா	க ரி ரீ
ஸு ம	வா . .	ன லு .	கு . ரி	யி ம்	ப . க .	வே ட் .	க . க

(சரணங்களை பல்லவி அனுபல்லவி போன்றே பாடவும்.)

ஆட்டிக்கொண்டிருந்தார்கள் சிலர். இன்னும் சிலர் இளநீரை மலை போல் குவித்து தாகத்தினால் நாவரண்டு வருகிறவர்களுக்கு ஒவ்வொன்ருய் விலை பேசி எடுத்துச் சீவிக்கொடுத்துக்கொண்டிருந்தார்கள். மற்ெருரு இடத்தில் ஒருவன் பளபளவென மின்னும் அறிவாளால் அழகான நொங்குகளைத் தோண்டிப் பனை ஓலையில் அடுக்கிக்கொண்டிருக்க ஒரு இளம் பெண்—அவன் மனைவிபோலிருக்கிறது—அதையெல்லாம் விலையாக்கிக்கொண்டிருந்தாள். அவள் கிராமத்துப் பெண். தன் இளமையின், யௌவனத்தின் வனப்பு அவயவங்களை நாகரீகப் பெண்மணிகளைப் போல் மறைத்து மூடிவைக்கும் ஆற்றலை யறியாதவள், அதைப் பற்றி அவளுக்குக் கவலையுமில்லை. ஆனால் அவள் கையால் நொங்கு வாங்கிச் சாப்பிட வேண்டுமென்றே, அவளைச் சுற்றி நெருங்கி எத்தனை வாலிபர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்! அவளும் அவர்கள் கள்ளக் கருத்தை அறிந்தோ, என்னமோ புன்னகை பூத்த வண்ணமே காசை வாங்கி மடியில் போட்டுக்கொண்டிருந்தாள். சில பணக்காரர்கள் தங்கள் மடங்களின் முன் கட்டியிருந்த மண்டபங்களில் ஒரு ஆளை நியமித்து நீர் மோர், பானகம் முதலிய பானங்களை, களைப்போடு வருகிறவர்களுக்கு ஊற்றிப் புண்ணியத்தைச் சுலபமாகச் சம்பாதித்துக்கொண்டிருந்தார்கள்.

காத்தனும் வேலாயியும் அந்தக் கூட்டத்தையெல்லாம் ஒருவாறு சிரமப்பட்டு விலக்கிக்கொண்டு கோவிலின் முன் கோபுர வாசற்படி வரை வந்து விட்டார்கள். கூட்டம் நிறைந்திருந்த இடம் சுமார் இரண்டு பர்லாங் தானிருக்கும். அந்தச் சிறு தூரத்தைக் கடந்து வருவதற்குள் வேலாயி 'வேர்த்து விருவிருத்துப்' போய்விட்டாள். அவள் அழகாக நெற்றிக் கிட்டிருந்த குங்கும திலகம் கலைந்து போய்விட்டது. கஜம் ஒன்றே கால் ரூபாய்க்கு எடுத்துத் தைத்திருந்த ரோஸ் வர்ணப் பட்டு ரவிக்கை கசங்கித் துவண்டுவிட்டது. அதைக் கடந்து வந்தது அவளுக்கு அவ்வளவு பிரமாதமாகத் தெரியவில்லை. இன்னும் சுவாமி சந்நிதியை அடைய வேண்டுமே. வெளியிலிருந்தபடியே ஏறிட்டுப்பார்த்தாள். ஜனத்திரள் அப்படியே அசையாமல்—முன்னேறவோ, பின்வாங்கவோ முடியாமல் நின்றிருந்தது. அதைக்கண்டு அவள் அரண்டு விட்டாள். வாசற்படியில்கூட காலை எடுத்துவைக்க முடியவில்லை. மெதுவாகத் தன் கணவன் கையைப் பிடித்தாள். அவனும் அவள் முகத்தை நோக்கினன்; குறிப்பறிந்தான்; கூட்டத்தை விட்டு விலகி வந்து விட்டான்.

"இதில் எப்படிப் போய்த் திரும்பரது?" என்ருள் அவள்.

"நான் கூட்டிப் போரேன், என் பின்னலே வா."

"ஊம், ஹூம். என் உயிர் போயிடும்."

"அப்படின்னு இப்ப என்ன சொல்றே? சாமியைப் பாக்கப் போலாமா, வேண்டாமா?"

"பாத்த சாமிதானே, இன்னிக்கி என்ன புதுசா இருக்கப் போவுதா?"

"சரி; இப்ப என்ன செய்றது? திரும்பிப் போயிடலாமா?"

"எங்கே, வீட்டுக்கா? வேண்டாம். நான் மலைக்குப் போனதே இல்லே. அங்கே வேனுமானுப் போயிட்டு வரலாம்."

"என்ன? இந்தக் கூட்டத்தைக் கண்டே கதி கலங்கிட்டியே, அவ்வளவு ஓசரத்திலே எப்படி ஏறி இறங்குவே"

"எவ்வளவு ஓசரமிருந்தாத்தான் என்ன? இந்தமாதிரி கூட்டம் இருக்காதில்லே"

"உம ஒன்னிஷ்டத்தைத்தான் ஏன் கெடுக்கனும், பெறப்பிடு"

ஆலயத்தின் பின்பக்கத்தில் வானளாவ உயர்ந்திருக்கும் குன்றின் அடிப்பாகத்தைக் குடைந்து செதுக்கப்பட்டிருக்கிறது மூலஸ்தானத்திலுள்ள அழகான சுப்ரமண்யர் விக்கிரஹம். அக்குன்றின் மீதேறிச் செல்ல சரியான படிக்கட்டுகளே கிடையாது. சிற்சில இடங்களில் மனிதர்களே தங்கள் சௌகரியத்திற்காக அங்குள்ள கற்களையே அடுக்கிப் படிகளை உண்டுபண்ணி இருக்கிருர்கள். சில இடங்களில் செங்குத்தான பாறைகளிலேயே கால் வழிக்கிப். விழாதபடி லேசாகப் படிகள் வெட்டிவிடப்பட்டிருக்கின்றன,

காத்தான் கிராமவாசி. அந்தக் குன்றை ஒரே தாவில் தாவிச் சென்று விடுவான். வேலாயியும் கிராமத்தாள்தான். எனினும் பெண்தானே! அவனேடு சேர்ந்து வேகமாகச் செல்ல முடியவில்லை. சுமார் 500 அடி உயரமுள்ள அந்தக் குன்றின் உச்சிக்குச் செல்ல அரைமணி நேரம் பிடித்தது. அவர்களைப் போலவே கூட்டத்திற்கு பயந்து கொண்டு வந்த எத்தனையோ பேர்கள் குன்றைச் சுற்றிப் பார்த்து வந்து கொண்டிருந்தார்கள். கிராமத்திலிருந்து புறப்பட்டு எந்த இடத்திலும் உட்காராமல் நாலு மைல் நடந்து வந்து, அதே மூச்சில் குன்றிலும் ஏறியபடியால் வேலாயி துவண்டு போய்விட்டாள். மாந்தளிர் போன்றிருந்த முகம் வெய்யிலில் கருத்துச் சுருங்கிக் களைப்படைந்து காணப்பட்டது. குறு குறுவென்றிருந்த கண்கள் குழி விழுந்து விட்டன. குன்றின் சிகரத்தில், தென் கோடியில் ஒரு வற்ருத சுனை இருக்கிறது. அதன் அருகில் புளிய மரங்கள் அடர்ந்திருக்கின்றன. அந்த இடத்தில் போய் இருவரும் உட்கார்ந்து விட்டார்கள். அவளுக்குப் பேசக்கூட முடியாமல் மேல் மூச்சு வாங்கியது. காத்தான் அவளைப்பார்த்துச் சிரித்தான் அந்தச் சிரிப்பிலிருந்த நையாண்டியை அவள் தெரிந்துகொண்டு, 'எனக்கு இப்ப இந்தச் சொம்பு நிறையத் தண்ணி கொண்டுவந்து கொடுத்து தாத்தான் உன்கூடப் பேசுவேன்" என்ருள்.

"நீ பேசவே வேண்டாம்" என்ருன் அவன். அவள் பரிதாபமாக அவனை நோக்கினள். அதற்கு மேல் அவனல் அங்கே இருக்க முடியவில்லை. ஒரே ஓட்டத்தில் ஓடி தண்ணீர் கொண்டு வந்து விட்டான்.

அதே வேகத்தில் அவளும் அதைப்பருகி "அப்பா போன உசுர் வந்த மாதிரி இருக்கு" என்று சொல்லிக்கொண்டே முந்தானையைத் தரையில் விரித்துச் சாய்ந்து விட்டாள்.

அவர்களைப் போல் தம்பதிகளெல்லாம்—நகரத்து வாசிகளும் கிராமத்தார்களும்—நிழல் கண்ட இடங்களில் தனித்தனியாகவும், 'குழந்தை குட்டி'களுடனும் உல்லாசமாகப் பேசிச் சிரித்துக் களைப்பாறிக்கொண்டிருந்தார்கள்.

நாலாபக்கத்திலும் தன் திருஷ்டியைச் செலுத்திக்கொண்டிருந்த காத்தானின் கண்வீச்சில் வெகு தூரத்தில் மதுரையம்பதியின் மத்தியில் ஒய்யாரமாகக் காட்சியளித்து நின்ற நான்கு உயர்ந்த கோபுரங்களும் நன்ருய்த் தெரிந்தன. மற்ெருரு புறத்தில் சிறுவர்களெல்லாம ஓடிப் போய் அடிவாரத்தில் தெரியும் எதையோ குனிந்து பார்த்து சந்தோஷ ஆரவாரம் செய்வதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான், தெற்கேயிருந்து திருப்பரங் குன்றம் ஸ்டேஷனை நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் அட்டை ஊர்ந்து வருவது போல தெரிந்தது. வயல் வெளியில் மேய்ந்துகொண்டிருந்த மாட்டு மந்தையில் ஒவ்வொரு மாடும் பூனைக் குட்டி திரிவது போலிருந்தது. அந்த அதிசயத்தை தன் மனைவியும் கண்டு களிக்கவேண்டுமென்று "வேலா ஏ வேலா!" என்று கூப்பிட்டான் காத்தான், அப்போதுதான் அவள் கண்ணயர்ந்துகொண்டிருந்தாள். சப்தம்கேட்டுக்கனவு கண்டவள்போல வாரிச்சுருட்டி எழுந்து, "என்ன, என்ன?" என்ருள்,

"ஒண்ணுமில்லே. கீழே, அடிவாரத்துப் பக்கம் பாரு" என்று சுட்டிக் காட்டினுன்.

"அடேயுப்பா! நாமெல்லாம் எவ்வளவு ஓசரத்திலிருக்கோமின்னு இப்பத்தான் தெரியுது!" என்று தன் ஆச்சரியத்தை அவள் வெளியிட்டு விட்டு, "கோயிலுக்குள்ளே போயிருந்தா இதெல்லாம் பாக்கவா போரோம்?" என்று கேட்டாள்.

"நெஜந்தான். ஆனு, நாமொன்னு நெனைக்கத் தெய்வமொன்னு நெனைக்கும் எம்பாங்களே, அது சரியாத்தானிருக்கு" என்ருன் அவன்.

"என் அப்படிச் சொல்றே?"

"நாம் கோயிலுக்குப்போலாம்னு நெனேச்சு வந்தோமே, முடிஞ்சதா?"

"நான் அப்படி நெனைச்சு வரலியே! இன்னிக்கி ஒரு நாளாவது சந்தோஷமா இருந்துட்டுப் போலாமின்னு தான் வந்தேன். தெனமும் வயல்லே வேலெ செஞ்சு செஞ்சு என்னத்தைக் கண்டோம்? என் ஆசையை நெரவேத்த இந்தப் பாலாபிஷேகம் வந்தது."

அப்ப கடவுள் நம் பக்கம் தானிருக்கா போலே இருக்கு!"

"சந்தேகமென்ன?"

"பாரு. அந்தக் கடவுளுக்குக்கூட பெண்ணுகள்ணு எவ்வளவு ஈரக்கமிருக்குது? உலகமே ஓங்களுக்கு வணங்கித் தானே நடக்குது?

"சரி.; சரி, போதும். ஆரம்பிச்சிராதே ஓம் பாடத்தை" என்று அவனை அடக்கினுள் கோபம் கலந்த சந்தோஷத்தோடு.

கோவிலில் 'டணர், டணர்' என்று அடித்த மணியோசை காற்றில் மிதந்து வந்து கேட்டது. "அடே, பொழுது உச்சிக்கி வந்திட்டதே, ஒனக்குப் பசி கிசி தெரியல்லையா? அதோ சாமிக்குக் கூடப் பாலாபிஷேகம் நடக்குது போலிருக்கு. நாமளும் நம்ம வயித்துச் சாமிக்குப் பூஜை போடலாம்." என்று துரிதப் படுத்தினுன்.

இரண்டு பேரும் எழுந்து சுனைக்குச் சென்று கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு வந்தமர்ந்து கட்டமுதை அவிழ்த்தார்கள்.

"நீ மொதல்லே சாப்பிடு. அப்புறம் நான்......" என்று கொஞ்சும் பாவனையில் சொன்னுள் வேலாயி.

அவள் எதிரே கையை நீட்டி உட்கார்ந்திருந்த அவன் கையில் சாதத்தை ஒவ்வொரு உருண்டையாக உருட்டி வைத்து அதன் மேல் தேங்காய்த் துகையலும், மாங்காய் ஊறுகாயும் மாற்றி மாற்றி வைக்க அவன் தேவாமிர்தமாக அதை விழுங்கிக்கொண்டிருந்தான். அதே சமயத்தில் குன்றின் அடிவாரத்தில் குடம் குடமாகப் பால் அபிஷேகம் செய்யப்பெறும் அந்தக் குமரன் கூட காத்தான் அடைந்த ஆனந்தத்தைப் பெற்றிருப்பானே என்னமோ, சந்தேகந்தான்!

'மாயப் பிரபஞ்சத்தில் ஆனந்தம் வேறில்லை..."என்று அழகாகப் பாடிக்கொண்டே ஒரு சிறுவன் சற்று தூரத்தில் ஒரு பாறை மீதிருந்து மற்ெருரு பாறைக்குத் தாவி ஓடிக்கொண்டிருந்தான்.



கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சிக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ், 7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

"வாக்குத் தத்தம்"

"டி. எஸ். ஆர்." எழுதியது

ஒரு அரசன். அவனது திவான் மிகுந்த புத்திசாலி. அரசனிடம் மிகுந்த பக்தி விசுவாசத்துடன் நடந்து வந்தான். திவானுக்குக் குமாரர்கள் இருவர். அவர்கள் சிறுவர்களாயிருக்கும் பொழுதே தகப்பனுரை இழந்து விட்டனர். அரசன் அச்சிறுவர்களுக்குக் கல்வி போதிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்தான். தற்காலிகமாக திவான் பதவிக்கு வேறு ஒருவனை நியமித்துக்கொண்டான். அச்சிறுவர்கள் கற்று தேர்ந்த பிறகு அவர்களில் எவன் சிறந்தவனுகக் காணப்படுகிருனே அவனைத் திவான் பதவியில் வைத்துக்கொள்வதாக மன்னன் அவர்களிடம் தெரிவித்திருந்தான்.

பிள்ளைகள் இருவரும் புத்திசாலிகள். சீக்கிரத்தில் அவர்கள் கல்வியறிவில் தமக்கு நிகர் எவருமில்லை எனச் சொல்லும்படி விளங்கினுர்கள். புதிய திவானுக்குத் தம் பதவி போய்விடுமென்ற யோசனை உண்டாய் விட்டது. அவன் சர்க்கார் கணக்கில் காலஞ் சென்ற திவான் லக்ஷம் ரூபாயைச் சொந்தப் பிரயோஜனம் செய்து கொண்டது போல் ஜோடித்து வைத்து விட்டான். நல்ல சந்தர்ப்பத்தில் அரசனிடம் தான் கண்டுபிடித்தது போல் மேற்சொன்ன விஷயத்தைத் தெரியப்படுத்தி பணத்தைக் கொடுத்தாலொழிய உத்தியோகம் கொடுக்க முடியாது என்று அவனை அச்சிறுவர்களிடம் சொல்லும்படி செய்து விட்டான்.

காலஞ்சென்ற திவான் மிகுந்த நாணயஸ்தன். தனது குமாரர்களுக்கென்று அவன் சிறிது பொருளும் வைத்துப் போகவில்லை. பிள்ளைகள் சாப்பாட்டிற்கே மிகவும் கஷ்டப்பட்டனர். கஷ்டம் தாங்கமாட்டாமல் அவர்கள் அரசனிடம் சென்று 'எங்களுக்கு ஏதாவது வேலை கொடுங்கள். நாங்கள் எங்களுடைய சம்பாத்தியத்தைக் கொண்டு எங்கள் தகப்பனுரின் கடனை அடைத்து விடுகிருேம்' என்று பிரார்த்தித்தனர்.

அரசன் காலியாயிருந்த சேவகன் வேலையில் ஒருவனை நியமித்து மற்றவனை காலி ஏற்படும் காலத்தில் வேலைக்கு வைத்துக் கொள்வதாகச் சொல்லி அனுப்பிவிட்டான். ஒருவன் சேவக உத்தியோகம் பார்க்க ஆரம்பித்தான். மற்றவன் நாட்டைவிட்டுப் போய் விட்டான். சேவகன் வேலையில் கிடைக்கும் சம்பளத்தில் வயிற்றை வளர்த்துக் கொண்டு தகப்பனுர் பட்ட கடனை எப்படி அடைக்க முடியும்?

சில தினங்கள் கழிந்தன. பிறகு ராஜாவின் சபைக்கு ஒரு பண்டிதர் வந்தார். அவர் அரசனைப் பார்த்து 'நான் கேட்கும் நான்கு கேள்விகளுக்கு தங்களுடைய திவானே அல்லது இச்சபையிலுள்ள வேறு எவராவது விடை யளிக்கக் கூடுமா? என்று கேட்டார்.

அரசன் சம்மதிக்கவே பண்டிதர் 'உலகத்தில் எல்லாவற்றையும் விடப் பெரிய பொருள் எது?' என்று கேட்டார். பண்டிதர் ஒப்புக்கொள்ளும் விடையை ஒருவரும் தரவில்லை. அதனல் அரசன் மறு தினம் வரையில் அவகாசம் தரும்படி வேண்டிக் கொண்டான். தனது சபையின் மதிப்பே போய் விடுமே என்ற விசாரத்தில் அரசன் ஆழ்ந்திருந்தான்.

சேவகன் வேலை பார்க்கும் பழைய திவானது மூத்த குமாரன் தனது தகப்பனுரால் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்ட கடன் தொகையில் கால் பாகத்தை தள்ளிக் கொடுப்பதாக உறுதிமொழி யளித்தால் நான் பண்டிதருக்கு திருப்தி உண்டாகும் வண்ணம் விடையளிப்பதாக விண்ணப்பித்துக் கொண்டான். அரசனும் உடனே சம்மதித்தான். மறுநாள் பண்டிதர் வந்ததும் சேவகன் "வாக்குத் தத்தமே" தான் எல்லாப் பொருள்களைக் காட்டிலும் அதிக மதிப்புள்ளது என்று விடை பகர்ந்தான். பண்டிதர் சரியென ஒப்புக் கொண்டார்.

இரண்டாவது வினு:—அது எங்கே இருக்கிறது? சபையிலுள்ளவர்கள் 'பணக்காரர்களிடம், வித்துவானிடம், அரசனிடம், என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பதில் சொன்னுர்கள். பண்டிதர் திருப்தியடையாததைக் கண்டு அரசன் தான் மறுபடி மேற்சொன்ன கடன் தொகையில் கால் பாகத்தை விட்டுக் கொடுப்பதாகச் சொல்லி அச் சேவகனை அக் கேள்விக்கு பதிலளிக்குமாறு சொன்னுன். அவன் உடனே 'வாக்குத் தத்தம்" உண்மையில் இருக்கிறது' என்ருன். அதாவது ஒருவன் ஒரு வாக்குக் கொடுத்து விட்டால் அதை நிறைவேற்றினுல் தான் அதற்கு மதிப்பு ஏற்படும் எனப்பொருள்.

மூன்ருவதாக 'அது எதைச் சாப்பிடுகிறது?' என்ருர் பண்டிதர். இக் கேள்வியின் பொருள் சபையிலுள்ள எவருக்குமே விளங்காததனுல் யாவரும்விழித்தனர். சேவகனுடைய கடனில் மறுபடியும் கால் பாகம் தீர்ந்து விட்டது. அவன் உடனே கஷ்ட நஷ்டங்களை ஆகாரமாக கொள்ளுகிறது, அதாவது ஒருவன் தன் வாக்கை நிறைவேற்றி வைக்க அதனுல் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களையும் அவமானத்தையும் பொருள் நஷ்டத்தையும் மனமொப்பி சகித்துக்கொள்ளுகிருன் அல்லவா, என்ருன். பண்டிதர் பரம திருப்தியடைந்தார்.

கடைசியாக 'அதனுல் என்ன செய்யக்கூடும்?' என்ருர் பண்டிதர். புதிய திவான் அலட்சியமாக, 'என்ன ஐயா! வாக்குத் தத்தம் எதைச் செய்யமுடியும் என்ருர். சபையிலிருந்த மற்றவர்கள் பேசாமலிருப்பதே மேலென இருந்து விட்டனர்.

கடனில் பாக்கி இருந்த இருபத்தையாயிரமும் செலவு எழுதப்பட்டது. சேவகன் சபையோர் முன் வந்து பணத்தினுலோ பலத்தினுலோ கல்வியினுலோ செய்ய முடியாத காரியத்தை 'வாக்குத் தத்தம்' நிறைவேற்றும். ஒருவன் தான் செய்த வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுவானுனல் அதனல் அவனுக்கு ஏற்படும் நன்மதிப்பானது செல்வத்தாலும் கல்வியினுலும் பலத்தினுலும் அடைய முடியாது என்பதாம். பண்டிதர் இவ்விடையைக் கேட்டு அளவில்லா ஆனந்தமடைந்தார்.

அவர் அரசனைப் பார்த்து. "மஹாராஜா! தங்களது சேவகன் எனது கேள்விகளுக்கு சரியானபடி பதில் சொல்லி தன் தகப்பனுரால் ஏற்பட்ட கடன் சுமையைத் தீர்த்துக் கொண்டான். இப்பொழுது அவன் தனது தகப்பனுரின் திவான் பதவியை அடைவது தான் நியாயமாகும். நான் அவனது இளையசகோதரன். எங்கள் தகப்பனுர்மீது புதிய திவான் பொய்க் கணக்கு எழுதினுர். ஆகையால் கணக்குகளைச் சோதனை செய்து நியாயம் வழங்கப்பட வேண்டும்என்பது எனது பிரார்த்தனை என்று தெரிவித்துக் கொண்டார்.

அவ்விதமே கணக்குகள் சோதிக்கப்பட்டதும் புதிய திவானின் சூழ்ச்சி வெளிப்பட்டது. புதிய திவான் காராகிரகப் பிரவேசமடைந்தார். சேவகன் வேலை பார்த்த மூத்த சகோதரன் திவான் பதவியை அடைந்தான். அவனது தம்பி அரசனது அந்தரங்கக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டான்.

லாகூர் தென்னிந்திய மாதர் சங்கம்

சமீபத்தில் லாகூரில் தென்னிந்திய மாதர் சங்கத்தின் 6-வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

அரிய தமிழ் நாவல்கள்.

வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது.

	ரூ.	அ.
வைதேகி	2	8
பத்மசுந்தரன்	2	8
சாருலோசனு	2	8
காதலின் கனி	2	8
[illegible]தாமணி	2	8
தியாகக் கொடி	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0
சாமளநாதன்	2	0
மங்களபாரதி	2	0
சண்பகவிஜயம்	1	12
கௌரீமுகுந்தன்	1	12
ஸாரமதி	1	12
உணர்ச்சி வெள்ளம்	1	8
சந்தோஷமலர்	1	8
சோதனையின் கொடுமை	1	8
ராஜமோகன்	1	4
அனுதைப்பெண்	1	4
இன்பஜோதி	1	4
வானக்குயில்	1	4

சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

பியான்ஸி பிரிண்ட் புடவை

நைஸான துணி. அழகிய கண்ணைக் கவரும் பிரிண்ட். உடலில் புட்டா அல்லது ஜங்களா போட்டது. படித்த மாணவிகள் இதைப் பெரிதும் விரும்புகிருர்கள். நவீன ரகம்.

12 முழம் புடவை 1க்கு ரூ. 9-0-0
16 முழம் ,, ,, ரூ. 12-0-0

முத்தையா ஸ்டோர்ஸ், மவுண்ட் ரோட்—மதராஸ்.

ஆயுர்வேத ரத்ன எஸ். பி. பிள்ளை (ஆர். ஐ. யம். பி.) அவர்களின்

நெக்டார்	5 அவு. புட்டி	1க்கு	1-4-0
கிரைப் வாட்டர்	5 ,,	,,	1-4-0
ஓமவாட்டர்	24 ,,	,,	1-2-0
இங்கிலீஷ் வெனிசர்	24 ,,	,,	1-4-0
சர்மவியாதி நிவாரணி	100 மாத்திரை		1-0-0
பற்பொடி	20 பொட்லம்		1-4-0
கால்ரா பவுடர்	6 வேளை மருந்து		1-0-0
சுவர்ணுள் சம்மர் ஆயில்	4 அவு. பு.	1க்கு	2-0-0
பாவலர் ரிடைனே பில்ஸ்	20க்கு		1-4-0

தபாற்செலவு வேறு. மருந்தின் பாதிக்கிரயம் முன் பணமாக அனுப்பப்படவேண்டும்.

கிடைக்குமிடம்: ஸ்வர்ணு ஸ்டோர்ஸ், 19, மீரான் சாயபு தெரு. மவுண்ட் ரோடு :: சென்னை.

நீதிஸ்தலம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

போஷிக்க வேண்டிய முதற் கடமையை மகனுகிய நீ செய்தே தீரவேண்டும், ஆகவே அவரை வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு போய் நீ ஆதரிக்க வேண்டும், இல்லையேல் இந்த தேசத்தை விட்டு நீ வெளியே போய்விட வேண்டும். நான் ஏன் அப்படி செய்ய வேண்டும்? பசுவிலும் கன்றிலும் பாதியை அடையவே நான் இந்த வழக்கை தொடங்கினேன். இந்த வழக்கை தாங்கள் தள்ளி விட்டீர்கள். நான் ஏன் தகப்பனுருக்கு அன்னமளித்துக் காப்பாற்ற வேண்டும்? என்று மகன் கேட்டான். 'ஏனெனில், நீ எந்த முனிவர்களின் வாக்கியப்படி பசுவிலும் கன்றிலும் பாதியை அடைய விரும்பினுயோ, அதே முனிவர்கள் அப்படிச் சொல்லியிருக்கின்றனர். ஆரிய தேசத்து அரசனுன நான் அவர்கள் கட்டளைப்படி நடந்தே தீர வேண்டும்' என்று சக்கிரவர்த்தி எடுத்துச் சொன்னுர். ஆகவே, இந்த வழக்கினுல் எனக்கு உரிமை ஏற்படாமற் போனுலும், நஷ்டமேற்பட்டு விட்டது என்று மகன் சொல்லிக் கொண்டான். சில சமயங்களில் அப்படி ஏற்படுவது சகஜம். நீதிஸ்தலங்கள் காரணங்களைக் கண்டு பிடிப்பதற்காக மட்டும் ஏற்பட்டவைகளல்ல. நியாயத்தை நிலை நாட்டுவதற்காகவே நீதிஸ்தலங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சக்கரவர்த்தி எடுத்துச் சொன்னுர்.

வழக்கம்

அடுத்த வழக்கு, ஐந்து சகோதரர்களுக்குள் பாகவிஷயமாக ஏற்பட்ட வழக்காயிருந்தது. மூத்தசகோதரனும் கடைசி சகோதரனும் ஆஸ்தியில் அதிக பங்கைப் பெறுவதா அல்லது எல்லோரையும் போலவே சமமான பங்கைப் பெறுவதா என்பதைக் குறித்து விவாதம் ஏற்பட்டது. மனு தர்ம சாஸ்திரப்பிரகாரம், தகப்பனுருக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளைச் செய்ய வேண்டியிருப்பதால், அதிக பங்கு ஆஸ்தியில் பெற மூத்த மகனுக்கு உரிமை உண்டு. தகப்பனுருடைய ஆதரவை மற்ற சகோதரர்கள் அடைந்த காலம், கடைசிக்குமாரன் அடைய முடியாததலை், கடைசிக் குமாரனுக்கும் அதிக பங்கு ஆஸ்தியில் அளிக்கவேண்டும் என்று மனு தர்ம சாஸ்திரம் கூறிற்று. ஒருவனுக்கு இரண்டே குமாரர்கள் இருக்கும் பக்ஷத்தில், ஆஸ்தி சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். சக்கரவர்த்தி பின்வருமாறு சொன்னுர்: 'சகோதரர்கள் எல்லோரும் சமபாகத்தைப் பெற உரிமையுள்ளவர்கள். ஒரு முனிவர், தன்னுடைய அனுபவத்தினுல், எல்லோரும் சம பாகத்தை அடைவது தான் நியாயமென்று கூறியிருக்கிறுர். ஆனுல் சட்டத்திற்கும், வழக்கத்திற்கும், இந்த விஷயத்தில் முரண்பாடு ஏற்படவில்லை. அவருக்கு இரண்டே குமாரர்கள் இருந்திருந்தபடியால், சமமாகப்பாகம் செய்து கொடுப்பது சுலபமாயிருந்திருக்க வேண்டும்' என்று மூத்தவனும், இளையவனும் எடுத்துச்சொன்னுர்கள். 'உங்களுடைய ஆத்திரத்தில், கண்டபடி பேசாதீர்கள். அவர்கள் பெரிய சகோதரனும், அவனுக்கு அடுத்த சிறிய சகோதரனுமாகத்தானிருந்திருக்க வேண்டும். அந்தப்பெரிய முனிவருக்கு இந்தச் சிறிய விஷயம் தெரியாமலிருந்திருக்க முடியாது' என்று சக்கரவர்த்தி எடுத்துச் சொன்னுர்.

ஆறுதலுண்டாக்க அளிக்கும் பணம்.

பனிரெண்டு வருஷங்கள் வாழ்க்கை நடத்திய பிறகு கூட சந்ததியில்லாமற் போனுல் இரண்டாவது மனைவியை விவாகம் செய்து கொள்ள சட்டம் இந்தியாவின், பழைய காலத்தில், அனுமதி யளித்தது. அந்தக்காலத்தில் ஒருவன் கலியாணம் செய்து கொள்ள மணப் பெண்ணிற்கு ஏராளமான திரவியம் கொடுக்க வேண்டியிருந்தது. அதுவும் இரண்டாவது கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறவன் அதிக திரவியம் செலவு செய்ய வேண்டியிருந்தது. மணமகனுக்கு வயதாகியும், மணமகள் பாலியப் பருவத்தினளாயுமிருந்ததனுல், இரண்டாம் கலியாணம் செய்து கொள்கிறவர்கள் பணத்தைச் செலவு செய்தே தீர வேண்டியிருந்தது, மேலும், சட்டப்படி முதல் மனைவிக்கும் அவர்கள் ஏதோ திரவியம் கொடுக்க வேண்டிய நியமும் இருந்து வந்தது. அவ்வாறு பணம் கொடுத்து முதல் மனைவிக்கு ஆறுதலை உண்டு பண்ணுத போனுல், சாபம் கொடுத்து இரண்டாம் மனைவியையும் மலடாகச் செய்து விடுவாளோ என்ற பயம் மணமகனுக்கு இருந்து வந்ததே அந்த வழக்கத்திற்குக் காரணம் பரத சக்கரவர்த்தியின் முன்பு மேற்கூறிய, விவாக விஷயமான வழக்கு ஒன்று கொண்டு வரப்பட்டது. இரண்டாவது மனைவிக்குக் கொடுக்கப்படும் தொகைக்குச் சமானமான தொகையையே தனக்கும் கொடுக்க வேண்டுமென்று முதல் மனைவி கேட்டாள். 'நாங்களிருவரும் என் கணவனுடைய மனைவிகள். எங்களுக்குள் ஏன் வித்தியாசமிருக்க வேண்டும்? இரண்டாவது மனைவி பெறும் தொகைக்கு சமானமான தொகையையே நானும் நியாயப்படி பெற வேண்டும்' என்று முதல் மனைவி சொன்னுள். பரத சக்கிரவர்த்தி பின் வருமாறு தீர்ப்பளித்தார். 'இந்த இரண்டாவது விவாகம் எதை உத்தேசித்துச் செய்யப்படுகின்றதென்பதை நாம் கவனிக்க வேண்டும். புத்திர சந்தானத்தை உத்தேசித்தே இந்த விவாகம் செய்யப்படுவதால், முதல் மனைவிக்கும், இரண்டாவது மனைவிக்கும் வித்தியாசமிருக்கிறதென்று ஏற்படுகின்றது. இரண்டாவது மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாள். அந்த ஆண் குழந்தையைப் பாதுகாக்க திரவியம் பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப்பட வேண்டும். ஆதலால் இரண்டாவது மனைவிக்குக் கலியாணத்திற்காகக் கொடுக்கப்படும் தொகையில் பாதி, முதல் மனைவிக்கு ஆறுதலை உண்டு பண்ணுவதற்காக கொடுக்கப்பட வேண்டும்!

உண்மையே பேசுதல்

ஒரு குருடனைப் பெயர் சொல்லிக் கூப்பிடாமல், பல முறை 'குருடனே' என்று கூப்பிட்ட குற்றத்திற்காக, ஒருவன் பரத சக்கரவர்த்தி முன்பு கொண்டு வந்து நிறுத்தப்பட்டான். தான் உண்மையே பேசியதாகவும், உண்மை பேசியதற்காகத் தன்னைத் தண்டிப்பது நியாயமல்லவென்றும் குற்றவாளி எடுததுச் சொன்னுன், 'நமது முன்னேர்கள் அப்படி சொல்லவில்லை. "உண்மை பேசு ஆனுல் அதனுல் பிறர் மனது நோகும்படி செய்யாதே. பிறர் மனது சந்தோஷப்படும்படி பேசு, ஆனுல் பொய் பேசாதே" என்று மனு சொல்லியிருக்கிறுர் ஆனுல் நீயோ, பல முறை, பிறர் மனதைப் புண்படுத்தக்கூடிய உண்மையைப் பேசியிருக்கிறுய், ஆகையால் உனக்கு நூறு பாண நாணயங்கள் அபராதம் விதித்திருக்கிறேன்" என்று பரத சக்கிரவர்த்தி தீர்ப்பளித்தார். 'நான் கூறியதற்கும் மான நஷ்டத்திற்கும என்ன சம்பந்தம்?" என்று குற்றவாளி கேட்டான். நீ கூறியது மான நஷ்டத்தை உண்டு பண்ணவில்லை. மனதிற்கு அருவருப்பையும், சமாதானத்திற்குப் பங்கத்தையும் நீ கூறிய வார்த்தைகள் உண்டு பண்ணியிருக்கவேண்டும். ஆரிய தர்மப் பிரசாரம் மேற் கூறிய குற்றத்தைச் செய்தவனுக்கு அபராதம் விதித்தே ஆக வேண்டும் என்று சக்கரவர்த்தி பதிலளித்தார்.

★ உடுமலைப்பேட்டை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் 7-வது ஆண்டு விழா சமீபத்தில் ஸ்ரீமான் வி. ஸி. வெள்ளிங்கிரி கவுண்டர் தலைமையில் நடந்தது. சங்கத் தலைவர் ஸ்ரீமான் ஆர். சதாசிவம் பிள்ளையின் உருவப்படமும், காரியதரிசி ஸ்ரீமான் யு. எஸ் சிவசுப்ரமண்ய கவுண்டரின் உருவபபடமும் திறந்து வைக்கப் பட்டன. ★

சிறுவர் கதை

★

தந்திரம் பலித்தது

★

ஆர். மருதப்பா

வெள்ளியங்கிரியும் தங்கமாபுரியும் அடுத்தடுத்த ராஜ்யங்கள். அதன் இரண்டு அரசர்களும் நெருங்கிய நண்பர்கள். ஒரு நாள் அவர்கள், வெள்ளியங்கிரி இளவரசியை தங்கமாபுரி இளவரசனுக்கு விவாகம் செய்ய நிச்சயித்தார்கள்.

இந்த விஷயம் இளவரசனுக்கும் இளவரசிக்கும் சந்தோஷத்தை அளித்தது. அன்று முதல் இருவரும் நெருங்கிப் பழகி வந்தார்கள்.

கொஞ்ச நாளைக்குப்பிறகு தங்கமாபுரி அரசரின் பிறந்த தினக்கொண்டாட்டத்திற்கு வெள்ளியங்கிரி அரசர் விஜயம் செய்திருந்தார். அன்று விருந்தில் ஏதோ தவறு ஏற்பட்டு அதனுல் வெள்ளியங்கிரி அரசருக்கு கோபம் வந்து விட்டது. தன் புத்திரியின் விவாக நிச்சயத்தை ரத்து செய்து விட்டார்.

இந்த விஷயத்தை அறிந்த இளவரசி தன் தந்தையிடம் சென்று எவ்வளவோ சமாதானம் செய்தும் அவர் கோபம் தணியவில்லை. அவளுக்குக் கவலை அதிகரித்தது. தன் அறைக்குச் சென்று ஒரு கடிதத்தில் தனக்கும் தன் தந்தைக்கும் நடந்த விஷயத்தை எழுதி, தங்கமாபுரி இளவரசனுக்கு அனுப்பினுள். கடிதத்தை படித்த இளவரசன் அதன் பின்புறமே இரண்டு வரிகளை எழுதி இளவரசிக்கு அனுப்பினுன். அதைப் படித்த இளவரசி மறு தினம் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. கேட்பவருக்கெல்லாம் தனக்கு உடம்பு சுகமில்லையென்றும் வாய் பேச முடியவில்லையென்றும் ஊமை ஜாடை காட்டினுள்.

வேலைக்காரிகள் இதை அரசனிடம் தெரிவித்தார்கள். அரசர் சமஸ்தான வைத்தியனை அழைத்து வந்து காண்பித்தார். வைத்தியன் நாடியைப் பரிசோதித்துப் பார்த்து, "உடம்பில் எவ்விதமான வியாதியுமில்லை. ஒருகால் பேய் பிசாசின் சேஷ்டையாயிருந்தாலும் இருக்கலாம்,யாராவது ஒரு மாந்திரகனை அழைத்துக் காண்பியுங்கள்'' என்ருன்.

அந்த ஊரிலுள்ள குட்டி மாந்திரீகன் முதல் பெரிய மாந்திரீகன் வரை ஒரு கை பார்த்தார்கள். வியாதி என்னமோ குணமாகவில்லை.

ஒரு நாள் அரசர் இதே வியாகூலத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது மந்திரி வந்து, "அரசே பிரதிதினமும் புது புது மாந்திரீகர்களெல்லாம் வந்து போகிருர்களே ஒழிய அரசியின் வியாதி தீர்ந்தபாடில்லை. கஜானு முக்கால் பாகத்திற்கு மேல் காலியாகி விட்டது'' என்ருன்.

மறுநாள் அரண்மனையின் முன் ஒரு பலகை தொங்கிற்று. அதில் இள்வரசியின் வியாதியை குணப் படுத்துகிறவர்கள் இளவரசியை விவாகம் செய்து கொள்ளலாமென்றும் குணப்படுத்தத் தவறினுல் அவர்கள் தலையை வெட்டி விடப்படுமென்றும் எழுதியிருந்தது. அன்று முதல் ஒரு மாந்திரீகனும் அரண்மனை பக்கமே தலை காட்டுவதில்லை. இரண்டு தினங்களுக்குப் பிறகு ஒரு வாலிப சன்னியாசி அரசர் சபைக்கு வந்து, அரசரைக் கண்டு, "அரச பூபா! நான் ஒரு தேச சஞ்சாரி. அநேக தேசங்களைச் சுற்றி மந்திர தந்திரங்களில் தேர்ச்சி பெற்றவன். உமது அரண்மனை முன் தொங்கும் பலகையைப் பார்த்து இங்கு வந்தேன். உமது குமாரத்தியின் வியாதியை நான் குணப்படுத்தி விட்டால் பலகையில் உள்ளபடி நடந்து கொள்வீர்களல்லவா'' என்ருன்.

அரசர், "தடையின்றி நடந்து கொள்வேன்.'' என்ருர்.

சந்நியாசி, "அதில் இன்னொரு நிபந்தனையும் உண்டு. உமது குமாரத்தி குணமடைந்து விட்டால் அவளை நான் இங்கு விவாகம் செய்து கொள்ள முடியாது, அவளை என்னுடன் அழைத்துக் கொண்டு போய்விடுவேன், நான் எப்பொழுது விவாகம் செய்து கொள்ளுகிறேனே அப்போது தங்களுக்கு அழைப்பு அனுப்புவேன், அதற்கு சம்மதமானுல் சொல்லுங்கள்'' என்ருன்.

அதைக் கேட்ட அரசன் எப்படியாவது தன் குமாரத்தி சுகமடைந்தால் போதுமென்று நினைத்து சன்யாசியின் நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டார். பிறகு சன்யாசியை அழைத்துக் கொண்டு போய் இளவரசியிடம் விட்டார். இரண்டு தினங்களில் இளவரசி பூரண சுகமடைந்தாள். அரசனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ஆனுலும் முன் பின் அறியாதவனுடன் அவளை அனுப்புவதைப் பற்றி கவலை கொண்டார். என்னசெய்வது? வாக்கின்படி நடப்பது தானே க்ஷத்திரியர்களுக்கு அழகு. ஒரு சுப முகூர்த்தத்தைப் பார்த்து இளவரசியை அவனுடன் அனுப்பி வைத்தார். நான்கு தினங்களுக்குப் பிறகு வெள்ளியங்கிரி அரசருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், "என் குமாரனுடன் அனுப்பிய தங்கள் குமாரி வெகு க்ஷேமமாய் வந்து சேர்ந்தாள். அடுத்த முகூர்த்தத்திலேயே விவாகத்தை நடத்தி விட உத்தேசித்திருக்கிறேன். ஆதலால் தாங்கள் பழைய விரோதத்தை மறந்து இந்தக் கடிதம் கண்டதும் புறப்பட வேண்டும்.

இப்படிக்கு

தங்கமாபுரி சக்கரவர்த்தி''

என்று எழுதியிருந்த கடிதத்தைப்படித்த வெள்ளியங்கிரி அரசர் திடுக்கிட்டார். தன் குமாரத்தி செய்தது அவ்வளவு சாகசமென்றும், சந்நியாசியாக வந்தது தங்கமாபுரி இளவரசனென்பதையும் அப்பொழுது தான் உணர்ந்தார். தன் குமாரத்தியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு தன்னை ஏமாற்றி விட்டாளென்று அவள் மீது கோபம் கொண்டார். இனி என்ன செய்வது, பழைய விரோதத்தை மறந்து உடனே தங்கமாபுரிக்குப் புறப்பட்டார். தங்கமாபுரி அரசரும் வெகு மரியாதையுடன் இவரை எதிர்கொண்டழைத்தார். ஒரு சுப முகூர்த்தத்தில் விவாகம் சிறப்பாக நடந்தது.

யௌவனமாகவும் வசீகரமாகவும் ஏன் இருக்கலாகாது?

தினசரி இரவு இரண்டு பைல்பீன்ஸ் தவருமல் உட்கொண்டுவந்தால் மேலான ஆரோக்யம் பல வருஷ யௌவன உணர்ச்சி பெறலாம். பைல்பீன்ஸ் சுத்த தாவர சத்து. ஜீரண சக்தியை அபிவிருத்தி செய்து, ரத்தத்தை சுத்தி செய்து, உணவிலுள்ள அனுவசியமான பொருள்களை வெளிப்படுத்தும். இதனுல் ஆரோக்யம் அபிவிருத்தியடைந்து, சருமம், மெலிவாகவும் யௌவனமாகவும், வசீகரமாகவும் இருக்கும்.

எல்லா மருந்து வியாபாரிகளும் பைல்-பீன்ஸ் பாட்டில் ரூ. 1 வீதம் விற்கின்றனர்.

BILE BEANS

பைல்பீன்ஸ் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியை அளிக்கும்.